
# சிபிகள்



மேலாண்மை பொன்னுச்சாமி

கங்கை
புத்தக
நிலையம்

# சிபிகள்

மேலாண்மை பொன்னுச்சாமி

கங்கை புத்தகநிலையம்

13, தீனதயாளு தெரு

தியாகராயநகர், சென்னை-600 017

முதற் பதிப்பு 1987
இரண்டாம் பதிப்பு 1994
மூன்றாம் பதிப்பு (கங்கை) டிசம்பர், 2002



உரிமை ஆசிரியருக்கு


**விலை : ரூ. 30.00**


| | |
|---|---|
| TITLE | SIBIGAL |
| AUTHOR | MELANMAI PONNUSAMI |
| LANGUAGE | TAMIL |
| SUBJECT | SHORT STORIES |
| EDITION | THIRD EDITION, DECEMBER, 2002 |
| PAGES | 136 |
| PUBLISHED BY | GANGAI PUTHAKA NILAYAM<br>13, Deenadayalu Street<br>Thyagaraya Nagar.<br>Chennai - 17 |
| Price | Rs. 30.00 |

Typesetting : AMARAVATHI
W. Mambalam, Chennai - 33. Ph : 24 85 04 84

Printed by **SHAKTI PRINTERS**

# உள்ளே...

மூன்றாம் பதிப்பிற்கான முன்னுரை

ஒரு முகவுரை - கி. ராஜநாராயணன்

எடைக்கல் - கவிஞர் பாலா

நன்றியுரை - மேலாண்மை பொன்னுச்சாமி

| | | |
|---|---|---|
| 1. | சுயம் | 11 |
| 2. | சிபிகள் | 25 |
| 3. | உள் மனிதன் | 42 |
| 4. | ஜீவிதத்தின் உள்வட்டம் | 58 |
| 5. | மாயப்பறவை | 71 |
| 6. | கண்ணா மூச்சி | 85 |
| 7. | நிஜத்தின் நிறம் | 94 |
| 8. | அணைய மறுக்கும் நெருப்பு | 113 |
| 9. | கூரை | 125 |

# மூன்றாம் பதிப்பிற்கான முன்னுரை

இந்த 'சிபிகள்' சிறுகதைத் தொகுப்பு இப்போதும் எனக்குப் பிடித்திருக்கிறது. இதன்மீதுள்ள ஈர்ப்பு அப்படியே யிருக்கிறது.

இந்த நூலுக்கான மதிப்பும், மரியாதையும் வாசகர் களிடையே உயிர்ப்போடு இருக்கிறது. 'உள் மனிதன்' 'கொலை' போன்ற கதைகள் பற்றிய பாராட்டுக்கடிதங்கள் வந்த வண்ணம் இருக்கின்றன.

மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் அஞ்சல் வழிக்கல்வியில் பி.ஏ., பி.எஸ்சி. போன்ற இளங்கலை மாணவர்களுக்கான பாடநூலாக இருந்தது.

இந்த நூல் மூன்றாம் பதிப்பு காண்பது, இதன் தகுதியை உணர்த்துகிறது.

இந்த நூல்தான், விரிந்து பரந்த வாசகர் வட்டத்திற்குள் எனது பெயரை முதன் முதலாக அழைத்துச் சென்றது.

இதை மூன்றாம் பதிப்பாக வெளியிட முன் வந்திருக்கும் கங்கை புத்தக நிலையம் உரிமையாளர் திருமிகு இராமு அவர்களுக்கும், நூல் தேடித்தந்த திருவேங்கடம் கிளை நூலகர் மாயாண்டி அவர்களுக்கும் எனது நன்றிகள் என்றென்றும் உரித்தாகும்.

நன்றி!

மேலாண்மறைநாடு
இராஜபாளையம் வழி
விருதுநகர் மாவட்டம்
626127

என்றும் உங்கள்
**மேலாண்மை. பொன்னுச்சாமி**

# ஒரு முகவுரை

எழுத்தாளர் மேலாண்மை அவர்களின் சிறுகதைத் தொகுதிக்கு ஒரு முகவுரை தருவதில் உள்ளபடியே எனக்கு ரொம்ப சந்தோஷம்.

அன்பான, பிரியம் நிறைந்த ஒரு மனதிலிருந்துதான் ஆரோக்கியமான எழுத்து பிறக்கமுடியும். மனித கஷ்டங்களைக் கண்டு உருகுகிற மனசு அவரது. நொய்ந்த மக்களுக்காக எழுப்பும் குரல் அவருடையது.

அவர் வாழும் மண்ணில் மக்கள் படுகிற துன்ப துயரங்கள் அவருடைய மனசை வெகுவாக பாதிக்கிறது.

''இவர் துயரினைத் தீர்க்க ஓர் வழி இலையோ...'' என்று எட்டையபுரத்தான் அன்று ஏங்கியது, அந்த நிலைமை அதிகமா இருக்கிறதே தவிர குறைந்தபாடில்லை இன்றும்.

எழுத்தாளன், அவன் வாழ்கிற சூழ்நிலையிலுள்ள அவன் மக்களைப்பற்றி எழுதினால்தான் அது மெய்யாக இருக்கும். எழுத்தாளர் மேலாண்மை அவர்கள் அப்படி எழுதுகிறவர்களில் ஒருவர். அவ்ரது எழுத்து தமிழ் இலக்கியத்துக்கு ஒரு பங்கு சேர்க்கிறது.

இந்த இளைஞர் தனது எழுத்துக்காக பல பரிசுகள் பெற்றவர். எங்களுக்கு இதெல்லாம் பெருமைதான் என்றாலுங்கூட இந்த மக்களின் தாழ்நிலை மாறி என்று இவர்கள் உயர்நிலை அடைகிறார்களோ அன்றுதான் எமக்கு மகிழ்ச்சியான நாள்.

**கி. ராஜநாராயணன்**

''பாரதி வீடு''
கே.கே. நகர்,
சென்னை - 78

# எடைக்கல்

**வீ**ட்டுக் கதவைத் தாண்டித்தான் வெளி உலகிற்குப் போக வேண்டுமென்றில்லை.

மெல்ல ஜன்னலைத் திறந்து பார்த்தவுடன் மனது வெளியில் சென்று உலகத்துடன் தோழமை கொண்டு விடுகிறது.

ஒரு நல்ல சிறுகதையும் ஒரு ஜன்னல் மாதிரித்தான்.

— வாழ்க்கையை ஒரு நொடியில் நம் முன் கொண்டு வந்து போட்டு விடுகிறது.

தமிழில் இன்று நல்ல சிறுகதை எழுத்தாளர்கள் உள்ளனர். அவருள் மேலாண்மை பொன்னுச்சாமிக்கும் இடம் உண்டு என்பதை நான் மிகவும் அண்மையில்தான் அறிந்து கொண்டேன். ஒருவேளை இந்தக் கதைகள் என் கைகளில் கிடைத்திராவிடில் முத்திரைச் சாபம் பெற்று மூலையில் கிடத்தப்பெற்ற நிழலடித்த செடியாகக் கருதி அவரைத் தவற விட்டிருப்பேனோ என்னவோ!

இளங்காலைக் கிரணங்களைப் போல் இனிதாகவும், மலைக் காற்றுபோல் ஆரோக்கியமாகவும், அறிந்த மனிதர் களின் நெருக்கத்தைப் போல் சுகமாகவும் உள்ள ஒரு உலகில் நுழையும் நிறைவு இந்தக் கதைகளில் கிடைக்கிறது.

இன்றைய வாழ்நிலைக் களத்தில் மனிதன் தன் இயல் புணர்ச்சியை இழந்துவிட்டான். இழந்த மனித உணர்வைத் தேடித் தோழமை கொள்ளும் வேட்கை நிறைந்த உலகை பொன்னுச்சாமியின் கதைகள் தேடிச் செல்கின்றன. மனித உணர்வு சிலநேரங்களில் தடைகளைத் தாண்டி வெள்ளமெனப்

பெருக்கெடுத்து நம் இதயத்தை ஈரப்படுத்துவதை இந்தத் தொகுப்பில் உள்ள பல கதைகள் பேசுகின்றன. வாழ்க்கைக் கசப்புகளுக்கும் பொறுப்புகளுக்குமிடையே எப்போதாவது கிளரும் இந்த நேய உணர்வும் மனிதச் சிலிர்ப்பும் இல்லாது போய்விட்டால் நம் வாழ்க்கை என்ன கதிக்கு ஆகிவிடும் என்ற விழிப்புணர்ச்சியையும் இந்தக் கதைகள் நல்குகின்றன.

பொன்னுச்சாமி கதைகளின் உலகம் இயக்கமுள்ள உலகம். கஷ்டங்களும் சிறுமைகளும் நிறைந்த உலகம். வறுமையாலும் ஏமாற்று வித்தைகளாலும் மிதிபடும் மனிதர்கள் நிறைந்த உலகம். எந்திரமயமாகும் வேட்கையில் பழமையின் நேர் சீர்களைத் தொலைத்துவிட்ட உலகம். மனித உணர்வற்ற இழிமக்கட்குத் தம் உழைப்பை உறிஞ்சக் கொடுத்துவிட்டு அறியாமையில் கிடக்கும் மனிதர்களின் உலகம். உரிமைகளை அறியாது சலுகைகளை உச்சிமோந்து பரவசப்படும் பேதைப் பெண்களின் உலகம்.

ஆனாலும் எல்லாம் போய்விடவில்லை என்று ஆறுதல் அளிக்கும் வகையில் அவ்வப்போது கருணை காட்டவும், பாசம் சொரியவும், பரிந்து பேசவும், ஆதரவு தரவும், உதவி செய்யவும் முன் வரும் மனிதர்கள் எதிர்ப்படும் உலகமும் ஆம்.

இந்த உலகை விரித்தும் குறுக்கியும் - கதை மாந்தரை இடவெளி எல்லைக்குள் பரப்பியும் - உயர்த்திக் குறுக்கி வடிவ நிறைவு பெற்றவராக்கியும் இயக்கி - நிறுத்தி உயிர்ப்பு அளித்துக் காட்டியும் - ஒரு நிஜ உலகை உருவாக்கும் எழுத்து பொன்னுச்சாமிக்குக் கிடைத்திருப்பது மகிழ்ச்சிக்குரியது.

இவை எல்லாவற்றையும் விட உரத்த குரலில் முழக்காமல் உரமாக உணர்த்துதல் நன்று என அவர் தேர்ந்தது வாழ்த்திற்குரியது.

புதுக்கோட்டை பாலா

# நன்றியுரை

முதற்தொகுப்பு 'மானுடம் வெல்லும்' இரண்டாவதாக வந்தாலும், சிபிகள் தொகுப்பு, தர அடிப்படையில் முதலாவது.

ஜனரஞ்ஜனி இதழ் நடத்திய சிறுகதைப் போட்டியில் முதற்பரிசு வென்ற 'சுயம்' - கல்கி இதழ் (1986) சிறுகதைப் போட்டியில் முதற் பரிசையும், விரிந்து பரந்த வாசகர்களின் பாராட்டையும் பெற்ற 'சிபிகள்' - இலக்கியச் சிந்தனை பரிசையும், எழுத்தாளர் இந்துமதியின் பாராட்டையும் பெற்ற 'ஜீவிதத்தின் உள்வட்டம்' - போக்குவரத்துத் தொழிலாளிகளின் உயர் பண்பை யதார்த்தமாய் கண்டுணர்ந்து சித்தரித்த 'உள் மனிதன்-'

இத்தொகுப்பின் மீது எனக்கு இப்போதும் தீராக்காதல். ஒரு வட்டத்திற்குள் மட்டுமே அறியப்பட்ட எழுத்தாளனாக இருந்த என்னை, பரந்த தமிழ் வாசகப் பரப்பிற்குள் அழைத்துச் சென்ற தொகுப்பு இது. பெருமையும் கௌரவமும் பெற்றுத் தந்த இந்தத் தொகுப்பின் மீது... ஒரு தாய்க்கு தலைப்பிள்ளை மீதுள்ள பாசம், எனக்கு.

வாழ்க்கை என்னைப் போதுமான அளவுக்கு வறுத்தெடுத்திருக்கிறது; வாட்டி வதைத்திருக்கிறது. மனிதச் சந்தடியில் அடையாளமற்று புதைத்துவிட தாட்சண்ய மற்று எத்தனித்திருக்கிறது.

வாழ்க்கையோடு நான் நடத்திய முடிவில்லாத மல்லுக்கட்டில் - என் அடையாளத்தை கண்டெடுத்து நிரூபணம் செய்து நிலைநாட்டுகிற போராட்டத்தில் - இன்னும் நான் நம்பிக்கையுடன் களத்தில் இருக்கிறேன்.

பலவிதமான பரிசுகளையும், விருதும் பெற்று, 'கல்கி', 'ஆனந்தவிகடன்' போன்ற கௌரவமிக்க பிரபல இதழ்களில் தொடர்கதைகள் எழுதுகிற அளவுக்கு அடையாளம் பெற்றிருக் கிறேன்.

எனது உண்மையும் சத்தியமுமான இலக்கியக் கொள்கையையோ - அதை நிர்ணயித்த மார்க்ஸீய தத்துவ நோக்கையோ - மக்கள் நலன் சார்ந்த பொதுவுடமை இயக்கத்துடனான நேசமிக்க உறவையோ மூடி மறைத்துக் கொள்ளவுமில்லை; ஒதுக்கிவைக்கவுமில்லை.

இன்றும் நான் நம்புகிறேன்; மோசமாகிப் போன இன்றைய சமூகச் சூழலிலும் உறுதியுடன் நம்புகிறேன்; 'கலைத்தன்மை குன்றாத மக்கள் விடுதலைக்கான முற்போக்கு இலக்கியப் படைப்புகள், வெற்றி பெறுவது நிச்சயம்; இதுவே சரித்திரத்தின் விதி' என்று.

மிகவும் பின்தங்கிய கிராமச் சூழலிலுள்ள வாழ்க்கை யில் - மிகக் குறைந்த கல்வி வாசனையில் - ஏழ்மையான குடும்பத்தில் தேங்கி நின்ற எனக்குள்... ஓர் இலக்கியப் படைப் பாளி தோன்றி மலர்வதற்கான எத்தகுதியும் இருந்ததாகத் தோன்றவில்லை.

ஆயினும்,

வாழ்க்கையின் உள்-வெளி மர்மம் நிறைந்த அனுபவங் களையும், கிராமத்துப் பாமர விவசாயிகளின் ஈரவலிமையும், சத்திய பலமுமிக்க மொழி வளத்தையும் நான் கற்றுத் தேர்வதற்கு எனக்குக் கற்றுத் தந்த முற்போக்குச் சிந்தனை தான்... நிகழ்வாழ்வின் கொடூரங்களை எதிர்த்துப் போரிடு வதற்குரிய ஆத்ம பலத்தையும், போர்க் குணத்தையும் வழங்கியது.

இந்தச் சின்னஞ்சிறு விதைக்குள் ஒரு விருட்சம் இருக்கிற நிஜத்தைப் புரிந்துகொண்டு, எனது ஆரம்ப காலப் படைப்பு முயற்சிகளுக்கு நீரூற்றி... சோர்வடைந்து துவள்கிற போதெல்லாம் தைர்யமூட்டி, சுதாரித்து துள்ளுகிற போதெல்லாம் லகான் போட்டு என்னை நெறிப்படுத்தி பாசத்தோடும் தோழமையோடும் என்னை வார்த்தெடுத்த தோழர் எஸ்.ஏ.பெருமாள் அவர்களை என்னுயிருள்ளளவும் மறக்க இயலாது.

எனது சிறுகதைகளை துவக்க நாளிலிருந்து பிரசுரித்து பாதுகாத்துப் போற்றிய 'செம்மலர்' ஆசிரியர் கே. முத்தையா, ஓவியர் தி. வரதராசன், மீரா பதிப்பகத்தார், கவிஞர் கந்தர்வன், முத்துநிலவன், கி. ராஜநாராயணன், கவிஞர் பாலா, வணக்கத்துக்குரியவர்கள்.

சிபிகள் நூலைத் தேடிக் கண்டுபிடித்து கொடுத்துதவிய காமராசர் மாவட்ட த.மு.எ.ச. செயலாளர் எழுத்தாளர் ச. வெங்கடாசலத்திற்கு விசேஷ நன்றிகள்.

எனது படைப்புகளையெல்லாம் தோளில் போட்டு நாடெல்லாம் விற்றும் - படித்துவிட்டு உடனுக்குடன் விமர்சனமும், பாராட்டும் வழங்கி - தன் சொந்தப் படைப்பாளனாக என்னை மதிக்கும் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்க நண்பர்கள் சகலருக்கும் எனது அன்பும் தோழமையுமான வணக்கங்கள்.

நன்றி!

மேலாண் மறைநாடு - 626 127 என்றும் உங்கள்
காமராசர் மாவட்டம் **மேலாண்மை. பொன்னுச்சாமி**

# சுயம்

பெற்ற தாய்க்குப் பிள்ளை மீது பாசம் என்பது அதிசயமா! ஆனால், பூவனத்துக்கு முத்து என்றால் உயிர். மூத்தவள் ராஜியை விட, முத்து மீது கூடுதல் பிரியம். வித்தியாசமான விசேஷமாக ஒரு பிடிப்பு. ஆறு வயசு முத்து, பூவனத்தின் அண்ணன் சாயல். அதுதான், அந்த விசேஷமான பாசம்.

பூவனம் பாவாடைச் சிறுமியாக இருக்கும்போது, மாட்டு வண்டியில் பருத்தி மருகைகளை பாரமேற்றி விட்டு, கயிற்றை இழுத்துக் கட்டுகிற போது, பாரத்தோடு வண்டி வாரி, அதற்குள் சிக்கி நசுங்கிச் செத்துப் போன அண்ணனின் அதே அச்சு. அதே கண்கள்... அதே நெற்றி... சுபாவம் கூட அதுதான்.

அண்ணனின் மறுபிறப்பு. சின்ன வயது இழப்புச் சோகத்தை இட்டு நிரப்பிய பொக்கிஷம். மனசுக்கே விளங்காத மன ஆழத்தில் உறைந்து கிடக்கிற உணர்வுகளுக்கு உயிர் தருகிற உயிர் வடிவம்.

முத்துவைப் பார்க்கும் போதெல்லாம் அவளுக்குள் ஒரு உல்லாசம். ஆர்வப் பரபரப்பு. அளவுக்கு மிஞ்சிக் கொஞ்சத் தூண்டுகிற ஏதோ ஓர் உத்வேகம்.

சிந்திச் சிதறிக் கொண்டு சில்மிஷங்களோடு சாப்பிட்டுக் கொண்டிருந்த மகனை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள். வேலைக்குப் போகணும் என்பதைக் கூட மறந்தவளாக... அவள். அவளது மனசின் உலகத்தில்...

''அம்மா... நா எருமையை அவுத்துவுடப் போறேம்மா... வெளியிலிருந்து ராஜியின் சப்தம், அவளை இங்கு கொண்டு வந்தது.

''ஆங்... சரி சரி, பாத்து, அடியே, மாட்டை ஒழுங்கா மேச்சுட்டுவா. செனைமாடு. வேற மாடு ஏதாச்சும், முட்டி கிட்டி விடாம, பாத்து மேய். வேற எவன் புஞ்சையிலேயும் மேய விட்டுராதேடி... சும்மாவே நமக்குப் பொல்லாத நேரம். அதுவேற வம்பு. மதியம் திரும்பி வந்து தம்பியை பார்த்துக்கடி...''

எதிரொலி இல்லை. அவிழ்த்து விட்டவுடன் ஓடிய மாட்டைத் தொடர்ந்து வீதிக் கோடிக்குப் போய் விட்டாள், ராஜி.

''முத்து, பள்ளிக்கூடம் போறீயாடா?''

''ம்''

''அம்மா வேலைக்குப் போய்ட்டு வாரேன். என்ன கண்ணு. நல்லா படி. யார் கூடயும் சண்டை கிண்டை போடாதே. இந்தா பத்து பைசா. கடையிலே ஏதாச்சும் வாங்கிக்க. என் செல்லம்?''

சாப்பிட்டு முடித்த மகனுக்கு மேல் சட்டையைப் போட்டுவிட்டாள். புத்தகம், சிலேட்டுப்பையை எடுத்துத் தந்தாள்.

''போறீயாடா கண்ணு?''

''ஆகட்டும்மா...''

என்ன நினைத்தாளோ... மகனை வாரியணைத்து, கண்டமேனிக்கு முத்தமிட்டாள். அர்த்தம் விளங்காத வார்த்தைகளை மிழற்றிக் கொஞ்சினாள். முத்து, விளங்காமை யுடன் பூவனத்தைப் பார்த்தான். அவள் முகம் பூரித்து மலர்ந்து கிடந்தது.

வீதியில் நடந்து செல்லும் முத்துவின் அழகைப் பார்த்த அவள் மனசுக்குள் ஆயிரம் பூவனங்கள்... ஒளியும் மணமும் துலங்குகிற வண்ண ஜாலப் பூவனங்கள்...

பெருமூச்சோடு கதவைச் சாத்தினாள். களை சுரண்டியோடு, தூக்குச்சட்டியோடு பூவனம் கூலி வேலைக்குக் கிளம்பினாள்.

நாராயணசாமி நாயக்கர் மிளகாய்த் தோட்டத்தில் களை வெட்டப் போகணும். 'பொழுதாயிடுச்சு'ன்னு கூப்பாடு போடுவாகளோ...

நடையை எட்டிப் போட்டாள். தெருவுக்குள் விழுந்து, ஒரு சந்தைக் கடந்து, மற்றோர் வீதியில் நுழைந்து, ஊர்க் கீழ்கோடிக்கு வரும்போது, காலை வெய்யில் முகத்தில் சுள்ளென்று விழுந்தது.

'அடியாத்தே... பொழுது உசக்கே வந்துருச்சே...' மனசின் பதைப்பு, கால்களுக்குப் புரிந்தது. முன்னைவிட வேகமாக இயங்கின. ஒரு மஞ்சள் கட்டிடத்தைக் கடந்தாள்.

விவசாயிகள் கூட்டுறவு நாணயச் சங்க அலுவலகம், இந்த ஊர் உழவர்களுக்கு விவசாயத்திற்குப் பணக்கடனும்,

உரக்கடனும் கொடுத்து உதவியது என்பதெல்லாம், நொறுங்கிப் போன குடும்பக் கிழவனின் நினைவைப் போல ரொம்பப் பழைய சமாச்சாரம். இப்போதெல்லாம்... அது வெறும் ரேஷன் கடைதான். சீனி, மண்ணெண்ணை... அரிசி.

'அரிசி ரேசன்லே போட்டு மாசம் ரெண்டாக போகுதே... அதுக்குப் பெறகு போடலியே... ஏன்? கடையிலே அரிசி கேட்டா கிலோ நாலு நாப்பதுங்கிறான். அஞ்சு ரூவாய்க்கு கூலி வேலை செஞ்சு பொழைக்குற நம்மளை மாதிரி ஏழைப் பட்டதுகளுக்கு அந்த விலைக்கு வாங்கவா முடியுது? வேக மாட்டாத செவப்பரிசியாயிருந்தாலும்... ரேசன் அரிசின்னா... அது ஒரு மாதிரிதான்... போட்டா நல்லதுதான். போட மாட்டேங்குறாகளே...''

நினைவுகள் தன்போக்கில் கூடு கட்டிக் கொண்டிருக்க... கால்கள் திசைநோக்கித் தன் போக்கில் நடை போட்டுக் கொண்டிருந்தன.

நிறை நிறையாகப் பிடித்து களை வெட்டு சாய்ந்து கொண்டிருந்தது. மதிய வெய்யிலைப் பொருட்படுத்தாமல் பெண்கள் பேச்சும், சிரிப்புமாய், கேலியும் கிண்டலுமாய், ஊர்ப் பொரணிகளைப் பேசிக்கொண்டு களை வெட்டினர். இடுப்பு ஆற்றுவதற்கு நிமிர்ந்த ஒரு பெண், ''சொஸைட்டியிலே கூட்டமாயிருக்கே'' என்றாள்.

பூவனம் நிமிர்ந்து பார்த்தாள்.

''ஆமாடி... ஆணும் பொண்ணுமா நெறையா நிக்குறாகளே!''

''முந்தா நாள் லாரியிலே அரிசி மூட்டை வந்து எறங் குச்சு. கிளார்க்கு இன்னைக்கு வந்து அரிசி போடுவாரோ... என்னவோ''

''இருந்தாலும் இருக்கும்... காலையிலே கூட... அரிசி எடை போடுற கணேசன், 'கிளார்க் வந்தாலும் வருவாரு. அரிசி போடுவாரு'ன்னு சொன்னான்.''

பூவனத்துக்குள் ஒரு மெல்லிய திகில்...

''ஐயய்யோ... ரேசன்லே அரிசி வாங்கணுமே. கையிலே யிருந்த இருவது ரூவாயை கடைப் பாக்கிக்கு காலையிலே தானே குடுத்தேன். ரேசன்லே அரிசி போடுவாகன்னு தெரிஞ் சிருந்தா... அந்த ரூவாயை குடுக்காம வைச்சிருக்கலாமே... இப்ப யாரு கிட்டே போய் கைமாத்து கேக்குறது...?''

''வேலை முடிய நாலு மணியாயிடுமே. அதுக்குப் பிறகு வீட்டுக்குப் போய்... வீடு வீடுக்கு கைமாத்துக்கு அலைஞ்சு... நேரமாயிடுமே... அது வரைக்கும் ரேசன் போடுவாகளா? மூடிட்டுப் போயிடுவாகளோ...''

அச்சுறுத்துகிற நினைவுகள். பூவனத்திற்குள் பயம் கலந்த கவலைகள். ஒன்றை முந்திக்கொண்டு ஒன்றாக எண்ணங்கள் ஓட்டம். மனசெல்லாம் ஏதேதோ எண்ணங்கள் புகையாக அடைத்துக் கொள்ள - இயங்கிக் கொண்டிருந்த களைசுரண்டி ஒரு மிளகாய்ச்செடியை 'சதக்' கென்று வெட்டிச் சாய்த்து விட்டது.

'அட' என்று துணுக்குற்றாள்.

'புஞ்சைக்காரி பாத்தா... நாலு வார்த்தை நாற வார்த்தையா பேசுவாளே...' பயத்துடன் அவசரமாகச் செடியைப் புழுதிக்குள் அமுக்கி, காலால் மண்ணைத் தள்ளிவிட்டு, அடுத்த பாத்திக்குள் பிரவேசித்தாள். குனிந்த உடம்பு நிமிர நேரமில்லை. இடுப்பு கடுக்கிறது. உள்ளங்கை கள் ரத்தம் கன்றி வலியெடுக்கிறது.

பசலிக் கீரையையும், கோரப் புல்லையும் புழுதியோடு வெட்டியெறிந்து கொண்டு பூவனம் முன்னேறினாள், சக பெண்களுக்கு ஈடாக. மனசுக்குள் ரேசன்... அரிசி... யார்கிட்டே ரூவா கேக்குறது என்ற நினைவோட்டங்கள்.

நம்பிக்கைகள்... சந்தேகங்கள் இரண்டும் மாறி மாறி மனசில் ஊசலாடி, கடைசியில் விதியை நொந்து முணு முணுத்துக் கொண்டாள்.

'அட இழவே, ரெண்டு மாசம் கழிச்சு ரேசன்லே அரிசி போடுதாக. அதையும் வாங்கக் குடுத்து வைக்கலியோ... முடியாமப் போயிடுமோ...'

உச்சியிலிருந்து பொழுது மேற்கில் இறங்க இறங்க... பூவனத்துக்குள் பதைப்பு. மனசுக்குள் ஏதேதோ மயக்கங்கள்... சஞ்சலங்கள்...

வேலை முடிந்தவுடன் வழக்கம்போல் மாட்டுக்கு புல் அரிக்கவில்லை. கொழை ஒடிக்கவில்லை. வெருளிப் பாய்ச்சலில் (குடையைக் கண்டு மாடு வெருண்டு பாய்கிற வேகம்) ஊருக்குள் வந்தாள். சுரண்டியையும், தூக்குச் சட்டியையும் போட்டுவிட்டு தாகத்துடன் தண்ணீரைக் குடித் தாள். கொஞ்சம் தெம்பு.

நாராயணசாமி நாயக்கர் வீட்டுக்கு வேகமாகப் பாய்ந்தாள். அந்தப் பரபரப்பிலும்... மனசு முத்துப் பயலைத் தேடிப் பருந்துப் பார்வையாகப் பார்த்தலைந்தது.

'இன்னைக்கோட எட்டுநா சம்பளம் தரணும். நாப்பது ரூவா. இதை குடுத்தாலாச்சும் போதும். ஒரு சீட்டுக்கு எட்டு கிலோ அரிசி. கிலோ ரெண்டு ரூவா எழுவது பைசா. மொத்தம் எம்புட்டு ஆகும்? அந்தா இந்தான்னு இருவத்தி அஞ்சுக் குள்ளே வருமா...'

மனசுக்குள் கணக்குகள்... நம்பிக்கைகள்... பிரார்த் தனைகள்...

நாயக்கர் வீட்டில் மகள்தான் இருந்தது.

''என்ன பூவனம்?''

''ஐயா இல்லியா? சம்பளம் வாங்கணும். ரேசன் வாங்கணும்.''

''சங்கரன் கோவிலுக்கு பணம் வாங்கப் போயிருக்காக. ராத்திரி வருவாக. காலையிலே வந்து வாங்கிக்கோயேன்...''

பூவனத்துக்குள் ஒரு பூச்சி ஊர்ந்தது. நம்பிக்கையின் கொழுந்துகளை அரிக்கிறது.

''அதுக்கில்லேம்மா... ரேசன் வாங்கணும். வேற துட்டு இல்லே. இதை நம்பித்தான்-''

''சரி, இப்ப என்ன செய்ய முடியும்? ஐயா வந்தாத்தானே எதுவும் நடக்கும்.''

முற்றுப்புள்ளி கருப்பாக விழுந்து விட்டது. வெட்டுப் பட்ட மிளகாய்ச் செடியாக முகம் வாடிப் போனாள் பூவனம். ஆனாலும், அசந்துவிடவில்லை. ஏழ்மையின் தாழ் மட்டத்தி லும் வாழ்வோடு மல்லுக் கட்டுகிற பழகிப்போன பரம்பரை வைராக்யத்தோடு... கடைக்கு ஓடினாள்.

''என்னம்மா, தம்பி இல்லியா?''

''என்ன, அவுகளைத் தேடுதீக?''

''காலையிலே இருபது ரூவா குடுத்தேன். அது இப்ப வேணும். ரேசன் வாங்கணும். பொழுதாவுது...''

''அவுக ராசபாளையம் சரக்கு வாங்கப் போயிருக்காக. ஆமா... நீங்க கடைப் பாக்கிதானே குடுத்தீக...?''

''பாக்கிதான். இப்ப ரேசன் வாங்கணும். அவசரம்''

''ம்ம்... அப்படியா! அவுக வரட்டும்''

கடைக்காரியின் குரலிலிருந்த அலட்சியமும் ஏளனமும் பூவனத்துக்குள் ஊசிகளாகப் பாய்ந்து தைத்தன. கண்ணுக்குத் தெரியாத மாயச் சாட்டையின் சுளீரிடுகிற சுழற்சி. மனசுக்குள் ரத்தம். வலி.

கண்ணுக்குள் முட்டி உறுத்துகிற கண்ணீரை தன்மானத்துடன் விழுங்கிக் கொண்டாள். மனசு கிடந்து அடித்துக் கொண்டது. ஏங்கியது. ரேசன் வாங்க முடியாதோ... ரூவா கெடைக்காதோ...

தெருவில் கன்றுகளுடன் எருமைகள் வரத்தொடங்கி விட்டன. பால் பீய்ச்சி ஊற்றப் போகிறார்கள். மணி அஞ்சாகிப் போச்சே... கிளார்க் கதவைப் பூட்டிட்டுப் போயிடுவாரோ...

பதைப்பு... சோர்வு... பரபரப்பு... மனசு தாளாமல் திணறியது.

பால் சொஸைட்டி செக்ரட்டரியிடம் ஓடினாள் பூவனம். மனசு முத்துவைக் கூட மறந்துவிட்டது.

''பால்ச்சாமி, ஒரு இருபது ரூவா குடு. பாலூத்துறதுலே புடிச்சுக்கோயேன்.''

''அதெப்படி? நீங்க ஊத்தற பாலுக்கும் மேலே வெதையும் புண்ணாக்கும் வாங்கிட்டீக. இன்னும் எந்த ரூவாயிலே போயி பிடிக்க?''

''ரேசன் வாங்கணும் பால்ச்சாமி, அவசரம்...''

''உங்க அவசரத்துக்கு நா என்ன செய்ய?''

பூவனத்துக்குள் ஆடிக் கொண்டிருந்த சுடர், பொசுக் கென்று அணைந்துவிட்டது. 'இனி யார்கிட்டே போய் கையேந்துறது? அவுக இருந்திருந்தா... ஓடியாடி, நாலுபேரை பாப்பாக. கேப்பாக. நா தாலியறுத்த முண்டை. நாதியத்தவ. யாருகிட்டே கேக்குறது? யாரு குடுப்பாக?''

விரக்திக்குள் விழுந்த மனசு, நைந்து துவண்டு விட்டது. எதிரில் முழுக்க இருட்டு, ஏகமாய் இருட்டு.

கைத்துப் போய், கசிந்து போன மனசின் அழுகை, கண்ணுக்கு வரத்துடித்துக் கொண்டிருந்தது. முட்டிக் கொண்டு வந்தது. கையறு நிலைமையும், கதியற்ற தன்மையும் அவளை உள்ளுக்குள் வதைத்துக் கொண்டிருந்தது. எங்கோ வனாந்தரத்தில் - மனித வாடையில்லாத காட்டுப் பயங் கரத்தில் - சிக்கிக் கொண்டதைப் போன்ற ஒரு அவல உணர்ச்சி!

மஞ்சள் வெய்யிலையும், மேற்குத் தொடர்ச்சி மலை முதுகை உரசிக் கொண்டிருக்கும் சூரியனையும் பீதியுடன் பார்த்தாள்; 'கிளார்க் பூட்டிட்டுப் போயிடுவாரே.'

சோர்ந்து களைத்துப்போன மனசு. ஓய்வுக்கு ஏங்கிய கால்கள். கடுப்பாய் கடுக்கிற இடுப்பு. முத்துவை நினைக்க நேரமில்லை.

'போகவே கூடாது' என்று நினைத்திருந்த அக்கா வீட்டுக்குள் ஓடினாள். வேறு புகலில்லை.

அக்கா கொடுத்த ரூவாயோடு, வீட்டுக்குள் உருட்டி, புரட்டி இருப்பதைப் பொறுக்கிக் கொண்டாள். சீட்டையும்,

பெட்டியையும் தூக்கிக் கொண்டாள். எதிர்ப்பட்ட ஒருத்தி யிடம் கேட்டாள்.

''சீட்டுக்கு எம்புட்டு ரூவா ஆகுது?''

''இருபத்தோரு ரூவா அறுவது பைசா.''

எண்ணிப் பார்த்தாள். பத்து பைசா குறைந்தது.

''இந்தா பத்து பைசா. சீக்கிரமா ஓடு. நேரமாச்சு. பூட்டிட்டுப் போனாலும் போயிருப்பாரு...''

பூவனத்தின் காலுக்கு இறக்கை முளைத்துக் கொண்டது. அடித்துப் பறந்தது. உடம்பெல்லாம் இறுதி நேரப் பரபரப்பு. பூட்டியிருப்பாரோ... மனசைப் பிடித்தாட்டிய பேய்த் திகில். அந்நேரம்தான்...

புழுதி அப்பிய உடம்போடு ஓடி வந்து காலைக் கட்டிக் கொண்டான், சிறுவன் முத்து. ''யம்மா, துட்டு குடும்மா... துட்டும்மா... குடும்மா...''

''பொறுடா... அரிசி வாங்கிட்டு வாரேண்டா''

''ஆமா... துட்டுக்குடு. குடுத்துட்டுப் போ...''

அவன் சிணுங்கலைக் கேட்க இது நேரமில்லை. பெட்டியும் சீட்டுமாக 'வேகு வேகு' என்று நடக்க துவங்கி னாள். முந்திச் சேலையை பிடித்து இழுத்துக் கொண்டே.... அழுது அரற்றிக்கொண்டே....

''யம்மா... ச்சீய்... துட்டு குடும்மா... துட்டும்மா...'' என்று முத்துவும் தொல்லை செய்தான்.

அவள் அவளாக இல்லை. சூழ்நிலை உஷ்ணத்தில் சூடேறிப் போயிருக்கிறாள். மகனின் அழுகையும்

இரைச்சலும் எங்கோ தூரத்தில் கேட்பதைப் போல மனசில் ஒரு உணர்வு. அதைக்கூட தாங்காத மனசு எரிச்சலும் கோபமுமாய்...

மகனைத் திட்டக் கூட நேரமில்லாமல், பரபரப்பாய் ஓடினாள்.

அதோ மஞ்சள் கட்டிடம். கதவைச் சாத்திக் கொண்டு கிளார்க், அரிசி எடை போடுகிற கணேசனுடன் பேசிக் கொண்டு..

மனசுக்குள் குப்பென்று ஒரு தீ!

பூவனம் சட்டென்று வேகமெடுத்து விரைய, முந்திச் சேலையை பிடித்துக் கொண்டு வந்த முத்து, அந்த சுழல் இழுப்பைத் தாங்காமல் குப்புற விழுந்தான். சத்தம் போட்டு அழுதான்.

இதையெல்லாம் பார்க்க இதுவா நேரம்? ஒரே குறியில் பாய்ந்தாள். வெருளிப் பாய்ச்சல் வேகம்.

முகமெல்லாம் வேர்வைப் பெருக்கு... அப்பிய சோர்வு... கண்களில் தவிப்பு... காய்ந்து போன உதடுகள்... காலெல்லாம் களைவெட்டுப் புழுதி.

கிளார்க் பூவனத்தைப் பார்த்தார்.

''என்னம்மா...?''

''அரிசி வேணும்''

''எல்லாம் முடிஞ்சு போச்சு... காலையிலேருந்து போட்டுக்கிட்டிருக்கேன். இந்நேர வரைக்கும் வர முடியலியாக்கும்? முடிஞ்சு போச்சு''

''வேலைக்குப் போய்ட்டு வந்து... ரூவா பாத்துட்டு வர நேரமாயிடுச்சு. ஐயா... குடுங்க''

''அதெல்லாம் முடியாதம்மா... டயம் முடிஞ்சு போச்சு. நானும் ஏழு மைல் சைக்கிள் மிதிச்சு ஊருக்குப் போகணும். இப்பவே இருட்டிப் போச்சு. போம்மா... அடுத்த வாட்டி வாங்கிக்க.''

விழுந்த முத்து அப்போதுதான் எழுந்து அவளிடம் வந்து சேர்ந்தான். அழுகையோடுதான்.

பூவனம் முகம் கறுத்துப் போனாள். இத்தனைப் பாடுகளுக்குப் பிறகும் ஏற்பட்டுவிட்ட தோல்வியை ஏமாற்றத்தை - இழப்பை ஜீரணிக்கமாட்டாமல் துவண்டாள். கண்களில் குத்துண்ட பறவையின் வேதனை. குற்றுயிராக துடிக்கிறதுடிப்பு...

மனசெல்லாம் தவிக்கிற எதிர்பார்ப்போடு கிளார்க் முகத்தைப் பார்த்தாள். அவர் திருப்பிக் கொண்டார். கதவை இழுத்துப்பூட்டத் துவங்கினார்.

அந்நேரம்... முத்து அவளின் கால்களைப் பிடித்துக் கொண்டு வீலென்று அழுதான். அவள் மனசின் கைப்பு, கசப்பு, தோல்வி, ஏமாற்றமெல்லாம் ஒன்று திரண்டு எரிச்சலாக வடிவமெடுக்க... பார்வை தாழ்த்தி மகனைப் பார்த்தாள்.

அவனை இடது கையால் விருட்டென்று இழுத்தாள். எரிந்த மனசு வலது கையில் இறங்க... அந்தப் பிஞ்சின் முதுகிலும் கன்னத்திலும் மடேர் மடேர் என்று அறைந்தாள். பூவனம் பூவனமாக இல்லை. தீவனமாகி விட்டிருந்தாள். முத்து துள்ளித் துள்ளி விழுந்தான். துடித்தான்.

''சனியனே... வந்து வந்து காலைக்கட்டிக்கிட்டு... நானே பரிதவிச்சுக்கிட்டிருக்கேன்-'' உதடுகள் புலம்ப... கை மாறி மாறி விளையாட, அந்தப் பறவைக் குஞ்சு துடித்துக் கதறியது. பூவனத்திடமிருந்து பிய்த்துக் கொண்டு, உதைபட்ட பந்தாக ஓடினான். கிலி பிடித்துப் போய் திரும்பித் திரும்பி பார்த்துக் கொண்டே ஓடினான். கிளார்க் திகிலடைந்து போனார்.

''ஏம்மா... நீயெல்லாம் பெத்த தாய் தானா? புள்ளையை இப்படிப் போட்டு ஏம்மா கொல்லுறே?''

''ஏங் கொடுமை''

''நேரத்தோட அரிசி வாங்குறதுக்கில்லாம... புள்ளையைப் போட்டு இப்படி அடிக்கிறீயே... பாவம், பச்சைப் புள்ளை! அவனுக்கென்ன தெரியும்... கணேசா, இந்தம்மாவுக்கு அரிசியைப் போட்டனுப்பு. கொண்டாம்மா ரூவாயை...''

வனாந்திர அவலத்தில் புதைந்து கிடந்த பூவனம் வீடு திரும்பும்போது அவள் மனம், வெள்ளம் வடிந்த ஆற்று மணலைப் போல சுத்தமாக - பூர்ண நிறைவாக இருந்தது. நீண்ட மனச் சோதனைகளுக்குப் பிறகு கிட்டிய சின்ன வெற்றி, ரொம்ப ஆறுதலாக இருந்தது. கொஞ்சம் குதூகலமாகக் கூட இருந்தது.

மனசுக்குச் சிறகு முளைத்துக் கொண்டது. மேகமில்லாத நிர்மலவானத்தில் நிச்சிந்தையோடு சிரமமில்லாமல் மிதந்தது.

வீட்டை நெருங்கினாள். திண்ணை தெரிந்தது. மனசு பகீரென்றது. கிட்ட வந்தாள். விரலைச் சூப்பிக் கொண்டு முத்து தூங்குகிறான். கன்னத்தில் கண்ணீர்க் கறை. தூக்கத்திலும் ஏங்கி ஏங்கி விம்முகிற பரிதாபம்...

சுயம். சுயம்... சுயம்...

சுமந்து பெற்றவளுக்கு குலை பதறியது. உடம்பெல்லாம் அதிர்ந்து நடுங்கியது. அரிசிப் பெட்டியை அவசரமாய் இறக்கினாள். அவள் மனசை ஒரு சோக வெள்ளம் அடித்துப் புரட்ட... மனசெல்லாம் ஓலமிட்டுக் கதற... மகனை வாரியெடுத்து அணைத்துக் கொண்டாள்.

கூடப் பிறந்த அண்ணனின் மறு பிறப்பு. சின்ன வயது இழப்புச் சோகத்தை இட்டு நிரப்பிய பொக்கிஷம். மனசுக்கே விளங்காத மன ஆழத்தில் உறைந்து கிடக்கிற உணர்வுகளுக்கு உயிர் தருகிற உயிர் வடிவம்...

'இந்தப் பாதகத்தி முண்டைக்கு அந்நேரம் மனசவிஞ்சி போச்சே... ஏம் பூச்செண்டை போட்டு அடிச்சு நொறுக்கிட்டேனே... ஏங்கையில புத்து பெறப்பட...'

தன்னைத்தானே சபித்துக் கொண்டு... கோவெனக் கதறினாள். சுயமாகக் கதறினாள். உள்ளிருந்து வந்த கதறல் அவள் அவளாக... தாயாக...

அம்மாவின் அழுகையையும் கோலத்தையும் கண்டு, விளங்காமல் திகைத்துப்போய்... அலங்க மலங்கப் பார்த்தான் மகன்.

சூழ்ந்து நின்று கைகொட்டிச் சிரித்தது, வாழ்க்கை.

***ஜனரஞ்சனி, 29-3-86***
***1000 ரூ. முதல் பரிசுக் கதை***

# சிபிகள்

விடிந்த அரவத்தில் முழிப்புத் தட்டிய மயிலப்பனுக்கு, தலை 'விண்ண்' ணென்றிருந்தது. பாறையாகக் கனத்தது. கெட்ட கெட்ட கனாக்கள் நிறையக் கண்ட களைப்பு. தீப்பிடித்த மாதிரிக் கண்கள் எரிந்தன. நாசிக்குள் வெப்ப அலைகள். காய்ச்சலாக இருக்குமோ...? அவன் மார்பில் கைவைத்துப் பார்த்துக் கொண்டான். நெருப்பாகத் தகித்தது. எழுந்திருக்க முயன்றான்.

ம்ஹூம். முடியலே. அப்படியே கிடக்க வேண்டும் போல ஓர் அயற்சி. மூச்சுப் பிடித்துக் கொண்டு எழுந்தான்.

மூட்டுக்கு மூட்டு வலி. இடுப்பைச் சுற்றிக் கடுகடுப்பு. தொடைச் சதைகளில் முறுக்கிப் பிழிகிற வலி.

அப்படியே குத்துக் காலிட்டுச் சுவரில் சாய்ந்து கொண்டான். பெருமூச்சு விட்டபோது... நாசித் துளைகள் காந்தலெடுத்தது.

'...இதென்ன கடவுளே, ஒறங்கி முழிக்குறதுக்குள்ளே காச்ச வந்து பேயா அமுக்கிக்கிடுச்சு. பன்னிகளைப் பத்தணுமே! எப்படி மேய்க்கப் போறது? ஏலாது போலிருக்கே...'

பங்குனி மாசம். வலுத்த கோடை. மழைத் தண்ணியில்லாமல் வறண்ட கோடை. இந்தக் காலத்தில் இப்படி கூதல் நடுக்குகிறதே, மார்கழி மாசம் மாதிரி...

விரித்திருந்த பழைய கிழிந்த சேலைத் துணியை எடுத்து மூடிக்கொண்டான். கொக்கு நோய் கண்ட கோழி மாதிரி, தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு, அப்படியே உட்கார்ந்திருந்தான்.

குடிசைக்கு வெளியே, கூட்டுக்குள் பன்றிகளின் இரைச்சல். நேரம் தப்பிவிட்டதால் ஒன்றையொன்று கடிக்கிறதோ...?

அவன் மனசுக்குள் பன்றிகளின் உறுமல்களும், அலறல்களும், குட்டிகளின் கீச்சிடல்களும்.

'பன்னிகளைத் தொறந்து விடணுமே... என்ன செய்யறது?''

மகளைக் கூப்பிட நினைத்தான். உதடுகள் காய்ந்து வெடித்துக் கிடந்தன. வாயில் வறட்சி. நாவெல்லாம் கசப்பு. சிரமப்பட்டு வாயைத் திறந்தால்... உயிரும் உஷ்ணமும் வெளியேறுவதைப் போன்ற பிரமை.

'செந்தட்டி... செந்தட்டி...'

அவ்வளவு சத்தமிட்டு அழைத்ததில் அயற்சி. கண்களை மூடிக்கொண்டான். இமைகளின் அழுத்த உரசலில் மெல்லிய சுகம்.

காய்ந்த தலையைச் சொறிந்து கொண்டு, தூக்க அசதியோடு வந்து நின்றாள், சிறுமி. பத்து வயசுக்கு மீறாத அரும்பு. சாயம் போய்க் கிழிந்த பாவாடை, உடலில் ஒட்டியிருந்தது.

இந்தச் சின்னஞ்சிறுசு, இத்தனை பன்னிகளையும் எப்படிக் கவனிச்சு மேச்சுடும்? விளையாட்டுப் போக்கில்

கவனம் பிசகிட்டா ஏதாச்சும் தப்பு வந்து சேருமே... ஆனால் வேறு கதியில்லியே...

மகராசி போனவருஷம் போய்ச் சேர்ந்துட்டாள். வரிசையாய் நாலு புள்ளைகளைப் பெத்துப் பெத்துச் சாவின் கையில் பறிகொடுத்தவள், அஞ்சாவதைப் பெறுகிறபோது... புள்ளையோடு சேர்ந்து அவளும் பறிபோயிட்டா...

பிரசவத்திலே கஷ்டம் வந்துட்டா... இந்தப் பட்டிக் காட்டுலே என்ன வைத்திய வசதி இருக்கு? ஒரு ஆசுபத்திரியோ... ஒரு டாக்டரோ... ஒரு எழவும் கிடையாது... பொழைச்சு எந்திரிச்சா... சாமிக்குப் பொங்கல் வைக்குறது. போய்ச் சேர்ந்துட்டா விதியைச் சொல்லிப் பொலம்ப வேண்டியது. வேறென்ன செய்ய..? ஹூம்!

'அவ கண்ணை மூடுன அன்னிக்கே... நானும் போய்ச் சேர்ந்திருக்கணும். முடியலியே... எப்படி முடியும்? தாயில்லாத இந்தப் பச்சை மண்ணை நாதியத்த அனாதையாக்கிட்டு, நாம மட்டும் எப்படிக் கண்ணை மூடுறது?'

''என்ன அய்யா...?''

செந்தட்டியின் மூன்றாவது அழைப்புக் குரலில் தலையைத் தூக்கி மகளைப் பரிவோடும், பச்சாதாபத்தோடும் பார்த்தான். நாவால் உதட்டை ஈரமாக்கிக் கொண்டான்.

''அய்யாவுக்குக் காச்சலா இருக்கு. எந்திரிக்கக்கூட முடியலே. பன்னியைப் பத்திக்கிட்டுப்போய் மேச்சுட்டு வா... என்ன?''

சின்ன உடம்பை ஏழு கோணலாக வளைத்தாள். முகத்தில் செல்லச் சிணுங்கல். மறுக்கிறாள். மனிதர்கள் 'உட்கார்ந்து' கொண்டிருக்கிற ஓடைக்காட்டில், போக அவளுக்கு இஷ்டமில்லை.

காய்ச்சல் வெறியில் இந்தச் சின்ன மறுப்பைக் கூடச் சகித்துக் கொள்ள முடியவில்லை. சண்டாளமாக வந்த கோபத்தில் மட்டியைக் கடித்தான். ஆத்திரத்தில் கண்களை விரித்தான்.

மனசுக்குள் ஒரு சின்ன மனித நேயக்குரல்... 'பாவம், தாயில்லாப்புள்ளை... பச்சை மண்ணு.'

கடித்த அடி உதட்டை விடுவித்தான். பார்வையில் கனிவை வரவழைத்துக் கொண்டான். குரலை மிருதுவாக்கிக் கொண்டான்.

''அய்யாவுக்கு முடியலேம்மா... பன்னி கத்துது பாரு... பத்திக்கிட்டுப் போம்மா... சொன்னதைக் கேளு... நல்ல புள்ளை இல்லே நீ? அடுத்த மாசம் பொங்கலுக்குப் புதுச் சட்டை தைச்சுத் தாரேன், என்ன?''

''சரி...'' முகத்தில் பயத்தின் வாட்டம். சம்மதிக்காத மனதோடு சம்மதித்தாள்.

''கூட்டை மறைச்சிருக்கிற பலகைக் கல்லை நகர்த்தி வைச்சுடு. கூடையைக் கையிலே எடுத்துக்க. சாணி பொறுக் கணும்லே? வெள்ளாமையிலே தப்பி வுழுந்துராமப் பாத்துக் கோ. அந்தச் சலவனும், 'வால் வெள்ளையும்' கள்ளத்தட்டுலேயே திரியும். அதுகளைக் கவனிச்சுக்கோ... என்னம்மா...''

''சரிய்யா.''

அவ்வளவு பேசிய களைப்பில் கழுத்து வலிக்க, மறுபடியும் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டான். கண்களை மூடிக்கொண்டான். மூடிய இமைகளுக்குள் வர்ண வர்ணமாய் ரேகைகள் மிதந்தன.

அகலக் கல்லை 'முக்கிப்' புரட்டுகிற சப்தம். விடுதலையான களி வெறியில் சப்த இரைச்சல்களோடு ஓடுகிற பன்றிகளின் சப்தம். பன்றிகளை அதட்டிக் கொண்டே ஓடுகிற செந்தட்டியின் காலடிச் சப்தம்.

கிராமத்தின் விளிம்புகளாக ஊரைச் சுற்றிலும் ஓடைகள். மழை நாள் தவிர, மற்ற நாட்களில் நீரோட்டமில்லாத ஓடைகள். சில இடங்களில் பாறைகள்... சில இடங்களில் மணல், சில இடங்களில் கரிசல்... இன்னும் சில இடங்களில் பொட்டல் தரைகள். ஆனால், எல்லா இடங்களிலும் வஞ்சனையில்லாமல் அடர்த்தியான வேலிச் செடிகள்.

இந்த ஓடைகள்தான் கிராமத்து மக்களுக்குத் திறந்த வெளிக் கழிவறைகள். காற்றோட்டமான கழிவறைகள். மனிதர்கள் அவஸ்தையோடு கழித்துவிட்டுப் போகும் அசிங்கத்தை... வாலையாட்டிக் கொண்டு ஆவலோடு வாரித் தின்று கொண்டே பன்றிகள்...

ஓடைகளைச் சுற்றிவிட்டுக் கூடு வந்து சேர மணி பத்துக்கு மேலாகி விடும்.

''முதலாளி... நல்ல ஸ்ட்ராங்கா ஒரு டீ குடுங்க!''

''என்னப்பா மயிலு. ஆளு ரொம்ப அசந்துருக்கிறே, நேத்துச் சாயங்காலம் தண்ணி சாஸ்தியா?''

''தண்ணிக்கு வழியேது முதலாளி? என்னமோ தெரியலே, ராவோட ராவா வந்து காய்ச்சல் அமுக்கிக்கிடுச்சு. உசுர் போற மாதிரி மேலெல்லாம் வலி. மண்டைக்குத்து. நீங்க குடுக்குற டீயிலேதான், காச்சவுடணும். பன்னி பத்தப் போவணும்.''

''இந்தா அடி. கஷாயமா எறக்கியாச்சு. உதட்டுலே ஒட்டும்.''

வெள்ளை மாத்திரையை வாய்க்குள் போட்டு, டீயை உறிஞ்சினான். மாத்திரை தொண்டைக்குள் சிக்கிக் கொண்டது. முகத்தைக் கோணி, கண்களைச் சுருக்கி, வாயை அழுந்த மூடி... அப்பாடா... ஒரு வழியாக உள்ளுக்குள் இறங்கிவிட்டது.

டீயைக் குடித்தான். வழக்கம் போல் பீடியைப் பற்ற வைத்தான். பீடிப் புகை ஒவ்வவில்லை. வாயெல்லாம் கசந்து அழறியது.

பீடியைத் தரையில் தேய்த்து எறிந்தான். வெளியே வந்து, வெறுப்புடன் எச்சிலைத் துப்பினான்.

உள்ளுக்குள் இறங்கிய டீயில், உடம்பு கதகதப்பாகியது. சீலைத் துணியை மூடிக்கொண்டு, முட்டங்காலைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்தான்.

நேரம் என்ன இருக்கும்?

ஒரு கொள்ளைக்காரனைப் போல் பேய் வேகத்தில் வந்து, வட்டமடித்து நின்றது பால் லாரி. வெற்றுக் கேன்களை இறக்கிவிட்டு, பால் நிரம்பிய கேன்களை ஏற்றிக் கொண்டு, வந்த வேலை முடிந்த திருடனைப்போல் வெறி வேகத்தில் புறப்பட்டுப் போய்விட்டது.

இந்தப் பால் லாரி ஊருக்குள் வரத் துவங்கிய பிறகு... பிள்ளைப் பால், ஓசி மோர், உறவுக்காரர்களுக்கு வெண்ணெய் தருதல் என்ற வழக்கங்களெல்லாம் 'ஒரு காலத்து விஷயமாக' ஆகிவிட்டன.

பால் லாரி வந்து திரும்பினால், மணி ஏழரை என்று அர்த்தம். இம்புட்டு நேரத்துக்கு, செந்தட்டி எங்கே போயிருப்பாள்? முத்தையா நாடார் புஞ்சைக்கு நேராகவா, ரெங்கசாமி நாயக்கர் புஞ்சைக்கு நேராகவா?

பாவம், சின்னப்புள்ளை! கவலைன்னா என்ன, வேலைன்னா என்னன்னு தெரியாம, தெருப் புழுதியிலே வீடு கட்டி விளையாட வேண்டிய வயசு. பெரிய மனுஷியைப் போல வீட்டுப் பொறுப்பேத்து, சட்டி பானை கழுவி, விறகு பாத்து, அடுப்புப் புகையிலே அல்லாடி... சோறாக்கி, காப்பி போட்டு, ஆணம் காச்சி... எல்லாம் விதிக் கொடுமை!

ஏதோ... நொண்டிவீரன் சாமி புண்ணியத்துலே... இந்த ஒரு பொட்டப் புள்ளையாச்சும் தப்பிப் பிழைச்சுத் தங்கி யிருக்குறதுனாலேதான்... நாம ஒரு குடும்பம்ங்கிற அந்தஸ்துலே இருக்கோம். வீடு வாசலோட இருக்கோம். இந்த அரும்பு இல்லேன்னா... நா ஒண்டிக்கட்டையா... பொறம் போக்கா... தண்ணி குடுக்கக் கூட நாதியத்த அனாதையாகத் தான் அலையணும்...

மயிலப்பன் அயற்சியோடு கண்களை மூடி... இறுக அழுத்திவிட்டுத் திறக்கையில் இமை ரோமங்கள் ஈரத்தில் நனைந்திருந்தன.

நோய்வாய்ப்பட்ட நேரத்தில்தான் எந்த இழப்பும் பூதாகாரமாகத் தெரியும். மயிலப்பனுக்கும் மனைவியின் இழப்பு, எந்த நேரத்தையும் விட, இப்போது பெரிதாகத் தோன்றியது.

கொதிக்கிற நெற்றியைத் தொட்டுப் பார்க்கிற ஈரமான கைகள் இல்லை. 'ஐயய்யோ, காச்சதீயா பொறியுதே' என்று பதறித் துடிக்கிற, அந்த இதயம் இல்லை. 'படுத்துரு. பத்து

அரைச்சுப் போடுதேன். கசாயம் காச்சித் தாரேன்' என பதைத்துப் போய் - பரபரத்துத் திரிகிற - அந்தப் பரிவு - அன்பு - உறவு - இல்லை.

ஆ... எம்புட்டுப் பெரிய இல்லை! சூன்யத்தையே சூழலாக்கிவிட்ட குரூரமான இல்லை. அட பாதரவே, எந்த மனுஷனுக்கும் வாய்த்துவிடக் கூடாத கொடுமையான இல்லை...!

உடம்பெல்லாம் வியர்த்துவிட்டதை, கொஞ்ச நேரம் கழித்தே உணர்ந்தான். தலை முடிக்குள் வியர்வைக் கசகசப்பு. கனம் குறைந்துவிட்டது. நாசிக் காந்தல், எரிச்சல் எல்லாம் மட்டுப்பட்டிருந்தது.

சீலைத் துணியால் நெஞ்சு, முகம் எல்லாம் துடைத்துக் கொண்டான்! துணியைத் தலையைச் சுற்றிக் கட்டிக் கொண்டான். மேய்ச்சல் தளத்துக்குப் போகலாம் என்ற நினைப்பில், வீட்டுக்குப் போய்க் குச்சியை எடுத்துக் கொண்டான்.

ஊரையொட்டி நடந்தான். சாக்கடை வாய்க்கால் கட்டுமானத்துக்கான செங்கற் குவியல்... கற்குவியல்... சத்துணவுக் கூடத்துக்கான ஆஸ்பெஸ்டாஸ் தகடுகள்... ஊரையொட்டி ரோடு ரோலர்... புதுச்சாலை...

எல்லாம் நடந்து முடிந்த பஞ்சாயத்துத் தேர்தலின் உடனடிப் பலன்கள்.

ஓடைக்குள் இறங்கினான். மனிதக் கழிவுகள், வேலிச் செடியைச்சுற்றி அசிங்கங்கள். பழகிப் போன வேலைத் தளம். அருவருப்பில்லாமல் 'வில், வில்' லென்று விறைப்பாக நடந்தான்.

மேல் பக்க ஓடையிலிருந்து வடப்பக்க, ஓடைக்குப் போவதற்காகத் தோட்டங்கள் வழியாகக் குறுக்காக விழுந்து நடந்தான். மிளகாய்த் தோட்டங்கள் அஸ்தமன கதியில் இருந்தன. தொங்கட்டான் மாதிரி சின்னக் காய்கள் உச்சியில் தொங்க, இலைகள் பச்சை மாறிப் பழுப்பு நிறத்தில் நரைத்துப் போயிருந்தன.

அகத்தி வரிசைகள் மொட்டை மொட்டையாக நின்றன.

அந்த ஓடைக் கரையிலிருந்த புஞ்சை மண்ணை மிதித்தபோது... உடம்பில் சிலிர்த்தது. தொட்டுக் கும்பிடணும் போல் மனசுக்குள் ஒரு புல்லரிப்பு.

இந்தத் தோட்டத்தில்தான்... அது நடந்தது. அட, இந்தப் புஞ்சைக்கார முதலாளி எம்புட்டு நல்ல மனுசர்...!

அன்னிக்கு நடந்ததென்ன, சாமான்யமான தப்பா? முந்நூறு நானூறுன்னு அபராதம் போட்டுத் தள்ளியிருப்பாகளே... அதுக்கும் மேலே தானே அவருக்குச் சேதாரம் இருக்கும். ஆனா, எம்புட்டுப் பெருந்தன்மையாச் சொன்னாரு...

'சரி சரி, போய்ட்டு வா... தப்பு யாருக்கும் வரத் தானே செய்யும். அதுக்காக எளியவன் - ஒன்னை என்ன செய்யறது? எனக்கு நேரம் சரியில்லேன்னு நெனைச்சுக்கிட வேண்டியது தான்... ம்.'

நொண்டிவீரன் சாமியே அவர் மனசுக்குள் நின்னு பேசின மாதிரி, என்ன அருமையா - மனுசத் தன்மையோட - பெருந்தன்மையோட பேசினாரு! அவரு காலுக்குப் பூப்போட்டுத்தான் கும்புடணும். முடிஞ்சா... அவரு கைக்குத் தங்கக் காப்புக் கூடப் போடலாம். அவரு குடும்பம் ஒரு கொறையில்லாம தழைக்கணும்...

அப்போது-

மயிலப்பனிடம் நிறைமாதச் சினையாக, ஒரு பன்றி இருந்தது. இன்றைக்கோ, நாளைக்கோ எப்பவும் குட்டி போடலாம் என்ற விளிம்பில் நின்றது.

அந்தச் சினைப் பன்றியைக் கூட்டுக்குள் அடைக்க முடியாது. மற்ற பன்றிகள் இதைச் சித்திரவதைப்படுத்திவிடக் கூடும். அல்லது பிரசவ வேதனை வெறியில் இதுவும் மற்றப் பன்றிகளைக் கடித்துக் குதறிவிடக் கூடும்.

சினைப் பன்றியின் பின்னங்காலில் கயிறு போட்டு, கூட்டுக்கு வெளியே இரும்பு முளையில் கட்டிப் போட்டிருந் தான். அதன் முன் தரையில் பதித்திருந்த பட்டியில் வாடாமல் கஞ்சித் தண்ணீர். அந்தக் கர்ப்பிணியை ராவும் பகலுமாகக் கவனித்துக் கொண்டிருந்தான். பணம் பெத்த பன்னி!

விடிந்து வெளியே வந்து பார்த்தான். கண்ணில் தேள் கொட்டியது போலிருந்தது. கயிறு அறுந்து இற்றுக் கிடந்தது. பன்றியைக் காணோம்.

பயமும் திகிலுமாய் நெஞ்சடைத்துப் போனான்.

பணம் பெத்த பன்னி பாழாயிடுமோ...

பழியைக் கொண்ணாந்து சேர்த்திடுமோ...

— இரண்டு வகையான பயம் மனத்தைக் கவ்விக் கொண்டது.

மனத்தின் பரபரப்பு, காலில் இறங்க... மின்னலாகக் காடுகளில் ஓடித் திரிந்தான். முள்ளு மொடல்களைப் பொருட்படுத்தாமல், கண் மூக்குத் தெரியாத வெறி வேகத்தில் அங்குமிங்குமாய்ப் பாய்ந்தான்.

கடைசியில் —

இந்தத் தோட்டத்தில் வந்து பார்த்தால் —

நிலம் உழுது புரட்டப்பட்டுக் கிடக்கிறது. வடகிழக்கு மூலையில் மிளகாய் நாற்றங்கால். பத்துப் பதினாறு பாத்திகள். 30 நாள் வயசான நாற்றுகள். பிறந்து நாலைஞ்சு நாளான கோழிக் குஞ்சுகளைப் போல் மென்மையா... அழகா... சின்னஞ் சிறுசா... அடர்த்தியான இளம்பசுமையாய்.

நாற்றங்கால் முழுவதும் சினைப் பன்றி உருண்டு புரண்டு, குரூரமாக நாசக் காடாகிக் கிடந்தது. ஒடிந்துபோன நாற்றுகளின் மிருதுவில் அரைமயக்கத்தில் பன்றி படுத்துக் கிடந்தது.

அந்த மயக்கத்திலும் பார்ப்பவர்கள் மிரளுகிற மாதிரியான மிரட்டலான உறுமல். 'மூசு... மூசு' என்று பெரிதாக மூச்சு விட்டுக் கொண்டிருந்தது. சுற்றிலும் நிறைய குட்டிகள்... 'மொய் மொய்' யென்று.

அப்பாடா...! மனத்தின் கனம் பாதியாகக் குறைந்தது. உள்ளுக்குள் ஒரு கதவு திறந்து கொண்டதைப் போல... பாய்ந்த இளங்காற்றில் மனத்தின் வியர்வை துடைக்கப்பட்டது. பணம் பெத்த பன்னி பாழாகிவிடவில்லை.

ஆனால், இன்னோர் அச்சம் மனத்தை அறுத்தது. நாசக்காடாகிக் கிடந்த நாற்றங்கால்!

நாற்றங்கால் என்பது சம்சாரிக்கு மூலவித்தல்லவா? வெள்ளாமையை விட மதிப்புமிக்கதல்லவா! நடுவைக்குப் பணம் போட்டு நாற்று வாங்கப் போனால்... ஆயிரத்துக்கும் மேலாகுமே! அம்புட்டையும் நாசமாக்கிடுச்சே!

மனசு மருகித் தவித்தது.

அடக் கொடுமையே... என்னதான் ஆகுமோ...? எம்புட்டுதான் அபராதம் போடுவாகளோ... நம்ம குடும்பமே, இதுலே நொறுங்கி, 'நொத்தவிடா' போயிடுமோ...

பீதியும் திகிலும் சினைப் பன்றியாகப் புரள, மனசு நாற்றங்காலாய்ச் சீரழிந்து கொண்டிருந்தது.

பிரசவ வலி பொறுக்காமல், வேதனை வெறியில் கயிற்றை அறுத்துக்கொண்டு, கண் மூக்குத் தெரியாமல் ஓடித் திரிந்து, படுக்கச் சுகமாக இருந்த இந்த நாற்றங்காலில் வந்து புரண்டிருக்கிறது.

சே! மிருகங்கிறது சரியாய்ப் போச்சே! அது குணத்தைக் காட்டிடுச்சே! பச்சைப் புள்ளை மாதிரி இருக்கிற இந்த நாத்துலே படுத்துப் புரள மனுசனுக்கு மனசு வருமா?

அடக் கொடுமையே...! இப்ப என்ன செய்யறது?

ஒரு வழியாக பன்றியை வீடு சேர்த்துவிட்டு, புஞ்சைக்கார முதலாளி வீட்டை நோக்கிப் பறந்தான். சிபிச் சக்கரவர்த்தி காலடியில் வந்து விழுந்த அடிபட்ட புறாவைப் போல... மயிலப்பனும் அவர் காலடியில் நெடுஞ்சாண் கிடையாக விழுந்து கும்பிட்டான்.

அவரும் பெரிய பணக்காரரல்ல. சாதாரண நடுத்தர சம்சாரிதான். பதறிப் போன அவர், "எந்தி, எந்தி... எதுக்கப்பா கால்லே வந்து வுழறே?"

பயத்தில் வாய் உளற... கண்ணில் நீர் மாலை மாலையாக வழிய... காய்ச்சல் கண்டவன் புலம்புகிற மாதிரி, தவித்துத் தவித்துச் சொல்லி முடித்தான். கடைசியில்-

''முதலாளி, நானறியாமல் நடந்து போன தப்புதான். ஆனாலும், ஒங்களுக்கு நட்டம் நட்டந்தானே! நீங்க எனக்குத் தகப்பன் போல. நா, உங்க நெழல்லே - ஆதரவுலே - பொழைக்கிறவன். நீங்க பாத்து, மனசு வச்சு, என்ன நியாயம் சொன்னாலும்... மறு பேச்சில்லாமல் நான் கட்டுப்படுதேன் முதலாளி'' என்று சொல்லிவிட்டு மருகி நின்றான்.

அப்போதுதான் அந்த வார்த்தைகளைக் கூறினார், தங்கமான மனுசராய்... தெய்வத்தைவிட உயர்ந்த மனுசராய் - சிபிச்சக்கரவர்த்தியாய்...

''சரி சரி, தப்பு யாருக்கும் வரத்தானே செய்யும். அதுக்காக எளியவன் - ஒன்னை என்ன செய்யறது? எனக்கு நேரம் சரியில்லேன்னு நெனைச்சுக்கிட வேண்டியதுதான்...''

அந்த மனித நேயக் குரல், இதோ... இப்பொழுது கூட ஒலிப்பது போலிருக்கிறது. நெஞ்சுக்குள் ஒரு சிலிர்ப்பு... தேகமெல்லாம் புல்லரிப்பு.

அடடா... எம்புட்டு அருமையான மனுசர் - மனுசர்னா, இவருதான் மனுசர்...

அந்தத் தோட்டத்தின் சரிவில் இறங்கி, மயிலப்பன் ஓடைக்குள் விழுந்தான். முள் செடிகளுக்கு மத்தியில் ஊடுருவி, கிழக்காகச் செல்கிறபோது நிமிர்ந்து பார்த்தான்.

கருமை கருமையாக நிறைய மேகங்கள். கல்யாணமாகி இன்னும் கர்ப்பம் தரிக்காத பெண்ணைப் போன்ற மேகங்களாக மாறவும் செய்யலாம். மலட்டு மேகங்களாகப் போய்விடவும் செய்யலாம். எல்லாம்... அடிக்கிற காற்றைப் பொறுத்த விஷயம்.

காலைச் சூரியனின் கோடைக் கிரணங்களைத் தவிர்க்க, கையால் கண்ணுக்குக் குடையமைத்துப் பார்த்தான். செந்தட்டி கண்ணில் தட்டுப்படவேயில்லை. குச்சியைக் கக்கத்தில் இடுக்கிக் கொண்டு, மனிதக் கழிவுகளிடையே நடந்தான். தெற்காகத் திரும்பிவிட்டான்.

ஓடையிலேயே அதோ... அந்த இடம் பெரும் பள்ளம். ஆள் நின்றால் தலை தெரியாத ஆழம்.

அந்தத் தங்கமான மனிதருக்கு அந்த இடத்திலும் ஒரு துண்டுப் புஞ்சை இருக்கிறது.

ஓடையின் ஆழமான இடத்தைத் தாண்டிய மேட்டில், பன்றிகள் மேய்வது தெரிந்தது. செந்தட்டி எங்கே?

'விளையாட்டுப் போக்காக எங்காச்சும் நிக்காளா? பன்னிகளைத் தன்போக்கில் விட்டுவிட்டு, கவனப் பிசகாக இருக்காளா?'

மயிலப்பனுக்குள் ஒரு சின்ன உதைப்பு.

நடையை எட்டிப் போட்டான். பத்தடி தூரத்தைத் துடியாய்க் கடந்திருப்பான். மகளின் கதறல், துல்லியமாகக் கேட்டது. மனசுக்குள் திக்கென்றது.

''ஐயய்யோ... ... ஐயய்யோ... அம்மா... அய்யா... ஐயய்யோ... ... வலிக்கே.''

வலி தாளாமல் துடித்தலறுகிற தனது ரத்தத்தின் குரல். தாயில்லாப் பிஞ்சின் அவலக் குரல்.

அவனது குலை பதறியது. ஈரக் குலையைப் பிடுங்குவதைப் போன்றதொரு திகிலுணர்வு. திக்திக்கென்று அடிப்பதைக் கூட மனசு நிறுத்திக் கொள்ள... ஓட்டமும் நடையுமாக முட்செடிகளைக் கிழித்துக் கொண்டு பாய...

அந்த ஓடையின் ஆள் தெரியாத ஆழத்தில்-

செந்தட்டியின் காய்ந்த தலைமயிரை இடது கை பற்றியிழுக்க, வலது கையால் கன்னத்திலும், முதுகிலும் ஓங்கி ஓங்கி அடித்துக் கொண்டிருந்தார், ஒருவர்.

அவள் துடியாய்த் துடித்தாள்.

''புஞ்சையிலே இனிமே பன்னியெ விடுவீயா? இனிமே விடுவீயா? பன்னியைப் புஞ்சையிலே... இனிமே விட்டே... கொன்று தோலை உரிச்சிடுவேன்... சாக்கிரதை.''

அவரின் முரட்டுக் குரல். அதே குரல். தங்கமான அதே மனிதரா... இப்படி... ...! புறாக் குஞ்சை வதைக்கிற சிபியாக, அவரா, இப்படி!

''முதலாளி, முதலாளி'' என்று கூப்பாடு போட்டுக் கொண்டே, ஒரே பாய்ச்சலில் வந்து சேர்ந்தான். மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க வந்த மயிலப்பன், மகளைப் பிடுங்கித் தொடையோடு சேர்த்து அணைத்துக் கொண்டான்.

அந்தப் புறாக் குஞ்சின் கன்னத்திலும் முதுகிலும் முரட்டுக் கை விளையாடிய தடங்கள்... தடிப்பாக... ரத்தம் கன்றிப்போய்...

அவனுள் தீக்கோலைச் சொருகியது போலிருந்தது. மனசெல்லாம் கிடந்து கொதிக்க... ''முதலாளி, இந்தப் பச்சை மதலையை எதுக்கு இப்படி அடிச்சுக் கொன்னுருக்கீக...?''

''தண்ணி பாஞ்சு கெடக்குற வெள்ளாமையிலே பன்னிகளை வுட்டு, ஒழப்புனா, எப்படி இருக்கும்?''

செந்தட்டி பயத்தில் ஒட்டிக்கொண்டு, விக்கி விக்கியழு தாள். அவள் விம்மித் துடிக்கிற துடிப்பைப் பார்க்கப் பார்க்க மனசுக்குள் குத்துண்ட வேதனை.

''இதுக்காகவா முதலாளி, இப்படிப் புள்ளையைத் தொலைச்சு எடுக்கணும்? இது நியாயமா முதலாளி? தாயில்லாப் புள்ளை முதலாளி!''

''தாயில்லாப் புள்ளைங்கிறதுக்காக... புஞ்சையிலே பன்னியை விட்டுப் பாழாக்குனா... முத்தமா கொஞ்சுவாக? நியாயமாம்... நியாயம்!''

''பாழாக்கணும்னு நெனைச்சா முதலாளி செய்திருப்பா? தப்பித் தவறித்தானே விழுந்திருக்கும்? இதுக்குப் போய் இப்படி அடிச்சுக் கொன்னுருக்கீங்களே... அப்படியே தப்பித் தவறிப் புஞ்சையிலே விழுந்துட்டாலும், என்ன அழிமானம் ஆயிருக்கும் முதலாளி? ஓஞ்சு போன வெள்ளாமைதானே? இதைக் கூட முதலாளிமார் பொறுத்துப் போகக் கூடாதா முதலாளி?''

''எதுக்குடா பொறுத்துப் போகணும்? பஞ்சாயத்துத் தேர்தல்லே ஏஞ்சாதிக்காரனுக்கு ஓட்டுப் போடாத சாதிக்காரனுக்கெல்லாம் என்னத்துக்குப் பொறுத்துப் போகணும்? நாலு போடு போட்டு, வைக்கிற இடத்துலே உங்களை வச்சாத்தான்... உங்களுக்கெல்லாம் மனசுலே பயம் வரும்.''

வாயடைத்துப் போனான் மயிலப்பன். இதுக்கு மேலே என்னத்தைப் பேச?

இவர் இவரா இருந்தப்போ, எம்புட்டு அருமையான மனுசரா இருந்தாரு...! மனுசனை மனுசனா மதிக்கிற, மனுசரா இருந்தாரே...!

பூப்போட்டு கும்புடக் கூடிய காலாக... தங்கக் காப்பு செய்து போடத்தக்க கையாக இருந்தாரே...!

அதே கைதான்... செந்தட்டியை - சின்னஞ்சிறு மலரை - கிள்ளி நசுக்கி எறிஞ்சிருக்கு...

அப்பேர்ப்பட்ட மனுசர்... எப்படி இப்படி மாறிட்டாரு? எது இவரை இப்படி மாத்துச்சு? அதான்... அவரே சொல்லிட்டாரே...

'ஏஞ்சாதிக்காரனுக்கு ஒட்டுப் போடாத சாதிக்காரனுக்...'

காலோடு ஒட்டி நிற்கிற மகள் நடுங்குகிறாள். விக்கி விக்கி அழுகிறாள். அவள் பாவாடை மூத்திரத்தில் நனைந்து கிடந்தது.

'அடிபட்ட பயத்திலேயே காச்சல் வந்து செத்துப் போவாளோ...'

அவன் மனசு நினைக்க நினைக்கக் கொதித்தது...

மகளைத் தடவிக் கொடுத்தபோது... கழுகின் காலடியில் சிக்கிக்கொண்ட புறாவைப் போலத் துடித்தது, அவனது மனம்.

*கல்கி, 3-8-86*
*1000 ரூ. முதல் பரிசுக் கதை*

*பி.கு : (முதலாளி என்பது நிலச்சுவான்தார் என்பதனாலல்ல, ஜாதி இந்துக்களைத் தாழ்த்தப்பட்ட மக்கள் அழைக்கிற மரியாதைச் சொல்)*

# உள் மனிதன்

கிராமத்தின் கீழ்க்கோடியில் சமப்படுத்தப்பட்ட ஒரு பொட்டல் மைதானம். அந்தப் 'பேருந்து நிலைய'த்தில் கூட்டம் கூட்டமாக மனிதர்கள். நைலக்ஸ் ஸாரிகளும், டைமன் சேலைகளும் ஓரிரண்டு கோடம்பாக்கம் சேலைகளும் கலர் கலராக... பூப்பூவாக டிசைன் டிசைன்னாக... பலரகமானவர்கள்.

பவுடர் அப்பித் துடைத்துப் பாலீசான முகங்கள்... எண்ணெய் கசிகிற முகங்கள்...

நிறைய வேட்டிகள்... ஓரிரண்டு கயிலிகள், சட்டைகள்.

எல்லோருமே கழுத்தை எக்கி எக்கி 'பொழுதுக் காலை'யே பார்த்தனர்.

புழுதிப்படலம் தெரியுதா? பஸ் வருமா? நேரம் தப்பிருச்சே... வருமா, வராமலேயே போயிடுமோ...

அனைவருக்குள்ளும் உட்கார்ந்து உதைத்துக் கொண்டிருந்த பதைப்பு... காத்திருந்து காத்திருந்து களைத்துப் போய்விட்டவர்களின் முகங்களில் சலிப்பு.

'பேரு பெத்த பேரு; தாகத்துக்கு நீலு லேது' என்பதைப்போல, பெரிய தலைவர் பெயரில் பெரிய பேருந்து நிலையப் போர்டு நிற்கிறது. பஸ் என்னவோ... ஒன்னே ஒன்னு

கண்ணே கண்ணாக வந்து போகுது. அதுவும்... காலை மாலை இரண்டு டயம்.

டிரைவர் லீவ்... கண்டக்டர் இல்லே... பஸ் ரிப்பேர்... ஏதாவது கோவில் திருவிழாவுக்கு ஸ்பெஷல் அடிக்கப் போய்...

இப்படி ஏதாச்சும் காரணத்தாலே, அந்த ஒரு பஸ்சும் வராமல் போயிடலாம். வந்தால் உண்டு. இல்லேன்னா இல்லைதான்.

ஆத்திர அவசர ஜோலிகளை வைத்துக்கொண்டு காத்துக் கிடந்த ஜனங்கள் ஏலாமைப் பெருமூச்சோடு வேலை கெட்டுப் போன புலம்பலோடு வீடு திரும்ப வேண்டியதுதான்!

சரி... மணி எட்டாகப் போகுது. ஏழேகாலுக்கே வந்து திரும்ப வேண்டிய பஸ் இன்னும்... வரல்லே... அட, இனிமே வருமா?

அனைவர் மனசிலும் இதே நமைச்சல். ஆளுக்கொரு அவசர வேலை. அத்யாவசியமான காரியம். உழைப்பதற்கே ஜென்மம் எடுத்திருப்பதாக நினைக்கிற கிராமத்து ஆட்கள், ஆத்திர அவசரம் இல்லேன்னா... லேசுலே கிளம்புவார்களா? பொழுது போக ஊருசுத்துற புத்தியுள்ளவுகளா... பாவம்!

'இன்னும் பஸ் வரல்லியே' என்ற நமைச்சல், நம்ம சண்முகத்துக்கு கூடுதலாக இருந்தது. உச்சபட்ச எரிச்சலில் இருந்தார். பாவம், அவர் அவசரம் அவருக்கு. அவர் மனைவிக்கு இது ஏழாவது கர்ப்பம். நிறை மாசம். மெடிக்கல் செக்கப்புக்கு ராஜபாளையம் போய் வரணும். அதோ... முகத்தில் துளிர்த்த வியர்வையோடு கல்லில் உட்கார்ந் திருக்கிற பார்வதி.

சண்முகம் நல்ல சிவப்பு. முகத்தில் கொஞ்சம் படிப்பு வாசனை, நாலுகாடு போய் வந்த அனுபவம். நாலு விபரம் தெரிந்த மனிதர். ஊர்க் கூட்டத்தில் அவர் சத்தம்தான் ஓங்கிக் கேட்கும்

பஸ் வராதா என்று மற்ற சராசரிகளைப்போல மௌனமாக ஏங்கிக் கொண்டிருக்கவில்லை அவர். சுற்றி நின்றவர்களிடம் கோபத்துடன் அங்கலாய்த்துக் கொண் டிருந்தார். எரிச்சலில் சகட்டுமேனிக்குத் திட்டிக் கொண் டிருந்தார்.

''இந்த டிரான்ஸ்போர்ட் ஒர்க்கர்ஸ் எல்லாருக்கும் திமிர் ஏறிப் போச்சு. மாசா மாசம் கை நிறைய சம்பளம் வாங்குறாங்க. கொஞ்சங்கூட பொறுப்புணர்ச்சியே கிடையாது. யாரு செத்தா நமக்கென்னன்னு அக்கறையில்லாம நடந்துக்கிறாங்க...''

சுற்றி நின்ற சிலர் 'அதானே' 'ஆமாமா' 'நெசந்தா' என்பது போன்ற தலையாட்டல் வார்த்தைகளை உச்சரித்துக் கொண்டு ஆமோதித்துக் கொண்டிருந்தனர்.

அதிலும் சண்முகத்துக்கு எதிரில் நின்ற பெரியவர் முத்தையா ரொம்ப உடன்பாடாக தலையை அசைத்தார். ''சம்முகம் சொல்றதுதான், நூத்திலொரு வார்த்தை'' என்று இடை இடையே ஒரு பாராட்டையும் போட்டு வைத்தார்.

அப்போதுதான்-

ஊரின் கீழ்க் கோடியில் கதிரவன் உதயமாகி வருவதைப் போல பஸ்ஸின் உருவம் சன்னஞ் சன்னமாய்த் தெரியத் தொடங்கியது.

''ஹேய்... பஸ் வந்துருச்சு... பஸ் வந்துருச்சு'' சிறுவர் களின் உற்சாகமான ஆனந்தக் கூச்சல் புழுதிப் படலமாக

எழுந்து உயர்ந்தது. 'வராதோ' என்று துவண்டு கிடந்த எல்லோர் முகத்திலும் பளிச்சிட்ட வெளிச்சங்கள்... கண்களில் உற்சாக மின்னல்கள்... மகிழ்ச்சி நதிகள்...

வேகமாய் வந்து நின்ற டவுன் பஸ்ஸை புழுதிப் படலம் மறைத்து, விலகி, அடங்கியது.

முதலில் இறங்கிய கண்டக்டர் விட்டுவிட்டு, விசி லடிக்க, பஸ் பின்னோக்கி ஊர்ந்தது. உச்சகட்ட விசிலடிப்பில், பஸ் முன்னோக்கி வளைந்து, பாய்ந்து, மூச்சடங்கியது.

அதற்குள் சனங்கள் பஸ்ஸை மொய்த்தனர். ஏறுவதில் போட்டி. இடம் பிடிக்க முந்துகிற முயற்சிகள். ஒருவரை யொருவர் இடித்துக் கொண்டு, திட்டிக் கொண்டு, மிதித்துக் கொண்டு... காட்டுக் கூச்சலாக இருந்தது.

இறங்க வேண்டியவர்கள் இறங்க விடாமல் ஏறுவோ ரின் அவசரம். அவர்களை இடித்து வெளித்தள்ளிக்கொண்டு இறங்குவோரின் பிரயத்தனங்கள்...

ஒரே கசகசப்பு... இரைச்சல்... ஒரு சின்ன யுத்தம்.

இறங்கி நின்ற டிரைவரையும், கண்டக்டரையும் சூழ்ந்து கொண்ட ஒரு வாலிபவட்டம், கேள்விகளால் நச்சரித்தனர்.

'என்ன, இன்னைக்கு லேட்டு?' என்ற கேள்வியை நிறைய பேர் மாறி மாறிக் கேட்க...

'கூட்டம் ஏகப்பட்ட கூட்டம்... ஃபுல்லா ஸ்டாண்டிங், வழிநெடுக ஏகப்பட்ட ஸ்டாப்பிங்ஸ். நின்னு நின்னுவர நேரமாயிடுதுல்லே...?' என்ற பதிலை டிரைவரும் சலிக்காமல் மாறி மாறிக் கூறினார்.

முன்வாசல் வழியாக பார்வதியைப் பத்திரமாக ஏற்று வதற்குள் சண்முகம் ரொம்பச் சிரமப்பட்டு விட்டார்.

'ஆத்தாடி, அம்மாடி' என்றாகி விட்டது. அவரும் ஏறிக் கொண்டார். வியர்த்து விறுவிறுத்து விட்டது. அவருக்குள் ரொம்ப கடுகடுப்பு.

''எறங்குறவங்க எறங்க முடியலே, ஏர்றவங்க ஏற முடியலே. இதையெல்லாம் கன்ட்ரோல் பண்ணாம... கவனிக்காம, கண்டக்டர் எங்க போயிட்டார்... ச்சே!'' என்று உஷ்ணத்துடன் முணுமுணுத்துக் கொண்டார்.

பெரியவர் முத்தையா ''என்ன, என்ன சொன்னீர்'' என்று கேட்டுக்கொண்டே உட்கார சீட் தேடினார். நல்ல வேளை முன் பகுதியிலேயே சீட் கிடைத்தது. மனைவியை உட்கார வைத்துக் கொண்டார். முழுவயிறும் சுமையாக இழுக்க, பாவம் பார்வதி மூச்சிரைத்தாள். சண்முகம் நடுவில் உட்கார்ந்தார். முத்தையா அதே சீட்டில், ஓரத்தில்.

கண்டக்டரும் டிரைவரும் பேசிக்கொண்டே ஊருக்குள் சென்றனர். கண்டக்டர் துரிதப்படுத்தினார். ''வாங்கண்ணே சீக்கிரம், டயமாகுது''

''என்னப்பா, டிபன் சாப்பிட வேண்டாமா?''

''டயமாகுதே... டிரிப் அடிக்க முடியாதே''

''இப்ப டயமெடுத்துப் போனா ராஜபாளையம் போய்ச் சேர மணி ஒன்பதரை ஆயிடுமே''

''என்ன செய்யறது... அங்க போய்த்தான் டிபனை பார்க்கணும்.''

''இப்ப மணி எட்டு பத்தாகுது. வயிறு பசிக்குதே''

''டூயை ஊத்திக்க வேண்டியதுதான்...''

''நல்ல பொழைப்புதான். சாப்பிடக்கூட நேரமில்லாம... நாயைவிடக் கேவலமப்பா...''

டீக்கடைக்குள் நுழைந்தவுடன், கண்டக்டர் கடைக் காரரைத் துரிதப்படுத்தினார். சுற்றி நின்றவர்கள் அந்த காக்கிச் சட்டைகளை அதிசயமாகப் பார்த்தனர்.

டவுன் பஸ்சுக்குள் நல்ல கூட்டம். ஏறுவெய்யில் சுள்ளென்றது. புழுங்கியது. வழிகின்ற வியர்வைப் பெருக்கு அயர்ன் பண்ணிய சட்டைகளை நனைத்து உடம்போடு ஒட்ட வைக்கிறது.

பார்வதி இருப்புக் கொள்ளாமல், அசைந்து கொண்டு, நெளிந்து கொண்டு, சலனப்பட்டுக் கொண்டேயிருந்தாள். வயிற்றைத் தொட்டுப் பார்த்துக் கொண்டாள். உள்ளுக்குள் குழந்தை நெளிகிற வேதனை உணர்ச்சி. வயிற்றின் வலது மேல் முகப்பில் குழந்தையின் பிஞ்சுக்கால் உதைக்கிற உதைப்பு... அந்த இடத்தில் காலின் உருவ அடையாளம் தெரிந்து மறைகிறது.

'வவுறு பெருசாக இருந்தால் பெண் பிள்ளையாக இருக்கும்னு சொல்வாகளே... அப்படியும் இருக்குமோ... ம்க்கூ... எதுவாயிருந்தாலென்ன வவுத்தைவுட்டு கழிஞ்சா... சரி!'

அவளுக்கு மூச்சுவிடக்கூட முடியாத திணறல். முகத்தில் வலியை தாங்கிக்கொள்ள முடியாத கோணல்கள். அடிக்கடி அடி உதட்டை அழுந்தக் கடித்துக் கொண்டாள். சீட்டில் வாகாகச் சாய்ந்து கொண்டாலும், நெளிந்து கொண்டே யிருந்தாள். கல்லெறி பட்டுத் துடிக்கிற பறவையின் வேதனை கண்களில் அப்பியிருந்தது.

இதையெல்லாம் கவனிக்காமல்... எரிச்சலும் கோபமுமாக முத்தையாவுடன் வெடித்துச் சிதறிக் கொண் டிருந்தார் சண்முகம்.

சூழ்ந்து சுற்றிய உள்ளூர்க்காரர்களுடன் பேசிக் கொண்டே, சிகரெட்டை அணைத்து விட்டு வண்டியில் ஏறினார், டிரைவர்.

அவரையே கடுப்புடன் கவனித்துக் கொண்டிருந்த சண்முகம், உணர்ச்சியை மறைக்காமல்... சள்ளென்று சீறினார்.

''வந்ததே லேட்டு. இங்கயும் கால்மணி நேரம் போட்டா எப்படி சார்? அவசர ஜோலிகளுக்குப் போக வேண்டாமா, நாங்க?''

''மணி ஒம்பதாகுது. டிபன் கூட சாப்பிடலே. ஒரு டீயாச்சும் சாப்பிட வேணாமா? நாங்களும் மனுஷங்க தானே, சார்?''

''அதுக்கும் ஒரு லிமிட் இல்லே. எவ்வளவு நேரம்தான் லேட்டாகுறது?''

''அவ்வளவு அர்ஜென்ட்னா டாக்சியிலே போக வேண்டியது தானே. காருக்கு எதுக்கு வாரீக...? எங்க உசுரை வாங்கவா?''

''நாங்க காருக்கு வரலேன்னா ஆயிரம் ஆயிரமா சம்பளம் யார்கிட்டே வாங்குவீக?''

''ஆமா! ஊர் பூராவுக்கும் இவருதான் படியளக்கிறவரு. நீங்க வரவும் வேணாம், சம்பளம் தரவும் வேணாம். பேசாம இருங்க சார்.''

“பேசாம இருக்கவா? நானா? என்னைப் பேச வேண்டாம்னு சொல்ல, நீ யாரு? ஆஃப்ட்ரால் ஒரு டிரைவர். நீயா, என் வாயை மூடுறது?”

“சொல்லிட்டேன்... மரியாதையா பேசணும். வார்த்தை தடிச்சா... அப்புறம், நாறிப் போகும். ஆமா, இப்ப என்னய்யா செய்யணும், ஒனக்கு? ரொம்ப முறுக்குறீயே... என்னமோ பெரிய இவரு கணக்கா...”

வார்த்தைகள் தடித்து, உணர்ச்சிகளில் உஷ்ணம் ஏற, சத்தம் உயர்ந்து, சண்டையாக வந்து முடிய...

பஸ் முழுவதும் செய்வதறியாது திகைத்துப் போயிருந்தது. கண்டக்டர் அவசரமாக முன்பக்கம் ஓடிவந்தார்.

“என்ன இங்க கசகசப்பு. வார்த்தையை நிறுத்துங்க. வீண் சண்டை எதுக்கு? நீங்க சும்மா இருங்க சார்... அண்ணே, நீங்க ‘கம்’முன்னு வண்டி எடுங்க...”

‘என்ன செய்யணும்’ என்ற வழி அனைவருக்கும் தெரிந்துவிட்டது, கண்டக்டரைப் பின்தொடர்ந்து, சண்முகத்தை யும் டிரைவரையும் கண்டித்து, சமாதானப்படுத்துகிற சத்தங்கள்.

பார்வதி உள்ளுக்குள் பயந்தாள். பதைத்தாள். புரு ஷனைப் பேசாமலிருக்கச் சொல்ல நினைத்தாலும், ஆயாசத் தில் கண்களை மூடிக் கொண்டாள்.

கோபத்தின் கடுகடுப்போடு டிரைவர் வண்டிக்கு உயிரூட்டினார். காற்று உள்ளுக்குள் வந்தது. புழுக்கமும் நசநசப்பும் ஒரு இனிய சுகமாக மாறியது. சண்முகத்திற்குள் மட்டும் ஒரு கொதிப்பு.

'இந்த மீசைக்காரன் எம்புட்டு திமிரா பேசிட்டான்? அடிக்கவர்ரவன் மாதிரி அரட்டுறானே... ஊர்ப்பயகளும் அவங்கூட சேர்ந்துக்கிட்டு, என்னை சத்தம் போடுறானுகளே... எம்புட்டு கேவலமாப் போச்சு'

அடிபட்டு வெகுண்ட நாயாக கண்டக்டரைப் பார்த்தார். பார்வையில் பகைமை அனல் பறந்தது. கண்டக்டர் பின்பக்கத்தில் டிக்கட் கொடுப்பதில் கவனமாயிருந்தார். அடுத்த ஸ்டாப் வருவதற்குள் டிக்கட் கொடுத்து முடிக்கணும்.

அந்த டவுன் பஸ் கிழக்காக ஓடியது. எலும்பு தெரிய மெலிந்து கிழட்டு நோயாளியாக குற்றுயிராக கிடந்த மெட்டல் ரோட்டில் பஸ் குதியாட்டம் போட்டுக் கொண்டே சீறிப் பாய்ந்தது.

''டிக்கட்... டிக்கட்... டிக்கட் எடுங்க சார்...''

''சில்லரையா குடுங்க. நோட்டாக நீட்டுனா நா சில்லரைக்கு எங்க போக? 20 பைசா இருந்தா குடுங்க. 4 ரூபாயா தர்ரேன்''

''ஏம்மா, குழந்தையை வச்சுக்கிட்டு நிக்கிறீக! தம்பி, தள்ளியிரு. எம்மா இங்க உக்காருங்க. டிக்கட், டிக்கட்...''

ஒரு யந்திரச்சுறுசுறுப்போடு இயங்கிக் கொண்டிருந்தார் கண்டக்டர்.

பார்வதி, வதைத்தெடுக்கிற அயற்சியிலும், சோர்விலும் கணவனுக்காகவும் அழுது கசிந்தாள்.

ஆலங்குளத்தைத் தாண்டும்போது பஸ் நிரம்பி வழிந்தது. காற்று நிற்கக்கூட முடியாமல் மனித அடைசல். சதையும் எலும்புமாக குழைக்கப்பட்டு மனிதர்களை கிட்டித்து விட்டதைபோல, பஸ் திணறியது.

அவமதிக்கப்பட்டு, புண்பட்டுப்போன உள் மனக் காயங்களின் வேதனையோடு சண்முகம் உள்ளுக்குள் முணங்கிக் கொண்டிருந்தார். புழுக்கமும் நசநசப்பும் வேறு இச்சிலாத்திப் படுத்தியது.

''ஆடுகளை அடைச்சமாதிரி ஆளுகளை ஏத்துறீகளே, இது என்ன நியாயம் சார்?''

''என்ன சார் செய்றது? ஏறிக்கிட்ட நீங்க, ஏத்தாதீங்கிறீக. காத்துக்கிட்டிருக்கிற பயணிகள், 'கையை காட்டுனா நிக்காம போறானே'ன்னு எங்களைத் திட்டுவாங்க. நாங்க யாருக்குப் பதில் சொல்றது சார்? ஜனங்களோட தேவைக்கேத்தாப்புல கூடுதலா பஸ்விட வேண்டிய கவர்மென்ட்டை எதித்து ஒரு வார்த்தைக்கூடப் பேசமாட்டீக. உங்களுக்கு இளைச்சவங்க நாங்கதான்; எங்களைத் திட்டித் தீத்துக்கிடுறீங்க... இது என்ன சார் நியாயம்? நாலு வண்டிகளை ஓட்ட வேண்டிய ரூட்லே ஒரு வண்டியை ஓட்டுற சர்க்கார், உங்களையும் எங்களையும் கீரியும் பாம்புமா ஆக்கி, வேடிக்கை பாக்குது சார்''

கண்டக்டரின் சொற்கள் சண்முகத்திற்குள் நெருஞ்சி முட்களாக விழுந்து சிக்கிக் கொண்டன. நினைவு இழைகள் முடிச்சு விழுந்து திகைத்து நின்றன. அவருள் திரண்ட மழை மேகங்கள், தென்றலுக்காகக் காத்திருந்தன. வெக்கை மிகவும் அடங்கியிருந்தது.

ஆயாசத்திலும் அயற்சியிலும் கண்களை மூடிக்கிடந்த பார்வதி, கொடிய வலியை தாங்க முடியாமல் ''ஹ் ஹா'' என்று கீச்சிட்டாள். அந்த அலறலில் பதறிப்போன சண்முகம் திரும்பிப் பார்த்தார்.

அடிவயிற்றை தாங்கிப் பிடித்துக் கொண்டு வேதனையில் கத்தினாள். முகமெல்லாம் பொடிப் பொடியாய்

வியர்வை. அடி உதட்டை ரத்தம் வரக் கடித்தாள். முகம் கோணிக்கொண்டே போனது. கால்கள் சீட்டுக்கடியில் விறைத்துக் கொண்டு, நீண்டு அகல விரிந்துகொண்டு...

சண்முகம் ஆடிக்குலுங்கிப் போனார். அடிவயிற்றில் ஏதோ புரண்டது. பயத்தில் உறைந்து கொண்டிருந்தார்.

''ஐயய்யோ... பிரசவவலியா? பஸ்ஸுக்குள்ளேயா? அடப் பாதரவே, நடுக்காட்டுலே... ஓடுற பஸ்லே... என்ன செய்ய முடியும்?''

பின்சீட்டில் அமர்ந்திருந்த பெண்கள் பார்வதியின் துடிப்பை கவனித்து விட்டனர். பதறிப் பதைத்து எழுந்தனர்.

''வாங்கய்யா இங்கிட்டு, அட, விலகுங்கய்யா!'' பெண்கள் சண்முகத்தையும், முத்தையாவையும் அதட்டி அப்புறப்படுத்தினர். பரபரப்பாகச் செயல்பட்டனர்.

''ஐயய்யோ... மறைப்புக்கு ஒரு சீலையாச்சும் வேணுமே. யார்கிட்டேயாச்சும் இருக்கா?''

''முத்தம்மா, நீ தலையை தாங்கிப் பிடிச்சுக்கோ. ஏய் தாய், இங்கவா. காலு ரெண்டையும் தூக்கி சீட்லே போடு... மெல்ல மெல்ல... பாத்து... பாத்து''

உத்தரவுகள் பறந்தன. பஸ்ஸுக்குள் பரபரப்பும் பதைப்பும் உச்சகட்டத்தை எட்டியது. ஒருத்தி பாலியஸ்டர் சேலையை அவசரமாக எடுத்துத் தந்தாள். பார்வதி படுத்திருந்த சீட்டைச் சுற்றிச் சேலையைப் பிரித்து இரண்டு பெண்கள் பிடித்துக் கொள்ள மூன்று பெண்களும் மறைப்புக்குள் நின்று பார்வதிக்கு ஆறுதல் சொல்லி, யோசனைகள் கூறி, வாய்த்த கைப்பக்குவம் செய்தனர்.

பஸ் முழுவதும் ஒரே உணர்ச்சி மயம். ஒருத்தர் உத்தரவுக்கு ஓடுவதற்கு நூறு பேர் முந்தினர். ஒவ்வொருத்தரும் ஏதாவதும் செய்ய வேண்டுமென்று துடித்துக் கொண் டிருந்தனர். காற்றுக் கூட நிற்க முடியாத அந்த பஸ் முழுவதும் மனிதாபிமானம் விஸ்வரூபமாக எழுந்து நின்றது.

சண்முகத்திற்கு முகம் கறுத்துவிட்டது. அவமானமும் லஜ்ஜையும் உயிரைப் பிடுங்கித் தின்றது. ஓரிரு நிமிஷத்திற்குள் பரிதாபத்திற்குரிய இழிபிராணியாக தாழ்ந்து நிற்கிற அவலம் அவருக்குள் அறுத்தது. அலைக்கழித்தது. அழக்கூடத் தோன்றாத ஸ்தம்பிப்பில் உறைந்து நின்றார்.

'அட... இதென்ன கொடுமை...? இப்படியாகிப் போச்சு' போக்கிடமறியாத குருட்டு ஈயாக மனம் அலை மோதி அங்கலாய்த்துக் கொண்டிருந்தது.

'அர்ஜெண்டா ஆஸ்பத்திரி போய்ச் சேரணுமே. நம்ம அவசரத்துக்கு பஸ் போகுமா? இடையிலே எத்தனை ஸ்டாப்? இன்னும் ஏழு மைல்லாச்சும் இருக்குமே... ஏறியிருக்கிற ஆளுகளை இறக்கி விடுவதற்காவது ஸ்டாப்புகளிலே நின்னா கனுமே. நின்னு நின்னு போனா... அரைமணி நேரமாவது ஆயிடுமே. அதுக்குள்ள பார்வதிக்கு என்ன ஆகுமோ'

மனசு மருகித் தவித்தது. கண்ணுக்குள் உறுத்தல். கண்களின் ஓரங்களில் நீர்ப் பிசுபிசுப்பு. சிறகொடிந்த பறவையாகத் துடித்த மனசோடு, ஏக்கமும், சோகமுமாய் பார்வையால் அலைந்தார். அனைவர் கண்களிலும் திகில்... பயம்... அனுதாப உணர்வுகள்...

'பார்வதிக்கு என்ன ஆகுமோ' என்ற சிந்தனை குலை நடுங்க வைத்தது. சர்வாங்கமும் பயத்தில் நடுங்கி ஒடுங்கியது.

'முகம் முறிச்சு சண்டை போட்ட டிரைவர்கிட்டே, எந்த முகத்தோட எப்படிச் சொல்றது? என்ன கேட்பது?''

மனசு பலதையும் எண்ணி மருகியது. தவித்தது. பலமெல்லாம் வடிந்துவிட்டதைப் போல... மருட்சியும் சோகமும் அவரை மௌனத்தில் புதைக்க... செய்வதறியாமல் திகைத்து நின்ற போது-

கண்டக்டரின் சத்தம் ஓங்கி ஒலித்தது:

''பிளீஸ்... எல்லோரும் இந்த ரெண்டு சீட்டை விட்டுட்டு பின்னுக்குப் போங்க... போங்க சார்... ஏய் தம்பி. போப்பா அங்குட்டு''

அவரையும் மீறிக்கொண்டு பஸ்ஸுக்குள் மனிதர்களின் கூச்சல்... புலம்பல்... அனுதாப வார்த்தைகள்...

''டிரைவரண்ணே, இப்ப என்ன செய்றது? ஏதாச்சும் செய்யணுமே?''

''அதுதான் நானும் யோசிக்கிறேன்'' என்ற டிரைவர், சட்டென்று சொன்னார்: ''இடையிலே இறங்க வேண்டிய வங்களை திரும்பி வரும்போது எறக்கி விட்டிடுவோம். எந்த ஸ்டாப்புலேயும் நிக்காம, 'சல்லு'ண்ணு வண்டியை அழுத்தி, நேரா ஆஸ்பிட்டலுக்கு விட்டிடுவோமா?''

''விடுங்க. சீக்கிரமா விடுங்க. எவ்வளவு ஹைஸ்பீடுலே போக முடியுமோ... அழுத்திருங்க... நேரா ஆஸ்பத்திரிக் குள்ளேயே விட்டிடுங்க''

''ரூட்டைவிட்டு விலகிப் போனா... நிர்வாகம் மெமோ குடுப்பாங்கப்பா''

''குடுக்கட்டும் குடுக்கட்டும் அதையெல்லாம் பார்த்தா, ஒண்ணும் நடக்காது''

பஸ் எங்கும் நிற்காமல் விரைந்தது.

முகத்திலும் கழுத்திலும் வழிகிற வியர்வையைக் கூட துடைத்துக் கொள்ளாமல், டிரைவர் ஸ்டீயரிங்கை சுழற்றினார்.

கண்டக்டர் டிக்கட் கட்டுகளையெல்லாம் பைக்குள் போட்டுவிட்டு, சிறுவர்களைப் பின்னுக்குத் துரத்தினார். மற்றவர்களை அதட்டி உட்காரச் சொன்னார்.

சேலை மறைப்புக்குள் பார்வதி துடித்துக் கொண்டும், அலறிக் கொண்டும், அவளைச் சுற்றி மூன்று பெண்கள் வியர்வை வழியப் பராமரித்துக் கொண்டும்... ...

பார்வதி அலறும் போதெல்லாம் சண்முகத்தின் உயிர்ப் பறவை துடித்தழுதது. அவரை எதிர்பார்க்காமல், காரியங்கள் சக்கரம் கட்டி ஓடிக் கொண்டிருந்தது. அடுத்த ஏழாவது நிமிஷத்தில்-

அனைத்துச் சட்ட விதிகளையும் அலட்சியப்படுத்தி விட்டு, அந்த டவுன் பஸ் அரசு மருத்துவமனைக்குள் பாய்ந்து வட்ட வடிவமாக வளைந்து, வாசலோரத்தில் குலுங்கி நிற்க...

மருத்துவமனையே அதிர்ந்து குலுங்கி ஓடிவர...

டிரைவர் வண்டியை நிறுத்தி விட்டு இறங்கினார். ஆறாகப் பெருக்கெடுத்தோடிய வியர்வையைக் கழுத்துத் துண்டால் அழுந்தத் துடைத்துக் கொண்டார். கண்டக்டர், அவசரமாக இறங்கினார். திகைத்து நின்ற நர்ஸுகளிடம் ''ஸ்ட்ரெட்சர் கொண்டு வாங்க, சீக்கிரம் டெலிவரிகேஸ்'' என்று கத்தினார். அந்த அதட்டலில் வேலைகளுக்குச் சிறகு முளைத்து, வினாடி வேகத்தில் பறந்தது. பார்வதி, ஆஸ்பத்திரிக்குள் கொண்டு செல்லப்பட்டாள்.

அவரவரின் 'அவசர வேலை'களையெல்லாம் மறந்து அனைவரும் வராண்டாவில் திகைத்து நின்றனர், மனிதர்களாக!

டிரைவரும் கண்டக்டரும் ஆசுவாசப் பெருமூச்சுடன் சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு ஒருவரையொருவர் களிதுள்ளப் பார்த்துக் கொண்டனர்.

டிரைவர் மீசையை நீவிக்கொண்டே மகிழ்ச்சியுடன், ''எப்படியோ... நல்லபடியா கொண்டு வந்து சேர்த்தாச்சப்பா...''

''ஆமண்ணே, இப்பத்தான் எனக்கு மூச்சே விட முடியுது'' மனசுக்குள் பொங்கிப் பிரவகித்த திருப்தி. சந்தோஷம் முகத்தில் பிரகாசிக்க ஒருவரையொருவர் குதூகலப் பார்வையால் தழுவிக் கொண்டனர். அந்தப் பார்வையில் மானுடம் ஜெகஜோதியாக ஒளி வீசிக் கொண்டிருந்தது.

முகம் கறுத்து, செய்வதறியாமல் கைபிசைந்து நின்ற சண்முகத்திடம் வந்தனர். ''நீங்க ஆஸ்பிட்டலுக்குள்ளே போய், ஆக வேண்டியதைப் பாருங்க. நல்லபடியாக பாத்துக் கோங்க''

சண்முகம் தலையாட்டினார். கண்களில் கண்ணீரோடு சேர்ந்து கொண்டு, 'எதை எதையோ' நினைத்துக் கொண்ட ஏதேதோ உணர்ச்சிகள் திமிறிக் கொண்டு ததும்ப... ...

''பரவாலே... ஒண்ணும் மனசுலே வச்சுக்காதீக. அங்க போய் கவனிங்க'' என்ற டிரைவர், சண்முகத்தின் கையைப் பற்றிப் பரிவோடு அழுத்தினார். ஆயிரம் விஷயங்களைப் பேசி முடித்துவிட்ட அந்த அழுத்தலோடு, வண்டியில் ஏறினார்.

''வண்டிக்கு வர்ரவங்க... வாங்க. க்விக்'', என்று சத்தம் கொடுத்த கண்டக்டர் வண்டியில் ஏறிக் கொள்ள...

வராண்டாவிலும், மரநிழல்களிலும் அன்பின் வடிவங்களாக - மனித உன்னதங்களாக - நின்று கொண்டிருந்த அத்தனைபேரும் அவசர அவசரமாய் ஓடி வந்தனர். ஏக காலத்தில் ஏற முயன்று - ஒருவரையொருவர் இடித்துக் கொண்டு, திட்டிக் கொண்டு, ஈரமில்லாமல் மிதித்துக் கொண்டு...

எல்லாருக்கும் இடம் பிடிக்கிற அவசரம்... ஆத்திரம்...

சிறுவர்களைக் கசக்கிக் கொண்டு குழந்தைகளைக் கசக்கிக் கொண்டு நடந்த இந்த யுத்தத்தைப் பார்த்து உள்ளுக் குள் சிரித்துக் கொண்டார் விஷய ஞானமுள்ள கண்டக்டர். மெல்லிய வியப்பு அவருள் படர்ந்தது.

''இந்நேரவரை இங்கிருந்த மனுஷங்க எல்லாம் என்ன மாயமாய் மறைஞ்சுட்டாங்க! அதுக்குள்ளே மாறிட்டாங் களே... சமூகப்பிராணிகளாக, சண்டைப் பிரஜைகளாக!

பஸ்ஸுக்குள் மறுபடியும் வெக்கை.

***செம்மலர் - ஜூலை, 1985***

# ஜீவிதத்தின் உள்வட்டம்

**செ**ரக்கைகளைத் தட்டிச் சடசடத்துக் கூவிய தலைக்கோழி, செல்லம்மாவின் உறக்கத்தைத் தட்டிப் பறித்துக் கொண்டது. ‘அவக், தொவக்’ கென எழுந்த செல்லம்மா... கூந்தலை உதறி முடிந்து கொண்டாள்.

‘அதுக்குள்ளே விடிஞ்சிருச்சா’ என்று சலிப்போடு முணுமுணுத்துக் கொண்டாள், கதவைத் திறந்து வெளியே வந்தாள். கும்மென்ற இருட்டு சூழ்ந்து கொண்டது. கீழ்திசையின் அடிவானம் முகம் வெளுக்க ஆரம்பித்திருந்தது.

‘அடியாத்தே... நேரம் ஓடிப் போச்சே! அலுத்துக் களைச்ச உடம்பை ஒறக்கம் ஒரே அமுக்கா அமுக்கிப் புடிச்சு... ஊம்...’ என்று சுயவிமர்சனமாக முணங்கினாள்.

இன்னும் ஏழு மைல் தூரம் நடந்துதான் வேலைத் தளத்துக்குப் போகமுடியும் என்ற நினைவு, அவளுக்குள் ஒரு மலைப்பை ஏற்படுத்தினாலும், அவளது கால்களுக்கு சக்கரம் கட்டிவிட்டது. பரபரவென்று மாரியப்பன் வீட்டுத் தொழுவத்துக்குச் சென்றாள்.

சாணம் எடுத்து வந்து மண் சட்டியில் கரைத்தாள். சளப் சளப்பென்று தெளித்தாள். அடுப்புச் சாம்பலை அள்ளிய கை யோடு, அதே சாம்பலில் பல்லையும் துலக்கிக் கொண்டாள். வீட்டைப் பெருக்கினாள்.

பாயைவிட்டு விலகி உருண்டு கிடந்த பெண் குழந்தையின் பாவாடையை இழுத்து மூடினாள். கோழையை வடித்துக் கொண்டு உறங்கிய சின்னவன் மீது பழைய சேலையை விரித்து மூடினாள்.

பரபரத்து வேலை செய்த செல்லம்மா... பிள்ளைகளைப் பார்த்த பார்வையை விலக்காமல் நிலைத்து நின்றாள். மனசுக்குள் ஒரு சோகம் திரண்டு வந்து, கண்களுக்குள் மோதி உறுத்தியது. படபடத்த இமைகள் ஈரத்தில் நனைந்தன.

'இப்பப்போனா... வீடு வந்து சேர்ரதுக்குள்ளே பொழுது சாஞ்சுடும். அதுவரைக்கும் இந்தப் 'பச்சை மண்ணுக' என்ன செய்யும்! தாயில்லாப் புள்ளைகபோல தெருக்காட்லேதான் திரியணும். பாவம்! ஒருவாய் கஞ்சியை ஊத்தி குடிக்க வைச்சு 'கங்' குளுரப் பாக்குறதுக்கு, நமக்கு கொடுத்து வைக்கலியே...'-

இந்த எண்ணம் ஒரு துன்பமாகச் சுரந்து மனசுக்குள் நிரம்பித் தளும்பியது. ஏதோ ஒரு பாரம் ஏறிக் கொண்டது போல கனத்தது. நினைவுகளை ஒரு பெருமூச்சாக்கி... காற்றில் கரைத்தாள்.

கஞ்சியை ஊற்றிக் குடித்தாள். புள்ளைகளுக்கு ரெண்டு வேளைக்குச் சரியா வருமா என்று பானையில் உள்ளதைச் சரிபார்த்துவிட்டு, மூடி வைத்தாள்.

டயர் செருப்பைக் காலில் மாட்டிக்கொண்டாள், ஒரு பழைய சாக்கை மடித்து வைத்துக் கொண்டு, கட்டைக் குச்சியையும் எடுத்துக் கொண்டாள். 'கொட்டு மம்பட்டி'யை எடுத்துத் தோளில் கோர்த்து மாட்டிக் கொண்டாள்.

கூட்டுக்குள் கத்திய கோழிகளைத் திறந்துவிட்டாள்.

கதவைச் சாத்துவதற்கு முன்பாகக் குழந்தைகளை ஒருமுறை பார்த்துக் கொண்டாள். பார்வையினாலேயே அள்ளி மனசுக்குள் அணைத்துக் கொள்பவளைப் போலப் பார்த்தாள்.

இதயத்தின் அடியாழத்திலிருந்து சீற்றத்துடன் வெளிப் பட்ட பெருமூச்சுடன் தெருவில் இறங்கினாள். இருட்டு இன்னும் அடர்த்தி குறையாமலிருந்தது. இலேசாகப் பனியடித்தது. புளித்த கஞ்சி வயிற்றுக்குள் குளிர்ந்து தேகம் முழுவதும் புல்லரிக்க வைத்தது.

வாடைக்காற்று வேகமில்லாமல் வீசியது. பனியின் வீர்யத்தை அதிகப்படுத்தியது.

அடைமழை அடைச்சுக்கிட்டு பேயவேண்டிய இந்தப் பொரட்டாசி மாசத்துலே, இப்படி பனி கொட்னா என்னத்துக்காகும்? மழை எப்படி எட்டிப்பாக்கும்? 'மானம்' பாத்து மனசு இறங்கி மழை பெய்யாட்டா... மனுச மக்க எப்படி பொழைக்கிறது? காட்லேதா என்ன வேலை நடக்கும்? கூலியாளுகளுக்கு என்ன வேலை கெடைக்கும்?

'பூமியுள்ள சம்சாரிகளாச்சும்... இந்த வறட்சியிலேயும் கெத்துவிடாம இருந்துருவாக. அன்னாடம் பாடுபட்டு பானை கழுவுற கூலி ஜனங்க வூடுகள்லே என்னத்தை வைச்சி உலை காய வைக்குறது? ம்ஹூம்... வேலையத்து விதியத்து... இப்படி வேந்தட்டிக் கெழங்கு வெட்டி, வித்து... சே! இது என்ன பய பொழப்பு, சீரழிஞ்ச பய பொழப்பு!'

நினைவுகள் வாழ்வின் அவலத்தைச் சுற்றி மொய்க்க, செல்லம்மா நடையைத் துரிதப்படுத்தினாள். மையிருட்டு கண்களை மறைத்தாலும், பாதங்கள் பட்டு வெளுத்துப்போன ஒற்றையடிப் பாதை, இருட்டுக்குள் விரித்துப் போட்ட

வெள்ளை நாடாவைப் போல வளைந்தும் நெளிந்தும் புலப்பட்டது.

பழகிய பாதை... பாதைக்குப் பரிச்சயப்பட்ட பாதங்கள்... தயக்கம் எதுவுமில்லாமல் கால்கள் முன்னேறிக் கொண்டிருந்தன.

இன்னும் ஏழு மைல்கள்... இடையில் நாலைந்து ஊர்கள்... வேலைத் தளத்துக்குப் போய்ச் சேர்றதுக்குள்ளே 'ஆத்தாடி, அம்மாடி'ன்னு ஆயிப்போகும். உஸ்ஸ-ன்னு உக்கார முடியாது. உழுகாமக்கெடக்குற கருசக் காடுகள்ளே ஓடிஓடி மம்பட்டியாலே 'மொங்கு மொங்கு'ன்னு வெட்டணும். முழங்கால் ஆழத்துக்குக் கீழேதான், வேந்தட்டிக் கெழங்கு இஞ்சி போல மண்ணுக்குள்ளே புதைஞ்சி கிடக்கும். அதைக் கண்டுபிடிச்சு, கட்டைக்குச்சியாலே குத்திக் கெளறி... தொடச்சித் தொடச்சி சாக்குக்குள்ளே போடணும்...

சாயங்காலம் வரைக்கும் சளைக்காம தோண்டுனா... மூணு, நாலு கிலோ கெடைக்கும். கொண்டுபோய் காளிமுத்து கடையிலே போட்டா... ஒரு கிலோவுக்கு ஒரு ரூவா இருபது பைசாவாம்...... அவங்க என்ன மறு வெலைக்கு விப்பானோ, யார் கண்டாக? - அவன் குடுக்கிற துட்டுலேதான்... ஒலை காயணும்...

மழையத்துப்போய் வறட்சியாகிப் போனதுனாலே தானே, இந்தப் பஞ்சப் பொழப்பு...! இந்த மாதிரி சீப்பட்டுப் போய் வாழ்றதைவிட.... உசுரை மாய்ச்சுத் தொலைக்கலாம்... நம்ம இருந்துதான், நாட்டையாளப் போறோமாக்கும்...!'

செந்தட்டியாபுரத்து நாய்கள் ரொம்ப விழிப்பாக இருந்தன. கிராமமே அலறிப்போகிற மாதிரிக் குரைத்தன.

அவள் அதைக் கண்டுகொள்ளவேயில்லை. நாய்களை நெருங்க விடாமல், கட்டைக் குச்சியைப் பின்னால் நீட்டிக் கொண்டே அவள் பாட்டுக்கு நடந்தாள்.

பாய்ந்து வந்த நாய்கள் குச்சியை ஒரு மிரட்சியோடு பார்த்துத் திகைத்தாலும், குரைப்பதை மட்டும் நிறுத்த வில்லை. செல்லம்மா 'நிமாண்ட்' நாழியில் ஊரைக் கடந்தாள். ஓடைக்குள் விழுந்தாள். கலகலத்துப்போன மணலில் கால்கள் புதைய, 'பொதுக் பொதுக்' கென்று சப்தம் வந்தது.

வேலிமரத்துக் கிளைகள் முகத்தைப் பற்றிப் பிடிக்க முயல்கின்றன. அதை ஒதுக்கிவிட்டு, முள்ளின் கீறலினால் ஏற்படுகிற காந்தலை உணர்ந்தவாறே விறுவிறுவென நடந்தாள்.

பாதையின் இருமருங்கிலும் நிலம் கரேலென்று விரிந்து கிடந்தது. தாலியறுத்த மலடியைப் போல வெறுமையாகத் தோற்றமளித்தது.

'எந்த மகராசன் புஞ்சையோ... வெள்ளாமைக்கு வழியத்துப்போய் வெம்பரப்பாய் கெடக்கு...'

ஆடி ஆவணி மாசத்துலே பேய வேண்டிய மழை பேஞ்சிருந்தா... காடுக இப்படியா கெடக்கும்? கருசக் காடுகள்லாம் வெதைப்பாயிருக்குமே! நாத்தோ பருத்தியோ... இந்நேரம் முழங்கால் உசரத்துக்கு வந்துருக்குமே...

இந்த மாதிரி இறைவைப் புஞ்சைகளையும் சம்சாரிக இப்படியா சும்மா போட்டு வைச்சிருப்பாக? குப்பை யடிப்போ... உழவடிக்கிறதோ... மொளகா நாத்து நடுறதோ... சன்ன வேலையா நடந்துருக்கும்?

கூலிசனங்களுக்கும் 'நெரிபுரி'யா வேலை கெடைத்திருக்கும்... காலகாலத்துலே கொத்துவாங்கி, காச்சிக்குடிச்சுட்டு, புள்ளைகளோட நேரத்தோடப்படுத்து உறங்கலாம்...

கல்லுமனசா இறுகிப்போய் 'மானம்' கண்ணை மூடப்போய்... பூமி இப்படி சும்மாகெடக்கு? வேலையத்துப் போய் கூலியாளுக ஆலாய்ப் பறக்குற பொழைப்பாயிப் போச்சு...... வேந்தட்டிக் கெழங்கே விதின்னு ஆயிப்போச்சு...

மானம் அயத்துப்போனாலும், பூமி மனுஷனை அயக்காது, அதுலேயும் கருசப்பூமி... அடிவவுத்துலே சேத்து வைச்சிருந்து, பஞ்சகாலத்துலே பஞ்சாய்ப் பறக்குற ஏழைபாழைகளுக்கு ஏதாச்சும் குடுத்துக் காப்பாத்துது. இன்னைய நெலமைக்கு வேந்தட்டிக் கெழங்கு மட்டும் இல்லேன்னா... கூலிமக்க பொழைக்க வழியில்லாம... வேறெ சீமைக்குத்தான் போய்ச் சேரணும். எந்தச்சாமி புண்ணியமோ... கருசமண்ணு இந்த மட்டுக்காச்சும் ஏதோ காப்பாத்துதே...

ஆமநாட்டு நாய்களும் உறங்கிவிடவில்லை. கூட்ட மாகக் குரைத்துக்கொண்டு பாய்ந்து வந்தன. உறக்கச் சடை வோடு முற்றத்தில் நின்ற ஒன்றிரண்டு பெண்கள் நாய்களை அதட்டினர்.

'சேடு... சேடு... கழுதை, சும்மா கெடங்களேன்! விடிஞ்ச பெறகு கள்ளனை வெரட்டிப் பிடிக்கீகளாக்கும்! சே...டு'

நாய்களை அதட்டிய உயர்ந்த குரலை தாழ்த்திக் கொண்டு விசாரித்தனர்...

''யாரது...... இந்நேரம்...... செல்லம்மாவா?''

''ஆமம்மா...''

''என்ன இந்நேரம்? தூரவா?''

''வேந்தட்டிங்கெழங்கு வெட்டப் போறேம்மா புல்லாப்பட்டி காட்டுக்கு.''

''அடே... யம்மா... சல்லம் பட்டியிலேருந்து புல்லாப் பட்டிக்கா...? ரொம்பத் தூரமாயிருக்குமே...''

''தூரந்தாம்மா. என்ன செய்றது? மழையில்லாம வேலையுமில்லே ஜோலியுமில்லே... எப்பாடு பட்டாச்சும் கொதிக்குற வவுத்தை அமத்தணுமே யம்மா...''

''அதுவும் சரிதான். மழை செய்ற கூத்துலே மனுஷப் பொழப்பு, நாய்ப்பொழப்பா போச்சு... சரி... ... செல்லம்மா... ... காலடி பாத்துப்போ''

''சரிம்மா...''

ஆமநாடு பின்னால் நழுவிக் கொள்ள, ஆற்றுக்குள் விழுந்தாள், பனந்தோப்பில் ஏறினாள். வண்டிப் பாதைக்கு நடுவில் நீண்ட ஒற்றையடிப் பாதையில் நடையை எட்டிப் போட்டாள்.

நாய்ப்பொழப்பா போச்சு... என்று அந்தப் பெண்கள் அனுதாபப்பட்டது, நினைவுக்கு வந்தது. அவமான உணர்வு மனசில் ரம்பம் போட்டு அறுத்தது. அவளும் உணர்ந்து சலித்த அவலம்தான் என்றாலும், மற்றவர்கள் உதடுகளிலிருந்து அந்த அவலத்துக்கு அனுதாபம் சொல்லும் போது... ஒரு கேவலத்தை உணர்கிறாள். இப்படியாகிப் போச்சே... என்று தன் நிலைமையை எண்ணி எண்ணி கைத்துப் போகிறாள்.

'இதைவிட செத்துத் தொலைக்கலாம்... இந்தப் பூமியிலே இருந்து பட்டத்தைக் கட்டி ஆள போறோ மாக்கும்...!'

கீழடிவானத்தின் வெளுப்பில் பிரகாசம் தெரிகிறது. துண்டு துக்காணியாகக் கிடந்த மலட்டு மேகங்களின் விளிம்புகள் கன்றிச் சிவந்து கிடந்தன.

பாதையின் இருபக்கங்களிலும் அடர்த்தியான வேலிமரக் காடுகள். கால் வைக்க இடமில்லாமல் புதர்போல் வளர்ந்து கிடந்தது. சுவர்க்கோழியின் 'ஙீ...' என்ற இரைச்சல் காதைக் குடைவது போலிருந்தது.

வேலிமரக் காட்டின் முதுகுக்குப் பின்னால் பதுங்கி நின்ற வலையபட்டியைக் கடந்து செல்லும் போது, ரத்தப் பிரகாசமாய் பொழுது தலைதூக்கித் தகதகத்தது. நடையின் வேகத்தில் கட்கத்திற்குள் வியர்த்துக் கசகசத்தது. நாசிக் கடியிலும் வியர்வை மணிகள் நழுவி விழுந்தன.

மெட்டல்ரோடு குற்றுயிரும் குலையுயிருமாகக் கிடந்தது. கிடங்கும் மேடுமான வெறும் பாதையில் கருங்கல் சல்லிகளைத் தாறுமாறாகப் பரப்பி வைத்தாற் போலிருந்தது. கால்விரலைப் பதம் பார்க்கிற கற்களைக்கூட குனிந்து பார்க்காமல் 'வேகு, வேகு' என்று நடந்தாள்.

மழையில்லாத காட்டு ஜனங்களுக்கு சர்க்கார் என்னமோ வேலைக, தான்யம்... துணி மணி ஒசியா... மாட்டுக்கடன் எல்லாம் தர்ரதாக ரேடியோவுலே சொல்லுதாக... இங்கே ஒரு எழவையும் காணலே... ஏதாச்சும் குடுய்யான்னு கேக்கலாம் னாலும்... அந்தப் பாழாப் போற சர்க்கார் எங்கயிருக்குன்னும் தெரியலியே... இந்த பட்டிக்காட்டலே கெடக்குற ஏழை

பாழைகளை... சர்க்கார் மட்டுமா... சாமிகூட ஏறெடுத்துப் பாக்காது...

தூரத்தில் கூட்டமாய் வரிசையாக மனிதர்கள் பரபரக்கிற தோற்றம். எல்லாம் இவள் ஊரைச் சேர்ந்த கூலி மக்கள்தான். வேந்தட்டிக் கிழங்கு வேட்டைக்காரர்கள்தான்.

'எம்மாடீ... எம்புட்டுத் தொலைவுக்குப் போயிட்டாக? நம்ம ஊருச் சிறுக்கிக... போறப்போ வாரியான்னு ஒரு வார்த்தை கேட்டாளுவளா? அரவமில்லாம முந்தி ஓடியிருக் காகளே... என்னத்தை அள்ளுதுக்கு இப்படி 'கமுக்கமா' ஓடுதாளுவளோ...'

மனசுக்குள் ஜ்வாலை விட்டெரிந்த 'வெளத்தை' வாய்விட்டே முணங்கிக் கொண்டாள். கூட ரெண்டு கெட்ட வார்த்தைகளையும் உதிர்த்துக் கொண்டாள்.

நடக்க நடக்க தொலைவு தொலையவில்லை. தொடைச் சதைகளில் வலியெடுத்தது. இடுப்பைச் சுற்றிக் கடுகடுத்தது. உடலின் ஒவ்வொரு சதைத் துணுக்கும் 'உட்கார், உட்கார்' என்று ஓய்வுக்காகக் கெஞ்சியது.

ஒரு போட்டியின் வைராக்யத்தில் உடம்பின் அவஸ்தை களை தாங்கிக் கொண்டு மேலும் துரிதமானாள். 'ஏய் பலவற்றைச் சிறிக்கிகா... உங்களுக்கு நா எளச்சவளா...? பாத்துருவோம்'.

குளிர்ச்சியான காலை வெய்யில். இலேசான வாடைக் காற்று வியர்வையைப் புணர்ந்தது.

வானத்தை முத்தமிடுகிற உயரத்தில் நிமிர்ந்து நின்ற சிமிண்டாலையின் புகைக் குழாயிலிருந்து வெண்ணிற மேகங்கள் கூட்டமாகப் படையெடுத்தன. தென்மேற்குத்

திசையில் அணிவகுத்து பயணப்பட்டன. வானத்தில் போடப்பட்ட வெள்ளிரோடு போலத் தோற்றமளித்தது.

நடை நடையாக இருக்க... மனசு பிள்ளைகளிடம் ஓடியது.

இந்நேரத்துலே சின்னவன் முழிச்சிக்கிட்டு என்னைத் தேடுவான். ம்மா... யம்மா... ன்னு சிணுங்கிச் சிணுங்கி அழுவான். பாவம், அந்தப் பொம்பளைப் புள்ளை... அவளாலே எப்படி அந்தப் பயலை சமாளிக்க முடியும்?

கஞ்சியைத்தா ஊத்திக்குடுப்பா. அதுதானே முடியும்! தாயைத் தேடுற பச்சை மண்ணுக்கு.. கஞ்சியைக் காட்டுனா போதுமா?

செல்லம்மாவின் பெற்றமனசு ஏங்கித் தவித்தது.

இதயத்துள் ஒரு சோகம் திரண்டு வந்து நின்று கொண்டது. கண்ணுக்குள் வந்து மோதி, குத்தல் எடுத்தது.

புள்ளைக முகமறிஞ்சு பேசிச் சிரிச்சு, பசியறிஞ்சு கஞ்சி குடுத்து பார்த்துப் பூரிக்க கொடுப்பினை இல்லாமல் போயிற்றே... எல்லாம் அந்தப் பாவி மனுசனாலே வந்த வெனை.

ஓடியாடி ஒழைச்சு சம்பாதிச்சுப் போட வேண்டிய மனுசன், இந்த மணிக்கொத்துப் புள்ளைகளை மறந்துட்டு... ஊர்ப்பட்ட ஒரு சிறுக்கியை இழுத்துக்கிட்டு ஓடிட்டான் பொட்டைச் சிறுக்கிநா பொழப்புக்காக இப்படி நாயா அலைஞ்சு... காட்லே சீரழிய வேண்டியிருக்கு...

தன்னையும் குழந்தைகளையும் தவிக்க விட்டு விட்டு ஓடிப்போன புருஷனை நினைக்கிற கணத்தில் சண்டாளமாக வெளம் பொங்கினாலும், அந்தக் கோபம் மறு நிமிஷமே இழப்பின் சோகமாகக் கனிந்து மனசை அழுத்துகிறது.

நெஞ்சுக்குள் மோதித் தழும்புகிற வேதனை, கண்களின் ஓரங்களில் நீராகக் கசிகிறது...

கம்மாபட்டியைக் கழித்துவிட்டாள். சுள்ளென்று உரைக்க வேண்டிய ஏறுவெய்யில் இதமாக இருந்தது. மெட்டல் ரோட்டை விட்டு விலகி, வெறுமையாகிக் கிடந்த கண்மாயுக்குள் இறங்கினாள். குறுக்குப் பாதையில் நடந்தாள். கண்ணில் சூரிய வெளிச்சம் ஊசியாகக் குத்தியது. ஆயிற்று... இதோ வந்தாகிவிட்டது. இன்னும் ரெண்டுமைல்தான். புல்லப்பட்டி கருகக்காடு.

ஏர்முகம் பாராமல் ஏங்கிப் போய் வெம்பரப்பாகக் கிடக்கிற கருகக்காட்லே மொங்கு, மொங்குன்னு வெட்ட வேண்டியதுதான். முழங்கால் ஆழத்துக்குக் கீழே இஞ்சி போல புதைஞ்சு கிடக்கிற வேந்தட்டிக் கிழங்கை குத்திக் கிளறி எடுக்க வேண்டியதுதான். எம்புட்டுக் கிடக்குதோ... அம்புட்டுக் காசு...

ஏதோ, யோகமிருந்து நாலு கிலோவாச்சும் கெடச்சா... அஞ்சு ரூவா சம்பளமாவது கெடக்கும்... அந்தத் துட்டைப் பார்க்க... இத்தனை அலைச்சல்... பாடுகள்!

ஒரு பொழுதின் வயிற்றுப்பாடு கழிய... இந்த நாய்படாத பாடு பட வேண்டியிருக்கு. இந்த அவலத்துலே உசுர் வைச்சிக்கிட்டு இருக்கிறதைவிட மாண்டு மடிஞ்சு போகலாம்... சே!

பொழுது முகம் சிவந்து விட்டது. மேற்குத் தொடர்ச்சி மலையின் முதுகுக்குள் பதுங்கிக் கொண்டிருந்தது.

காளிமுத்து, கடையை விட்டு வெளியே வந்த செல்லம்மா, சாமான்கள் வாங்கியது போக மிச்சமிருந்த சில்லறையை எண்ணிப் பார்த்தாள். ஒரு ரூபாய்க்கு கூட

எட்டவில்லை. முந்தியில் அதை முடிந்து கொண்டு பெருமூச்சு விட்டுக் கொண்டாள்.

வீட்டுக்குள் நுழைந்தாள். வீடெல்லாம் கோழிப்பீ, பானை சட்டிகள் தாறுமாறாகக் கிடந்தன. சாமான்களை வைத்துவிட்டு மனசைக் கவ்வுகிற ஒரு ஆவலோடு வெளியே பார்த்தாள்.

இடுப்பில் தம்பியை வைத்து இழுத்துக்கொண்டு, ஒரு வெறிவேக ஆவலில் ஓடிவந்தாள் பொம்பளைப் புள்ளை. செல்லம்மா வெளியே பாய்ந்து மகனை ஆவிசேர்த்து வாங்கிக் கொண்டாள். மனசெல்லாம் பொங்கிப் பாய்ந்த ஒரு இன்ப ஊற்று அவளுக்குள் மோதி விம்மியது.

ஒரு முரட்டு வெறியோடு மகனைத் தன் முகத்தோடு சேர்த்து அணைத்துக் கொண்டு மாறிமாறி முத்தமிட்டாள். ''ஏங் கண்ணு... ஏஞ் செல்லம்...'' என்று பிதற்றிக்கொண்டே முத்தமழை பொழிந்தாள்.

கொஞ்சி முடித்து நிறுத்தியபோது... அவள் கண்களில் நீர்க்கசிவு தெரிந்தது. மனசுக்குள் பொங்கிய இன்ப ஊற்றின் கசிவு.

''எம்மா... எம்மா...'' என்று துவக்கிய மகள், தம்பியைப் பற்றியும், அவன் செய்த சேட்டைகளைப் பற்றியும் நீட்டி முழக்கி நிறையச் சொன்னாள்.

அதைக் கேட்டு நெஞ்செல்லாம் பூரித்துப் போனாள்.

கடையில் வாங்கிவந்த பொறி கடலையை மகள் கையிலும், முறுக்கை மகன் கையிலும் தந்தாள். ''தின்னுங்கடா கண்ணுகளா... தின்னுங்க...''

''ஏண்டா... நீ அம்மா எங்கேன்னு தேடலியாடா... கண்ணு ஏஞ்செல்லமில்லே, ஏந்தங்கமில்லே''

அவளுள் பொங்கிப் பீறிட்ட சந்தோஷக் கிளர்ச்சியில் செல்லம்மா குழந்தையை மறுபடியும் அழுந்த அணைத்து முத்தமிட்டாள். அவள் முகத்தில் காலைச் சூரியனின் பிரகாசம் ஒளிர்ந்தது.

மகளின் காய்ந்த தலையை வலது கையால் தடவிக் கொண்டே, மார்பிலிருந்த மகனின் அழுக்குக் கன்னத்தைத் தன் கன்னத்தோடு சேர்த்துத் தேய்த்துக் கொண்டாள். அந்த ஸ்பரிசத்தில் தோன்றிய சுக உணர்ச்சியும், மனசுக்குள் பூத்துச் சொரிந்த ஆனந்தமும்... பொழுது பூராவும் அவள் வடித்த வியர்வையையும், களைப்பையும், சலிப்பையும் துடைத்து விட்டது போலிருந்தது.

அந்தப் பிஞ்சு முகங்களின் மலர்ச்சியையும், வெளிச் சத்தையும் பார்க்கப் பார்க்க அவளுள் ஒரு இனிமையான இசை எழுந்து ஒலிப்பது போலிருந்தது.

இந்த உணர்ச்சியின் உத்வேக பலம் மட்டும் சாஸ்வதமாக இருந்தால்... இந்தப் பஞ்சத்துடன் மட்டுமல்ல; எந்த ராட்சஸ வாழ்க்கையுடனும் மல்லுக்கட்டுவதற்கு அவள் பயப்பட மாட்டாள்!

மரணமே நெருங்கி வந்தாலும் 'தூரப்போ' என்று துரத்துவாள்.

*தாமரை - பிப்ரவரி, 1985*

***இலக்கியச் சிந்தனை பரிசு பெற்ற கதை***

# மாயப்பறவை

இன்று காலைக்கரண்டு. மதியம் வரைக்கும்தான் பம்ப்செட் மோட்டார் ஓடும். அழுக்குத் துணிமணிகளை அள்ளிக்கொண்டு தாமரை அவசரமாய் புறப்பட்டாள். மஞ்சள் பௌடர் ஒரு தாளில் மடித்துக்கொண்டாள்.

கிணற்றில் மோட்டார் தடதடத்துக் கொண்டிருந்தது. தண்ணீரை அள்ளி இறைத்துக் கொண்டிருந்தது. சிமெண்ட் தொட்டியில் வெள்ளிக் கற்றையாக விழுந்த தண்ணீர், நுரைகளாக உடைந்து, வாய்க்காலில் கண்ணாடியாக ஓடியது.

துணிகளை நனைத்தாள். ஜாக்கெட்டைக்கழற்றுவதற்கு முன்பாகச் சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டாள். ஒரு ஈ காக்கை கூட கிடையாது. ஆனாலும், முந்தானையை பல்லால் கவ்வி, முன்பக்கம் மறைத்துக்கொண்டுதான் ஜாக்கெட்டை உரித்தாள்.

தேகத்தின் சுடர் ஜொலிப்பில் அவளுக்கு ஒரு மயக்கம் உண்டு. எந்தத் தீண்டலுக்கும் ஆட்படாத காட்டு மலரின் வனப்பும் வாளிப்புமாக இளமை பிரகாசித்தது.

'தாமரையைப் பாருடி, சாணாத்தி பெத்த புள்ளை மாதிரியாகவா இருக்காள்? ஏதோ பாப்பாத்தி (பிராமணப் பெண்) வயத்துலே பெறந்த பவுன் மாதிரியில்லே இருக்காள்!'

கிழவிகள் தாடையில் விரல் வைத்து வியந்து சொல்கிற வர்ணிப்பு வார்த்தைகள் தாமரையின் நெஞ்சுக்குள் உயிர்ப் புற்று, இப்போதுகூட தேனாக இனித்தன.

பெருமிதத்திலும் கர்வத்திலும் நனைந்த மனசு, பூங்கொத்தாகக் குலுங்கியது. சேலையையும் உரிந்தாள். பாவாடையை உயர்த்தி மார்பை மறைத்துக் கட்டிக் கொண்டாள்.

துணிகளை அலசித் துவைத்தாள். கடைசியில், சிமெண்ட் தொட்டிக்குள் இறங்கி உட்கார்ந்தாள். வெள்ளிக் கற்றையில் இருட்டுக் கற்றை நனைத்தாள். எண்ணெய்ச் சிக்கும், அழுக்கும் நுரை பொங்கியது.

பாவாடையை லேசாக தளர்த்தி, மேனியின் சகல பகுதியும் தேய்த்துக் குளித்தாள். மஞ்சள் பூசிக் கொண்டாள். யாரும் இல்லை என்கிற சுதந்திர உணர்வில் திருப்தியாகக் குளித்தாள்.

பம்புசெட் ரூமுக்குள்ளிலிருந்து ஒரு ஜோடிக் கண்கள் இமை தட்டாமல் மேய்ந்து விழுங்கிக் கொண்டிருப்பதை அவள் கவனிக்கவேயில்லை.

ஈரக் கூந்தலை அழுத்திப் பற்றி உருவி, நீரை வழியச் செய்துவிட்டு அள்ளி முடிந்துகொண்டாள். நீர்த்திவலைகள் சுடர் மேனியில் ஆதாரமில்லாமல் நின்று ஜ்வலித்தன.

மாற்றுச் சேலையை உடுத்திக் கொள்வதற்காக பம்ப்செட் ரூம் மறைவுக்கு ஒதுங்கியபோது-

'தாமரை' என்று கிசுகிசுத்த குரலில் ஒரு ஆண்!

தாமரையை ஒரு உலுக்கு உலுக்கிவிட்டது. திகைத்துத் திணறினாள்.

முகமெல்லாம் ஆசை வழிய... உலர்ந்த உதடுகள் லேசாக விரிய, கருநாகம் போன்ற ஸ்கையை நீட்டினான், முத்து.

தனது முழுமை ரகசியமாக ரசிக்கப்பட்டிருக்கிறது என்ற எண்ணமே அவளுக்கு அருவருப்பாக இருந்தது, மனசுக்குள் நெருப்பாகத் தகித்தது.

இணக்கமாகச் சிரித்துக் கொண்டே முத்து அவளது குளிர்கரத்தைப் பற்றினான். ''தாமரை, உன்னை நெனைச்சு எம்புட்டு நாள் தவிச்சிருக்கேன். தெரியுமா? நீதான் கண்டுக்கவே மாட்டேன்றீயே''

சுண்டி இழுத்தான். ஒரு காய்ஞ்ச மாட்டைப் போல கம்மங்கொல்லையை வெறியோடு தழுவினான்.

மலத்தை மிதித்துவிட்ட அசூயையில் அவள் சிலிர்த்தாள். சாக்கடையில் புரண்ட ஒரு பன்றி உரசி விட்டதைப் போன்ற அருவருப்பும் ஆத்திரமுமாக அவள் திமிறினாள். 'ச்சீ...நாயே!'

மனசெல்லாம் உடம்பெல்லாம் கோபத்தில் நெருப் பாகத் தகிக்க... அந்தத் தகிப்பையெல்லாம் உள்ளங்கையில் இறக்கி, ஓங்கிய வேகத்தில் அறைந்தாள். கன்னத்தில் விழுந்த அந்தச் சாட்டையடியில் முத்து ஆடிப்போனான்.

தடுமாறிச் சுவரில் சாய்ந்தான்.

'த் தூ! எச்சிலை நாயே!' காறித் துப்பினாள்.

துணியை அள்ளிக்கொண்டு பொழிப்பாதையில் அவசரமாக நடந்தாள். கல்லெறிபட்ட கள்ள ஆடு போல முத்து, கண்மூக்கு தெரியாமல்... புஞ்செய்களுக்குள் செடிகளை மிதித்துக்கொண்டு வேறு திசையில் ஓடினான்.

பாதையில் ஊரை நோக்கி வந்து கொண்டிருந்த கிருஷ்ணன், மேற்காக நடந்து ஓடுகிற தாமரையையும், வடக்காக ஓடி வருகிற முத்துவையும் பார்த்தான். அவன் மனசுக்குள் ஒரு யூகம் சட்டென்று கருக்கொண்டது.

'போன வருஷம் சடங்கான பொட்டுசு. அதுக்குள்ளே அரிப்பெடுத்து, ஆம்பளையே தேடிக்கிருச்சோ...'

வியர்த்து விறுவிறுத்து வருகிற முத்துவை கையாட்டி கூப்பிட்டான். ''என்னலே...''

''ஒன்னுமில்லே...''

''என்ன ஒன்னுமில்லே? அவா அங்குட்டு ஓடுறா... நீ இங்குட்டு ஓடியாறே...''

''சும்மாதான்''

''சும்மாவா? காலங்காத்தாலே லட்டு பூந்தி தின்னுட்டு... சும்மான்னா சொல்றே?''

முத்து திருடனைப் போல விழித்தான். பயந்தான்.

''அண்ணே, இதை மனசுக்குள்ளே வச்சுக்க. யார் கிட்டேயும் சொல்லிடாதே...'' கிலியுடன் கெஞ்சினான். கிருஷ்ணன் நமட்டுச் சிரிப்புடன் தலையசைத்துக் கொண்டான்.

இவன் மனசுக்குள் வைத்துக் கொள்ளமாட்டான் என்று முத்துவுக்குத் தெரிந்தது. ஊரெல்லாம் சொல்லத்தான் செய்வான்...

சொல்லட்டும்... அதுவும் நல்லதுதான்...

இவன் பரப்புகிற ஒரு செய்தியே ஒரு நிர்ப்பந்த மாகி, தாமரையைத் தன்னை நோக்கித் தள்ளிவிட்டாலும் விடலாமே...

கிருஷ்ணன் அரசியல் பேசுவான். பொதுப் பிரச்னைகள் எல்லாம் பேசுவான். ஆனால், பெண்களைப் பற்றிய பேச்சு என்றால்... அவனுக்கு அதில் தனிக் குஷி வந்துவிடும். சுய ஈடுபாட்டுடன் ரசனையோடு சளைக்காமல் பேசுவான். பெண் விஷயத்தில் அவன் வக்கிரமான ஆள்.

கல்யாணத்துக்கு முன்னாலேயே ஒரு பெண்ணுடன் முறைகெட்டு வாழ்ந்தவன். கல்யாணத்துக்குப் பின்னாலும்... ஒரு எளிய ஜாதிப் பெண்ணின் வாழ்க்கையை முழுசாகக் களங்கப் படுத்தியிருக்கிறான். இடையில் அவ்வப்போது பல பெண்களுடன் சகவாசம். இந்த விஷயத்தில் மட்டும் அவன் எவ்வித வரைமுறைகளையும் மதிக்கவே விரும்பமாட்டான்...

...கிருஷ்ணனுக்கு நெஞ்சு உப்பியது, விம்மிக் கொண்டேயிருந்தது. எங்காவது செய்தியை இறக்கி வைக்காவிட்டால் நெஞ்சே வெடித்து விடும் போலிருந்தது.

ஊருக்குள் நுழைந்தவன் வீட்டுக்குப் போகவில்லை. நேராக டீக்கடைக்கு வந்தான். இந்த டீக்கடை இருக்கிறதே... இது ஒரு வானொலி நிலையம். செய்திகளை டிரான்ஸ்மீட்டர் இல்லாமலேயே ஊரெல்லாம் பரப்பிவிடும். ஊரின் எந்த ரகசியமும் இங்குதான் முதலில் கசியத் துவங்கும். அப்புறம் ஊரெல்லாம் ஒலிபரப்பாகிவிடும்.

ஆனந்தப் பரபரப்போடு நுழைந்த கிருஷ்ணன் ''அண்ணே, ஒரு டீ ஸ்ட்ராங்கா போடு'' என்றவன் 'ஊரும் கெட்டுப் போச்சு. நம்ம வாலிபப் பசங்களும் ரொம்பக் கெட்டுப் போனாங்க' என்று சலிப்போடு கூறினான்.

இவனது பீடிகையிலேயே பரபரப்படையத் துவங்கி விட்ட இளவட்டங்கள் என்ன என்னவென்று விசாரித்தனர். உட்கார இடம் கொடுத்தனர். அதில் ஒருவன், ''என்ன கிட்டணண்ணே, விடிஞ்சவுடனே எதுனாச்சும் 'கண்றாவி'யை பார்த்துட்டீயா?''

''ஆமப்பா! அந்தக் கொடுமையைத்தான் பார்த்துட்டு வாரேன். சாயங்கால நேரத்துலேதான் வேலிக்காட்டுக்குள்ளே ஜோடிக கூடிப் பிரியும்னு கண்டுருக்கோம். இதென்னப்பா அநியாயம், காலங்கார்த்தாலே காதல் கொண்டாட்டம்? ச்சே!''

''பூடகமாவே சொன்னா எப்படி புரியும்? போட்டு உடை.''

''ச்சே... அதெல்லாம் பாவம்! அந்தக் கிளிகளுக்கு எம்புட்டுத் தாகமோ, என்ன வேகமோ.... அந்த ரகசிய இன்பத்தை இங்க பேசிப் பாழாக்கக்கூடாது. பாவம், இருந்துட்டுப் போகட்டும்.''

''நாங்க என்ன வேண்டாம்னா சொல்றோம்? முடிஞ்ச மட்டும் சந்தோஷமாக அனுபவிக்கட்டும். வைக்கோல் படப்பா? அள்ளுனா குறைஞ்சு போறதுக்கு! குறையில்லாம கூடியிருக்கட்டும்... நீ யார்னு மட்டும் சொல்லிடு.''

''அதை அப்புறமா சொல்றேன்'' என்ற கிருஷ்ணன், டீயைக் குடித்தான். பீடியைப் பற்ற வைத்துக் கொண்டான். சுற்றிலும் நெருக்கமாக வந்து உட்கார்கிற இளசுகளின் ஆவலைப் புரிந்து கொண்டான்.

அடுத்தவர்களின் அந்தரங்கத்தை அறிவதிலும், அறிவிப்பதிலும் அப்படியோர் போதை.

''சொல்லு...''

''அட பொறுங்கப்பா'' கிருஷ்ணன் மனசுக்குள் செய்திக்கு வர்ணம் தீட்டிப் பார்த்தான், திருப்தியாக இருந்தது. செருமிக் கொண்டான்.

''களை வெட்டுக்கு பருவமாயிருக்குதான்னு பாக்குறதுக்கு தெக்காட்டுப் புஞ்சைக்குப் போய்ட்டு திரும்பி வந்துக்கிட்டிருந்தேன். ஒரு பெட்டைக் குருவி 'குளிக்கப் போறேன், வா'ன்னு சொல்லிவிட்டுப் போயிருக்கு...''

''பெட்டைக் குருவின்னா, யாரு?''

''போட்டுக் குடையாதீகப்பா. அதை அப்புறமா சொல்றேன். முதல்லே நடந்ததைக் கேளு''

''சரி, பெட்டைக் குருவி வரச்சொல்லிட்டு குளிக்கப் போச்சு. ஆண் குருவி போனதா?''

''போகாமலாயிருக்கும்? பொட்டைக் குருவி 'கண்ணடிச்சா' ஆண் குருவி பின்னடிக்கவா செய்யும்? போயிருக்கு. மோட்டார் தண்ணியிலே நல்லா குளிச்சிட்டு, சோப்பு மஞ்சளெல்லாம் தேச்சு குளிச்சிட்டு காத்திருந்துருக்கு. ஆண் குருவியும் வந்து சேர்ந்தது. ரெண்டும் ஜோடி சேந்து பம்ப்செட்டுக்குள்ளே நுழைஞ்சது. நுழையும் போதே நல்லபாம்பும் சாரைப் பாம்பும்போல கட்டித் தழுவிக்கிட்டு நுழைஞ்சது...''

''ஐயோ... அதுகளுக்கு எம்புட்டுத் தவிப்போ...''

ஒரு சிரிப்பலை எழுந்து அடங்கியது. கிருஷ்ணன் தொடர்ந்தான்.

''பாதையிலே வந்துக்கிட்டிருந்த நா பார்த்துட்டேன். எனக்குப் பொறுக்கலே. வாய்க்குள்ளே விரலை வைச்சு ஒரு

விசில் அடிச்சேன். கேக்கலே. ரெண்டாவது உசிரை குடுத்து ஒரு விசில் குடுத்தேன். அம்புட்டுத்தான். குருவிக கலைஞ்சுருச்சு. பெட்டைக் குருவி ஊரைப்பாத்து ஓடிடுச்சு. பய வடக்காம ஓடினான். பிடிச்சுட்டேன். என்னலேன்னு விசாரிச்சு கசக்கினேன். பூராத்தையும் கக்கிட்டான்...''

''என்ன கக்குனான்?''

''இந்த நல்லபாம்பு சாரைபாம்பு விளையாட்டு நாலு மாசமா நடக்குதாம். நாப்பதுநா வவுத்துலே தங்குனதைக் கூட கலைச்சுட்டாகளாம்...''

''அப்ப... ஜோடிக கைதேர்ந்துருச்சு?''

''ம்! ரொம்ப தேறிடுச்சு''

''சரி, குருவி பேரு?''

''இரு, சொல்றேன்.''

சொன்னான்.

அங்கே வர்ணம் தீட்டிப் பறக்கவிடப்பட்ட பறவை ஒவ்வொரு இடத்திலும் வெவ்வேறு வர்ணஜாலம் காட்டியது, அந்த மாயப்பறவை விதம் விதமான தோற்றத்தில் எல்லோர் கண்ணிலும் தென்பட்டது.

டீக்கடையிலிருந்து பத்துப்பேரும் தனித்தனியாகப் பத்து இடங்களில் உட்கார்ந்து பேசிச் சிரித்துக் கொண்டனர். செய்தியை மேலும் உண்மையாக்கினர்.

''ஆமப்பா... நாங்கூட கவனிச்சேன். முந்தாநா அவா புஞ்சைக்குப் போனா... இந்தப் பய பாத்த பார்வை எடுக்காம பார்த்துக்கிட்டிருந்தான். அப்புறம் எந்திச்சு... இவனும் அவா

போன பாதையிலேயே புறப்பட்டான்... இதுக்காகத்தானா...? நா இப்படி நெனைச்சுப் பார்க்கவேயில்லையே...''

இப்படியே சாட்சியாகச் சம்பவங்களை விவரித்தனர் சிலர். செய்திக்கு வர்ணம் ஏறியது. டீக்கடைகளில் - மடத்துத் திண்ணையில் - வாசக சாலையில் வாலிபர்கள் கூடுமிட மெல்லாம் இதே பேச்சுதான். மீண்டும் மீண்டும் மறு ஒலிபரப்பாயிற்று.

பிறத்தியார் அந்தரங்கங்களைக் குடைந்து அறிந்து கொள்வதிலும், தண்டோரா போடுவதிலும் இருக்கிற சந்தோசம் ஒரு போதை போல வேலை செய்தது.

வண்ணப்பறவை அகலமாக வட்டமடித்துப் பறந்தது.

இந்தச் செய்தி, பரவிய வேகத்தில் புழுதி கிளம்பியது. அந்தப் புழுதித் திரையில் 'யார் இதைப் பார்த்தது, யார் சொன்னது' என்ற விஷயம்கூட மறைக்கப்பட்டு விட்டது.

மடத்துத் திண்ணையிலிருந்து சாப்பிட வீட்டுக்குப் போன ஒருவன், மனைவியின் காதில் கிசுகிசுத்தான். மாதர் வட்டாரத்தில் இன்னும் கூடுதலான புயல் வேகத்தில்... அதிக வர்ணமேற்றிக் கொண்டு பறக்கத் துவங்கிவிட்டது.

பொழுது மலைவாசலில் நின்றது.

''தாமரை... அடியே தாமரை''

அவளது தோழி பூச்சி ஓடி வந்தாள். புல்லுக்குப் போய்விட்டு வந்திருந்த தாமரை, எருமை மாட்டுக்குப் புல்லை அள்ளிப் போட்டுக் கொண்டிருந்தாள். வியப்போடு திரும்பினாள்.

''என்னடி பூச்சி, இப்படி ஓடியாறே?''

''என்ன தாமரை இது, அழுது புலம்பிக்கிட்டு இருப்பியேன்னு நெனைச்சு ஓடியாந்தேன். நீ கல்லுப் போல இருக்கே?''

''நா எதுக்குடி அழுது புலம்பணும்?''

''ஊரெல்லாம் சேர்ந்து உன்னைப் போட்டு உருட்டிக் கிட்டிருக்குடி''

''எதுக்கு உருட்டுறாக?''

சத்தத்தை குறைத்து பூச்சி காதுக்குள் கிசுகிசுத்தாள்.

தாமரைக்குள் பாம்பு ஊர்ந்தது. அடிவயிற்றில் ஏதோ ஒரு ராட்ஸசக் கரம் பிசைவது போன்ற கொடிய உணர்வு!

இருதயம் இருந்த இடம் வெறுமையாகி விட்டாற் போல வேதனை உணர்ச்சி.

குழாயடியில் தண்ணீர் எடுக்கப் போனபோது... வழக்கத்திற்கு விரோதமாகப் பெண்கள் மௌனம் சாதித்ததும்... முதுகுக்குப் பின்னால் நமட்டுச் சிரிப்பாக சிரித்ததும்... இதனால்தானோ!

தாமரைக்குள் ரம்பம் போட்டு அறுப்பது போலிருந்தது.

கடாப் பெட்டியை எடுத்துக்கொண்டு புல்லுக்குப் போகும் போது... மடத்துத் திண்ணையில் உட்கார்ந் திருந்தவர்கள் வாயைப் பொத்திக்கொண்டு, கள்ளப் பார்வை பார்த்தார்களே... அந்தப் பார்வைக்கு இதுதான் அர்த்தமோ? இதுதான் காரணமோ...

இவளுக்குத் தெரியாமல் இவளைப்பற்றி எத்தனை இழிவாக - இகழ்வாக - மட்டமாக - அபாண்டமாக... ச்சே!

உடம்பெல்லாம் தேள்கள் ஊர்ந்தன. கொட்டின. அவமானத்தில் மனம் குன்றிக் குறுகியது. ஊரின் நடுவே நிர்வாணப்படுத்தி நிறுத்தி விட்டதைப் போல ஒரு வேதனை உணர்வு! இதயத்துக்குள் மூச்சுத் திணறியது. தொண்டை உலர்ந்துவிட்டது. மனசெல்லாம் தீயாக எரிந்தது. முகம் காகிதமாக வெளுத்தது.

ஊர் முழுவதும் ஓங்காரக் கூச்சலில் ஆர்ப்பரிக்கும் போது... இவளது ஒற்றைக் குரல் எடுபடுமா? உண்மை, உண்மையென்று ஒப்புக் கொள்ளப்படுமா? அதையும் யாரிடம் சொல்லுவது? யார் கேட்பார்?

அய்யா...?

ஆற அமர யோசிக்கமாட்டாரே... நல்லது கெட்டது நிதானிக்கிற சுபாவமில்லையே! குருட்டுத் தனமாக புரிந்து கொண்டு குதிப்பாரே... ஆத்திரத்தில் அரிவாளை எடுப்பாரே...

அதிர்ச்சியில் நிலை குலைந்து போன தாமரை, அப்படியே எருமையின் காலடியில் உட்கார்ந்துவிட்டாள். தலையில் 'மடேர், மடேரெ'ன அடித்துக் கொண்டாள். ''ஐயோ, ஐயோ'' என்று ஹீனக்குரலில் கசிந்தாள். சத்தம் போட்டு அழக் கூட பயந்து போய்... நெஞ்சு அடைத்துக் கொண்டது.

பூச்சி செய்வதறியாமல்... திகைத்துப்போய் நின்றாள்.

பொழுது இருட்டி நேரமாகிவிட்டது. தாமரையின் அப்பா தங்கச்சாமி இன்னும் வீட்டுக்கு வரவில்லை. இடுப்பில் சொருகிய சூரிக்கத்தியுடன் தெருத் தெருவாய் அலைந்தார். வெறி பிடித்தவராய் முத்துவைத் தேடியலைந்தார். வடக்குத் தெருவில் எதிர்ப்பட்ட ஒரு பெரியவரிடம் கேட்டார்.

''முத்துப் பயலை பார்த்தீகளா?''

''எதுக்கு அவனைத் தேடுறே?''

''ரெண்டுலே ஒன்னு நடக்கணும். அவன் சாகணும் இல்லே நாசாகணும்...''

''புத்தி கெட்டுப்போய் அலையாதே. என்ன ஏதுன்னு நெசத்தை விசாரிக்கணும். ஒன்னு இருக்க ஒன்னு செய்யக் கூடாது. ஊரான் புள்ளையை கொல்ல நீயாரு...?''

''மானத்தை எழந்துட்டு எதுக்கு வாழணும்?''

''ஊருக்குள்ளே பேசிக்கிடறதை வச்சுப்பாத்தா... தப்புலே உன் மகளுக்கும் பங்கு இருக்குன்னு தெரியுது. முதல்லே உன் மகளை கண்டிச்சு திருத்து. இவளை மேய விட்டுட்டு, ஊரான் பெத்த பயலை கொன்னா அது என்ன நியாயம்?''

''என்ன செய்யணும்ங்கிறீர்?''

''பொம்பளை சம்மதமில்லாத ஆம்பளை தப்பு செய்ய முடியாது. முதல்லே உன் வீட்டு ஓட்டைகளை அடைச்சுவை. அதுக்குப் பிறகு எலியை விரட்டலாம். ஒம்மகளை கண்டிச்சு அடக்கி வை. அதுக்குப் பிறகும் அந்தப் பய சேட்டை பண்ணுனா, அவன் செட்டையை (சிறகை) ஒடிப்போம்... புரியுதா...?''

தங்கச்சாமிக்கு கோபமெல்லாம் மகளின் மீது திரும்பியது.

'இந்தச் சிறுக்கி செஞ்ச காரியத்தாலே... எம்புட்டு கேவலம் வந்துருச்சு...? முளைச்சு ரெண்டு இலை விடுறதுக்குள்ளே புருஷன் கேக்குதோ... தேவடியா மக... இவளைக் கொன்னு தோலை உரிக்கணும்...'

அதே வெறி வேகத்தில் வீட்டுக்குத் திரும்பினார்.

வீட்டுக்கு வந்தார். கதவைக் காலால் ஓங்கி உதைத்தார். விளக்கு ஏற்றாமல் வீடு இருண்டு கிடந்தது.

''தாமரை... ஏய் தாமரை...''

அவரது ஆங்காரச் சப்தம் அவர் முகத்திலேயே மோதியது. வீடு பூராவும் இருட்டு. எதுவும் தெரியவில்லை. கோப வெறியில் திட்டிக் கொண்டே விளக்கை ஏற்றினார். அந்த மெல்லிய வெளிச்சத்தில்... தாமரை பாயில் படுத்து உறங்குவது தெரிந்தது.

''அடி சிறுக்கி மகளே, மப்பு கொழுத்துப் போய் ஊர் மேய்ஞ்சு... இல்லாத கேவலத்தை கொண்ணாந்து விட்டுட்டு... உறக்கமா... உறங்குறே?''

திடுதிடுவென்று நடந்தவர், காலை ஓங்கி எற்று எற்றினார். புரண்டு அசைந்தது உடம்பு. துவண்டு மல்லாந்த தாமரையின் வாயோரத்தில் நுரை தள்ளிக் கிடந்தது.

பகீரென்றது. அவருள் ஏதோ ஒன்று சரிந்து நொறுங்குவது போலிருந்தது.

நடுங்கும் கையோடு தொட்டுப் பார்த்தார். தாமரை ஜில்லிட்டுப் போயிருந்தாள்.

''ஐயய்யோ... என்னை அனாதையாக்கிட்டியே... தாமரை... அம்மா...''

அவரது அலறலில் இதயமே வெடித்து விடும் போலிருந்தது. ஊரே திரண்டு ஓடி வந்தது...

ஓடி வந்தவர்களெல்லாம் திகைப்பும் வியப்புமாகவே வந்தனர். அதிர்ச்சியை ஜீரணிக்க முடியாமல், அவநம்பிக்கை

யுடனே இருந்தனர். 'செத்துருப்பாளா... எதுக்காக சாகணும்? ஏன் மருந்து குடிக்கணும்?''

இந்தக் கேள்விகள் எல்லார் மனதிலும் போலவே, ஓடிவந்த கிருஷ்ணன் மனதிலும் நின்று அழுத்தின. நிஜமாகவே அவனுக்கு அதிர்ச்சியான ஆச்சர்யமாகவே இருந்தது.

இந்த மரணத்திற்கு தான்தான் காரணம் என்று அவன் உணரவேயில்லை.

*சோலைக் குயில்கள், 1985*
*மூன்றாமாண்டு சிறப்பு மலர்*

# கண்ணா மூச்சி

''ஐயய்யோ அம்மா, என்னை கொல்றானே... பாவி'' செவிப்பறையைத் தாக்கி மனசை அறுத்த கதறல்.

அடிபட்டவனைப்போல அதிர்வோடு விழித்துக் கொண்ட சிறுவன் ராமசாமி தூக்கக் கலக்கத்தில் திகைப்புடன் சுற்றுமுற்றும் பார்த்தான். அடுப்பங்கரை வாசலில்...

அந்தப் பிஞ்சு மனம் அதிர்ச்சியில் வெட வெடத்தது.

அம்மாவின் கூந்தலைப் பற்றியிழுத்து, ஒரு சுண்டு சுண்டி, ஓங்கிய கை முதுகில் 'டம்ம்' மென்று மோத... அய்யா ஆங்காரமாய் கேட்கிறார். ''ஏண்டி, பொட்டைக் கழுதைக்கு அம்புட்டுத் திமிரா?''

அம்மா முகமெல்லாம் வியர்வை - கண்ணீர். வாய் கோணிக் கொண்டு அழுகிறாள். கதறுகிறாள்.

''அடப்பாவி மனுசா... என்னை. எதுக்கு கொல்றே? ஐயய்யோ, கேக்க நாதியத்துப் போய்த்தானே வதைக்குறே?'' என்று அழுகையோடு சேர்ந்து புலம்புகிறாள். குரல் கரகரத்து கம்முகிறது.

''காட்லே உசுரைக் குடுத்துட்டு வர்ற மனுஷனுக்கு ஒரு வாய் கஞ்சி காய்ச்சி வைக்க வக்கில்லே! ஒனக்கு நெஞ்சுலே அம்புட்டு கொழுப்பா?''

கண்களும் வாயும் அனல் துண்டுகளை வீச, கோபம் தாங்காமல் மட்டியைக் கடித்துக்கொண்டு காலை ஓங்கி அம்மாவின் நெஞ்சில் உதைக்க —

ராமசாமிக்கு நெஞ்சில் வலிக்கிறது. அய்யாவைப் பார்க்கவே மனசு மிரள்கிறது. சுவரோடு ஒட்டிக் கொண்டான்.

''நா என்ன செய்யட்டும்... கொத்து வாங்கிட்டு வந்து, சோளத்தை உடைச்சு உலையிலே போட்டிருக்கேன். பசி எடுத்துட்டா, நிதானமுமா அத்துப் போகும்? பொட்டச்சியை அடிக்கிறதுதான் பெரிய வீரமாக்கும்? த்தூ!''

''என்னடீ சொன்னே...?'' என்று ஆங்காரக் குரலோடு காலை ஆவேசமாய் ஓங்க, ராமசாமி மிரட்சியுடன் நகர்ந்து கொள்கிறான்.

''இங்க என்ன சத்தம்?'' என்ற சத்தத்துடன் நிழலுருவங்கள்... சில பெண்கள். அவர்கள் அம்மாவைத் தொட்டுத் தூக்குகின்றனர். ராமசாமியின் சுவாசம் சுதந்திரமாக இயல்பாகிறது.

வந்த பெண்கள் அய்யாவைச் சினத்துடன் அதட்டுகின்றனர்.

''ச்சே... என்னய்யா நீ! பொம்பளைப் புள்ளையைப் போட்டு இப்படி வதைக்கிறீயே... நீயெல்லாம் மனுஷந் தானா!''

அய்யா முகத்தில் ஒரு லஜ்ஜை. கண்கள் தாழ்ந்து அலைகின்றன.

கரகரத்த குரலோடு அம்மா வைக்கும் ஒப்பாரி, ஒரு சோகமாய் ராமசாமியின் நெஞ்சுக்குள் குத்துகிறது.

அய்யாவின் லஜ்ஜை மீண்டும் ஆவேசமாக மாறுகிறது.

''வேஷக்காரி! அழுது பாசாங்கா பண்ணுதே!'' — அனல் பார்வையை வீசிவிட்டு, துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு, அங்க நிற்கமாட்டாதவனைப் போல விருட்டென்று வெளியேறினார்.

''ஏண்டி சிறுக்கி, எதுக்கு இப்படி உதைக்கான்? அந்தளவுக்கு நீ என்னடி செய்ஞ்சே?'' - ஒரு கிழவி அம்மாவை ஆறுதலாய்க் கேட்கிறாள்.

''நா ஒண்ணும் செய்யலியே...'' தலை நிமிராமலேயே முனகும் அம்மா. கண்களிலிருந்து மாலை மாலையாய் கண்ணீர்.

''ஒண்ணும் செய்யாதவளை எதுக்கு அடிக்கான்? அவனுக்கென்ன கிறுக்கா பிடிச்சிருக்கு? நீ என்னமும் பேசுனீயா?''

''இல்லையே.''

ஒரு பெண் அடுப்பில் அணைந்து கிடக்கும் நெருப்பை மூட்டுகிறாள். சோளக்கழி கொதிக்கிறது. 'டிப், டிப்' பென்று சப்தம் வருகிறது. சோளக்கழிக்குள் துடுப்பு கிடக்கிறது.

ஒரு கிழவி இன்னோர் பெண்ணிடம், ''அடியே சோத்தைப் பாத்துக் கிண்டிவிடு'' என்று உத்தரவிட்டு விட்டு அம்மாவைப் பார்க்கிறாள்.

''சரி சரி... வீடுன்னு இருந்தா சந்தோஷமும் இருக்கும், சண்டையும் இருக்கத்தான் செய்யும். கண்ணீரைத் துடைச்சுட்டு வேலையைப்பாரு. நீங்க போட்ட கூத்துலே... அங்க பாரு, ஓம் மகன் அரண்டு கிடக்கான்.''

சகல பார்வைகளும் இவனை மொய்க்க, இவனை வெட்கம் சூழ்ந்துகொண்டது. பலரின் பரிதாபத்துக்கு ஆளாகி நிற்கிற அவலம், அவனுள் ஊசிகளாகப் பாய்ந்தது. உடம்பெல்லாம் கூசி ஒடுங்கியது.

ஆறுதல்கள்... புத்திமதிகள்... அனுதாபங்கள்... இவற்றை விட்டு விட்டு எல்லோரும் போய்விட்டனர்.

அநேகமாக அம்மா ஓய்ந்துவிட்டாள். தூறலைப் போல விசும்பல் மட்டும் கேட்கிறது. மெல்ல நிமிர்கிறாள். மகனைப் பார்க்கிறாள். டவுசர் மட்டும் போட்டுக்கொண்டு, உடம் பெல்லாம் தூசி ஒட்டியிருக்க, முகமெல்லாம் பீதி அப்பியிருக் கிறது.

அவனுக்குச் சங்கடமாக இருக்கிறது. தரையைப் பார்க்கிறான். மீண்டும் நிமிர்கிறபோது...

அம்மாவின் அதே பார்வை. அலுங்காத பார்வை. அடிபட்ட பறவையின் வேதனையைச் சொல்லி அழும் பார்வை. உயிர்ப்பும் உணர்ச்சியுமாக நெஞ்சுக்குள் பாய்ந்து வதைக்கிற பார்வை. அவலமும் கருணையும் கலந்த பார்வை.

அம்மாவின் முகம் மெல்லச் சலனமுற்று, 'வா' என்கிறது.

முட்டி மோதும் அழுகையுடன், துடிக்கும் சின்ன உதடுகளுடன் மெல்ல நகர்கிறான். அவள் ஆதரவோடு கையை நீட்டி 'வா' வென மீண்டும் அழைக்க, பாய்ந்து மடியில் விழுகிறான். இதயமே வெடிக்க ''அம்மா'' என்று அலறுகிறான்.

மகனின் பாசத்தில், கருணையில் இளகிப்போன அம்மாவும், அழுகையில் வெடித்துக் கதறுகிறாள். நேரம் நத்தையாக ஊர்கிறது.

''அம்மா... பசிக்குதும்மா...''

''நானும் காட்லே உசுரைக் குடுத்துட்டு வந்து, வீட்லேயும் இந்தப்பாடு படுதேன். உங்கப்பன் காட்லேயிருந்து வந்து நின்னவுடனே வட்டில்லே கொட்டலைன்னா... கூரைக்கும் தரைக்குமா குதிப்பான். நீ, இப்பவே குதிக்க ஆரம்பிச்சுட்டேயாக்கும்...!''

ஓடியே போய்விட்டான் ராமசாமி.

சாப்பிட்டு முடிந்து விளையாடி, வீட்டுக்குள் நுழைந்தான் ராமசாமி. வாசலில் அம்மா.

கன்னத்தில் கைவைத்து ஸ்மரணையற்று உட்கார்ந் திருந்தாள். நினைவுகளில் புதையுண்டு கிடக்கிறாள் என்பதை முகத்தின் சலனமின்மை கூறியது. அவள் பார்வை தெருவின் முடிவில் பதிந்திருந்தது.

''அம்மா...'' குதூகலக் குரலில் கூவினான்.

''அய்யா எங்கடா?''

''நா பாக்கலே.''

''பாடுபட்ட மனுஷன். இன்னும் சாப்டலைடா. போய் கூட்டிட்டு வா. அய்யா சாப்ட வேண்டாம்?''

''சாப்ட வேண்டாம்.''

ராமசாமி விளையாட்டாகச் சொல்லவில்லை.

''ஏண்டா?''

''அவருதான் ஒன்னை அடிச்சாரே...''

மாலைச் சம்பவத்தின் பாதிப்பு இப்போதும் அவன் முகத்தில் தெரிய, அதில் துல்லியமாய்த் தெரிந்த பாசமும்

கருணையும் தாயின் மனசையெல்லாம் நிறைத்துத் தளும்ப, அவனை இழுத்து மடியில் கிடத்தி, மார்போடு சேர்த்து தலையில் மாறி மாறி முத்தமிட்டாள். ஓரிரு நீர்த்துளிகள் தலையில் விழுவதை உணர்ந்தான். மனசு நனைந்தது.

பக்கத்து வீடுகளின் வானொலி பாடலை இசைக்கிறது. எதிர் வீட்டின் எருமை மாடு 'முடையடித்தது போல' கதறுகிறது. நாய்கள் குரைக்கிற சப்தங்கள்...

''அம்மா... ஒறக்கம் வருது.''

''பாடம் படிக்கலே?''

''ம்ம்ம்... ஒறக்கம் வருதும்மா...''

''சரி, படு.''

பாயை விரித்துத் தருகிறாள். வாசலை ஒட்டிக் கதவுக்குப் பின்புறம் படுத்துக் கொண்டான். மாலைச் சம்பவம் கொடூரமாய் மனசில் நிழலாடியது.

கூந்தலைப் பற்றியிழுத்த ரோமம் அடர்ந்த அய்யாவின் கை, அடிப்பதற்காக ஓங்கிய கை. உதைப்பதற்காக மடங்கிப் பாய்ந்த கால். அந்தக் காலில் படிந்திருந்த கரிசல் புழுதி. பாய்ந்து சிதறிய அனல் வார்த்தைகள்...

அய்யா மனசுக்குள் எரிந்து சாம்பலாகிக் கொண்டிருந் தார்.

மனசின் ஆரவாரம் சன்னஞ் சன்னமாக அடங்கி, ஓய்ந்து, தூக்கத்தில் புதைந்து போனான்.

மூளைக்குள் புகுந்து குடைந்த ஏதோ சப்தத்தில் ராமசாமி விழித்துக் கொண்டான். சுற்றும் முற்றும் பார்த்தான்.

இருட்டுத்தான் நின்றது. பக்கத்தில் படுத்திருக்க வேண்டிய அம்மாவைக் காணோம். மெல்லப் புரண்டான்.

அடுப்பங்கரைச் சுவரில் காண்டாவிளக்கு ரொம்பக் குறைந்து எரிந்தது. அதன் அழுக்கான சந்தன வெளிச்சம், இருட்டை எதிர்க்க வலுவின்றித் தவித்தது.

சுவருக்கருகில் விளக்கின் நிழலே பெரிய வட்ட இருட்டாக விழுந்திருக்க, அந்த வட்டத்திற்குள் மனிதச் சலனங்கள். மெல்லிய பேச்சு சப்தங்கள்.

உற்றுப் பார்க்கிறான். பார்வையின் கூர்மை இருட்டுக்குப் பழகி விட, இரண்டு நிழலுருவங்கள். புரியாமையில் மனசு தவிக்க பார்க்கிறான்.

அய்யாவும் அம்மாவும்தான்!

பீதியுடன் கண்களை மூடிக் கொள்கிறான். மனசு 'திக் திக்' கென்கிறது. வெளியிருட்டைவிட மனசுக்குள் கறுப்பான இருட்டு. புரியாமை. தவிப்பு.

''சரி சரி... வெறும்வவுறா கிடந்துட்டு, சாப்டுருக்கீக. வெருசா ஒறங்குங்க. ஒடம்புக்கு ஆகாது...''

''ஒடம்புக்கு என்ன கேடு வந்துச்சு!''

''கையை வெச்சுக்கிட்டு பேசாம இருங்களேன்.''

''இருக்க மாட்டேன்''

''ஆமா... நீங்க ஒதைச்ச ஒதையிலே உடம்பெல்லாம் புண்ணாகிக் கிடக்கு.''

''இந்தா, அதா அப்பவே சொல்லிட்டேனில்லே, 'ஏதொ பசி வெறியிலே அப்படிச் செஞ்சுட்டேன், மனசுலே வச்சுக்காதே'ன்னு.''

''அடி அடின்னு அடிச்சுட்டு... மனசுலே வச்சுக்கா தேன்னா, எப்படியாம்? என்ன காரணத்துக்காக என்னை அடிச்சீக? நா என்ன செஞ்சேன்?''

அம்மாவின் மெல்லிய குரல், சிறுவனின் மனசுக்குள் ஊசிகளாகப் பாய்ந்து புண்ணைக் குத்தின.

''சரி சரி... விடு.''

''என்ன விட! நானும் வேலைக்குப் போய்ட்டு வந்து, கொத்து வாங்கப் போனா பண்ணை மாமாவூட்லே ஆள் இல்லே. வீட்லேயும் தான்யமில்லே. கடையிலே கடன் தரமாட்டேன்னுட்டான். நா என்ன செய்யவாம்? சோறாக்க நேரமாச்சுன்னா... வாயிலே வந்தபடி பேசி, மனம் போனபடி அடிச்சா என்ன அர்த்தம்? என்ன ஏதுன்னு விசாரிச்சீகளா?''

''ந்தா... அதான் நீயும் சொல்லிட்டே. நானும் சொல்லிட்டேன். ஒனக்கு கோவம் தீரலேன்னா... இந்தா நீயும் என்னை பதிலுக்கு அடிச்சுக்கோ... சரிக்குச் சரியா போவட்டும்...''

''ச்சே, பேச்சைப் பாரு... பேச்சை..''

பேச்சு சப்தம் நின்றுவிட்டது. ஆனால் சப்தம் வருகிறது. வார்த்தைகளற்ற சப்தங்கள். உணர்ச்சிகளின் சப்தங்கள். பசிக்குப் பதில் சொல்ல முடியாத சமூக முரண்பாட்டில் வெடித்த சண்டையை விழுங்கி ஏப்பமிட்டுவிட்ட தாம்பத்ய வாழ்க்கையின் அன்புணர்வுகளின் ஓங்காரச் சப்தங்கள்... சிறுவன் ராமசாமிக்குப் புரியாத சப்தங்கள்!

ராமசாமிக்கு உறக்கம் போய்விட்டது. கண்களை மூடிக்கொண்டே மிரட்சியுடன் பார்த்தான்.

*மாலைச் சம்பவம் மனசுக்குள் நிழலாடியது. ஓங்கிப் பாய்ந்த அய்யாவின் ரோமம் அடர்ந்த கை; ஆங்காரமாய் நெஞ்சில் பாய்ந்த கால்; வியர்வையும், கண்ணீரும் வழிய, வாய் கோணித்து அழுத அம்மா...*

*இதோ இந்த அய்யா... அம்மா...*

*அந்தச் சிறுவன் புரியாமையில் மலைத்துப்போய் குழம்பிக் கிடந்தான்.*

*வாழ்க்கை அந்த அரும்பின் கண்களைக் கட்டி விட்டு, கண்ணா மூச்சி விளையாடிக் கொண்டிருக்கிறது.*

***குங்குமம், 22-1-84***

# நிஜத்தின் நிறம்

'அம்மா, உங்களுக்கு போன்'

என்ற செய்தியுடன் வருகிற ப்யூனுக்காக ஜானகியின் மனம் பரபரத்துக் கொண்டிருந்தது. இரண்டு மணிக்கு வர வேண்டிய போன் ஏன் இன்னும் வரவில்லை? வழக்கத்திற்கு மாறாக இன்று மட்டும் போன் மௌனம் சாதிப்பது ஏன்? மனசை மயங்க வைக்கிற இந்த ஏக்கத்தை அவளே உணர்ந்தாள்.

தவித்துக் கொண்டிருந்த மனம், பைலில் ஒட்ட மறுத்து விலகி ஓடிக் கொண்டேயிருந்தது. வேலை செய்யாமல் சிறுபிள்ளைத்தனமாக அடம் பிடித்தது. புழுங்கி, பொறுமையை இழந்துவிட்ட நேரத்தில், 3-35க்கு ப்யூன் தென்றலாய் வந்தான்.

நெஞ்சுக்குள் ஜில்லென்று பூத்துச் சிரித்த பூக்காடு.

அடுத்த கணம் 'ஹலோ'வில் இருந்தாள். மனசின் பரபரப்பை மறைக்க முடியாத தளும்பலோடு 'ஜானகி ஹியர்' என்றாள். மறுமுனையில் பரந்தாமன் குரல் ஒலித்தது. அவள் இதயத்தின் மூலை முடுக்கெல்லாம் இனிமையான பரவச வெள்ளம் பாய்ந்து நிரம்பியது.

பேசினாள்.

பரந்தாமன் பேச்சு வழக்கமாக இருப்பதைப் போலில்லை. ஒரு வித்தியாசம் சுத்தமாக தெரிந்தது. துள்ளல் இல்லை. சீண்டல் இல்லை. மனசைக் கிள்ளுகிற அந்த குறும்புச் சிரிப்பு இல்லை. குரலே சுரத்தில்லாமல் இருந்தது. ஒரு சோகத்தைச் சுமந்து நிற்கிற கரகரப்பு தெரிந்தது.

''டியர், டோன் ஒரு மாதிரியா இருக்கே ஏன்? மனசு சரியில்லையா?''

''எஸ். ஜான். இப்போ நா பேங்க்லேயிருந்து பேசலே. பக்கத்து ஹோட்டல்லேயிருந்துதான் பேசுறேன்''

''ஏன், இன்றைக்கு பேங்க் போகலியா?''

''இல்லே, லீவ் போட்டுட்டேன். எங்கவில்லேஜ்லே யிருந்து சில சொந்தக்காரங்க வந்துருக்காங்க, ஒரு இம்பார்ட் டண்ட் ப்ராளம். அது விஷயமா பேசவேண்டியிருக்கு''

''ஓகோ... அப்போ இன்றைக்கு நாம மீட் பண்ண முடியாது. இல்லே?''

''அப்படித்தான் நெனைக்கிறேன் ஜானகி. நாளை ஈவினிங்லே மீட் பண்ணுவோம். ஷ்யூர்''

''ஓகே வந்த ரிலேஷன்சை நல்லபடியா கவனிங்க, நாளை நாம சந்திக்கறப்போ... என்ன ப்ராப்ளம்குறதைப் பேசலாம். ஆனா நிதானமா டீல் பண்ணுங்க.''

''தேங்ஸ் ஜான், ஸாரி ஃபார் மை ஆப்ஸென்ஸ். நாளை நிச்சயமா சந்திக்கலாம்.''

''நோமென்ஸ்''

ரிசீவரைக் கீழே வைக்கும்போது, மனம் கனத்திருந்தது. நேற்று பார்த்த பரந்தாமனை, நாளை சாயங்காலம்வரை பார்க்க

முடியாது என்கிற நிஜம், அவள் மனசை என்னவோ செய்தது. ஒரு சோகம் குடிபுகுந்து கொண்டு அலைத்தது.

அவள் சீட்டில் வந்து சரிந்தபோது, வழக்கமான ஜானகியாக இல்லை. சிடுசிடுப்பாகி விட்டாள். குழம்பிக் கிடந்த பைல்களை ஒழுங்குபடுத்தாமல் வெறுமனே தூக்கித் தூக்கிப் போட்டாள்.

அவள் நெஞ்சை இனம் புரியாத ஏக்கம் வதைத்தது. பரந்தாமன் இல்லாத மாலைப் பொழுதா? அவளால் கற்பனை செய்வது கூட கஷ்டமாக இருந்தது.

சரி, இன்றைக்கு என்ன செய்வது? பரந்தாமன் இல்லா மல் மாலைப் பொழுதை எப்படிக் கழிப்பது? வீட்டுக்குப் போகலாமா? போய் என்ன செய்யப் போகிறோம்? இரண்டு வருஷத்தில் இல்லாத அதிசயமாக இன்று மட்டும் நேரத்தோடு வீடு போய்ச் சேர்ந்தால், வித்யாசமாகத் தெரியாதா? இத்தனை நாளும் ஏன் லேட் என்ற புதுக் கேள்வியை எழுப்பாதா?

எழுப்பினால்தான்... என்ன குடி முழுகிப் போகும்?

அப்பா என்ன, ஆர்ப்பாட்டம் செய்து அமளியா செய்யப் போகிறார்? அந்த அளவுக்கு மகளுடைய வாழ்விலும், நலனிலும் அக்கறை எடுத்துக் கொள்பவரா?

அவருக்கு அந்த ஈஸிச்சேரும், பகவத்கீதையும் போதும். அம்மாவுக்கு சமையலறையும், பூஜையறையும்தான் உலகம். மாதா மாதம் முதல் தேதி மட்டும் சிந்தாமல் சிதறாமல் வந்து சேர்ந்துவிட்டால் போதும். மற்ற எதைப் பற்றியும் கவலை கிடையாது.

சரி, இப்போ என்ன செய்வது?

பரந்தாமனைச் சந்தித்துப் பழகிய பிறகு ஒரு நாளாவது இந்தக் கேள்வி எதிர்ப்பட்டதே கிடையாது. ஒவ்வொரு நாளும் பூவாய் மலர்ந்து - ஒளிர்ந்து மணந்து உதிருமே! பல சமயங்களில் பாரிமுனைக்கே வந்து காத்திருப்பான். ஆபீஸ் முடிந்து அலுத்துக் களைத்து வருகிற ஜானகி, ''ஹலோ ஜான்'' என்ற அவனது இனிமையான உற்சாகக் குரலில்தான் உயிர் பெறுவாள். குளித்து முடித்த புத்துணர்ச்சி உடம்பெல்லாம் பரவி, மனசெல்லாம் பரவசத்தில் கரைந்து விடுமே!

பீச் மணலோ, மிருகக்காட்சி சாலையோ - வள்ளுவர் கோட்டமோ - கலைவாணர் அரங்கமோ எங்கு சென்றாலும், அந்த ஒரு மணி நேரம் என்ன துரிதமாய் கழிந்து விடும்! நெஞ்சைக் கிள்ளுகிற கேலிகள் - மனசைக் கிளுகிளுக்க வைக்கிற மெல்லிய சீண்டல்கள். சில சமயத்தில் சீரியஸான விவாதங்கள்...

வாழ்க்கையே முழு வீர்யத்துடன் எழுந்து இறுகத் தழுவிக் கொண்டதைப் போல மனசே குதூகலப்படுமே! மறுநாள் சந்திப்பு வரை மனசில் அந்த இனிமை கரைந்து கொண்டே இருக்குமே...

இன்று?

சட்டென மனசுக்குள் ஒரு வெறுமை சூழ்ந்தது.

ஆபீஸ் முடிந்தது. சிறையிலிருந்து விடுபட்ட மகிழ்ச்சியோடும், வாழ்க்கையைக் கட்டித் தழுவுகிற ஆவலோடும் வீதிகளில் மனிதர்கள் பரபரத்து ஓடினர். ஆட்டோக்களுடனும், பல்லவன்களுடனும் போட்டி போட்டுக் கொண்டு பறந்தனர். சென்னை மாநகரமே ஒரு பகல் நேர உறக்கத்திற்குப் பிறகு எழுந்து ஓடுவதைப் போல் பாரிமுனை திமிலோகப்பட்டது.

ஜானகி பஸ் ஸ்டாப்பில் நின்றாள். யோசனையில் நிமிஷங்கள் கரைந்தன. 'என்ன செய்யலாம்' என்ற வட்டத்திற் குள்ளேயே நினைவு சோம்பேறித்தனமாகச் சுற்றித் திரிந்தது.

சரி... பரந்தாமனுடன் கைகோர்த்துப் போவதைப் போல இன்று தனியாக பீச் போகலாமா? தனிமையில் அனுபவிப்பது, ரசனைக்குரிய அனுபவமாக இருக்குமே!

அவசரமாகப் பாய்ந்து பஸ்ஸில் ஏறிவிட்டாள். நல்ல வேளை உட்கார சீட் கிடைத்தது, பையிலிருந்த வார இதழைப் பிரித்தாள். மனம் எங்கோ ஓடித்தாவ வார இதழை மூடிவிட்டு நிமிர்ந்தாள். சூடான காற்று முகத்தில் மோதியது.

ஜானகியின் மனசுக்குள் பரந்தாமன் வந்தான்.

என்ன கம்பீரமான தோற்றம்... கட்டுமஸ்தான தேகம். சிரிக்கும் போது பளிச்சிடுகிற அந்தப் பல்வரிசை... ஆழம் காணமுடியாத அந்தக் கண்கள்... சீண்டி விளையாடும் போது அதில் துள்ளுகிற அந்தக் குறும்பு.

பற்களின் வெண்மையைத் துல்லியப்படுத்துகிற கறுப்பு. அடர்த்தியான கறுப்பு. மனசுக்குப் பிடித்தமாகி விட்ட கிருஷ்ண பரமாத்மா கறுப்பு!

பரந்தாமன்! அட, அவருக்குத்தான் எவ்வளவு நல்ல மனம்! அந்த மனமெல்லாம் ததும்பி வழிகிற அன்பு. என்ன இனிமையாய்ப் பேசுவான். மனசை நீவி விடுகிற நாகரீக நாசுக்குடன் பழகுவானே!

கடற்கரையில் - பாரதி சிலையின் நிழலில் நிகழ்ந்த அந்த தித்திப்பான முதல் சந்திப்பு. ஆ... ஆயுள் முழுவதும் நெஞ்சுக்குள் இனிய தென்றலாக வீசிக் கொண்டிருக்குமே!

அந்த முதல் சந்திப்பு, எதிர்ப்படுகிற பொழுதெல்லாம் புன்சிரிப்புகளாக வளர்ந்து, ஒரு நெருக்கமான சிநேகிதமாகப் பரிணமித்து... நாலைந்து மாதங்களுக்குப் பிறகு, ஏதோ ஒரு தருணத்தில் மனசின் கரைகளையும், சமூகத் தடைகளையும் உடைத்துக் கொண்டு காதலாக சங்கமித்து...

இரண்டு வருஷம் என்பது இத்தனை அற்பமானதா? என்ன வேகமாய் ஓடிக் கரைந்துவிட்டது.

ஓ... அந்தத் தருணம்... மனசின் கரைகளை உடைத்துக் கொண்டு சங்கமித்த அந்த இனிய தருணம்...

அன்று —

இப்படித்தான் பல்லவனில் சென்று இறங்கி, சாலையை குறுக்காகக் கடந்து, பாரதி சிலையை நெருங்கினாள். காலையிலிருந்தே இனம் விளங்காத ஒரு சோகம் மனசை அரித்துக் கொண்டிருந்தது. அதில் அவள் முகம் வாடி வதங்கிக் கிடந்தது.

பரந்தாமனின் உற்சாகமயமான 'ஹலோ ஜான்' என்ற வரவேற்பில் கூட அவள் உயிர் பெறவில்லை. பதிலுக்கு வெறுமனே முறுவலித்தாள்.

''ஏன் ஜானகி, ஒரு மாதிரியா இருக்கே?''

கனிந்த அன்போடு பார்த்தான். பார்வையில் சொரிந்த பரிவும், தரிசனமும் மனசுக்கு இதமாக இருந்தது. ஆனாலும் மௌனமாக இருந்தாள்.

''ஆபீஸ்லே ஏதாச்சும் ப்ராப்ளமா?''

இல்லையென்பது போலத் தலையசைத்தாள்.

''வீட்லே?''

அதற்கும் மௌனமும் தலையசைப்பும் மட்டும்தான்.

''அப்புறம் ஏன், இந்த மஞ்சள் முகம் வாடிக் கிடக்கு? மனசுல என்ன சிக்கல்னு சொன்னால்தானே களைய முடியும்?''

ஆர்வமும் துடிப்புமான கேள்விகளால் மனசை நீவி விடுகிற அந்த அன்பு ஆறுதலாக இருந்தது. மனசை வருத்திக் கொண்டிருக்கும் பாரத்தை இறக்கி வைக்க இதுதான் பொருத்தமான இதயம். தன்னைப் புரிந்து கொண்ட இதயம்.

''பேசு ஜானகி, அழகான சிவந்த இந்த முகத்துக்கு சிரிப்புதான் மேட்சா இருக்கு. இந்த வாட்டம் நல்லாயில்ல... நாட் குட்''

ஜானகி ஏறிட்டு அவனைப் பார்த்தாள்.

''மார்னிங்லே பேப்பர்லே ஒரு நியூஸ் படிச்சேன். ரொம்ப ஷாக்காயிடுச்சு. ஆபீஸ்லே வேலையே ஓடலை. மனசெல்லாம் அதே நினைப்புதான் ரொம்ப அவஸ்தைப் படுத்துது''

''வாட் நியூஸ்?''

பத்திரிகையை விரித்து அந்தச் செய்தியைக் காட்டினாள். முதல் பக்கத்தில் இரண்டு காலச் செய்தியாக வந்திருந்தது. படித்தான்:

'காதலுக்காக பெற்றோரையும், ஜாதியையும் பகைத்துக் கொண்டு உத்யோகம் பார்க்கும் ஒரு வாலிபனை மணந்து கொள்கிறாள், ஒரு இளம்பெண். சந்தோஷமாய் ஒரு வருஷம் இல்லறம் நடக்கிறது. விவசாயம் செய்கிற பெண்ணின் பெற்றோர் கோபம் தணிந்து, அடிக்கடி மகளை வந்து பார்த்துச் செல்கின்றனர்.

இதுவரை காதலையும் மனைவியையும் மட்டுமே நேசித்த கணவன், வரதட்சணைக்காகவும் ஏங்குகிறான். வேறு பெண்ணை மணந்திருந்தால் வந்திருக்கக்கூடிய நகைநட்டு, சீர்வரிசை எல்லாம் இல்லாமல் போய்விட்டதே என்று எண்ணுகிறான். இந்த ஏக்கம் கணவன் மனைவிக்குள் பூசல்களாக வெளிப்படுகிறது.

அடிக்கடி பெற்றோரிடம் அனுப்பி வைத்து, அதை வாங்கி வா, இதை வாங்கி வா, என்று நிர்ப்பந்திப்பதன் மூலம், காதலினால் வந்த நஷ்டத்தை ஈடு செய்ய முயல்கிறான். அந்த நிர்ப்பந்த முயற்சிகளினால் பூசல்கள் பெரிதாகி, சண்டை களாகி, மனைவியை அடித்து வதைத்து...

அடி பொறுக்காமல் தாய் வீடு வந்து தஞ்சம் புகுந்த பெண்ணை, வாழாவெட்டியாகவும் வாழவிடாமல் உறவினர்களும், ஜாதியினரும் ஜாதிவிட்டு காதலித்த 'கொழுப்பை' சொல்லிச் சொல்லி குத்திக் காட்டி, அதில் பெற்றோரும் சேர்ந்து கொள்ள... மனம் வெறுத்துப்போய் வெளியேறிய அவள் சமூக விரோதிகளால் பந்தாடப்பட்டு, சூறையாடப்பட்டு, ஒரு சோகக் கவிதையாக அழுது இப்போது விபச்சார விடுதியில் உயிர் வாழ்கிறாள்.

செய்தியின் அருகில் ஒரு அழகான இளம் பெண்ணின் புகைப்படம். அட... இந்த அழகான ரோஜா மலருக்கா, இந்தக் குரூரமான அலங்கோலம்?

படித்துவிட்டு நிமிர்ந்தான், ஜானகியைப் பார்த்தான்... அவள் கண்கள் உணர்ச்சிப் பெருக்கில் அகலமாய் விரிந் திருந்தன. முகமெல்லாம் ஆவேசம் கொப்பளிக்கக் கேட்டாள்:

''பாத்தீங்களா, ஒரு பெண்ணுக்கு கிடைச்ச கொடுமையை? பெரிய பெரிய மகான்கள் தோன்றி பேரன்பு,

கருணை பற்றியெல்லாம் போதிச்ச தேசத்துலே வறண்டு கிடக்கிற மனிதாபிமானம்! ஈக்குவாலிட்டி சிந்தனை பொங்கி வழியுற இருபதாம் நூற்றாண்டுலே, இவ்வளவு குரூரமான ஜாதீய பேதங்கள்; இந்தப் பாரதிக்கு விழா எடுத்து பெருமைப்படுற பாரத மண்ணுல தலை விரிச்சாடுற வரதட்சணை வெறி; மனுஷ உரிமைகள் பற்றி வாய் கிழியப் பேசி, வருஷத்துக்கொரு தேர்தல் நடத்துற நம்ம தேசத்துல ஒரு பெண்ணோட உரிமைக்கும் காதலுக்கும் நேர்ந்த கதி... எவ்வளவு பயங்கரமாயிருக்கு?... ஓ. காட்!''

''எனக்கே மனசு கஷ்டமாயிருக்கு''

பரந்தாமன் ஜானகியை ஆச்சர்யத்துடன் பார்த்தான். அந்தக் கண்களில் ஜ்வாலை விட்டெரிகிற ஆவேசம். கொந்தளிக்கிற பேச்சில் குமுறி நிற்கிற உணர்ச்சிகள்... கையை வீசுவதில் வெளிப்படுகிற மனசின் வேகம்...

இவள், ஜானகி தானா?

''நம்ம நாட்டுலே எத்தனை ஃபிளாக்ஸ் கலர் கலரா பறக்குது எத்தனை பொலிடிகல் பார்ட்டீஸ்? எத்தனை சேவா ஸ்தாபனங்கள்? எத்தனை மதங்கள்... கோயில்கள்... தத்துவங்கள்... இத்தனையும் மலிஞ்சு கிடக்குற ஒரு கண்ட்ரியிலே இதைப்போல பல ஆயிரக்கணக்கான பெண்கள் நிதம் நிதம் சித்திரவதை செய்யப்படுறாங்க... சீரழிஞ்சு போறாங்கன்னா, என்ன அர்த்தம்? ஜாதிகளையும், வரதட்சணையும், மற்ற கொடுமைகளையும் ஒழிக்கப் போறதாக முழங்குறாங்களே... எங்க ஒழிஞ்சிருக்கு? எது ஒழிஞ்சிருக்கு? மாறாக... கோர ரூபத்தோட வளர்ந்திருக்கு. இல்லையா?''

ஜானகியின் சத்திய வார்த்தைகளின் அக்கினியில் திகைத்துப் போய் நின்றான்.

அவளை வியப்போடும் அனுதாபத்தோடும் பார்த்தான். 'முதலில் இவளை சம நிலைக்குக் கொண்டு வரணும்'

''ஜானகி. டேக் இட் ஈஸி... மனுஷத் தனத்தைவிட சொத்துக்களை மதிக்கிற இந்த சொஸைட்டியின் செட்டப் புலே, இந்தப் போலித்தனங்களும் குரூரங்களும் இருக்கத்தான் செய்யும். ப்ராபர்ட்டிகளெல்லாம் பொதுவாகி, மனுஷத்தனம் உயர்வா மதிக்கப்படுகிற செட்டப்புலேதான் மனுஷ உரிமைகளும், வாழ்வும் பூப்போல மதிக்கப்படும்.''

இன்னும் அன்பான வார்த்தைகளால் அவளை ஆற்றினான். கடலைப் பருப்பு வாங்கிக் கொடுத்து கொறிக்கச் சொன்னான்.

''வா... காலாற நடப்போம்'' என்று மணலுக்குள் அழைத்துச் சென்றான். ஜானகியின் உணர்ச்சிகள் சமனப் பட்டன.

மணலில் பாதங்கள் பதிந்தன. மௌனமும் கூடவே சேர்ந்து நடந்தது. மனசுக்குள் நினைவுகள் கூச்சலிடுகின்றன.

''ஜானகி, ஒப்பனா ஒரு கேள்வி கேட்கிறேன். மனசுலே பட்டதைச் சொல்லு''

'என்ன?' என்பது போல பக்கவாட்டில் நிமிர்ந்த போது, அவளது கண்களின் அழகை ரசித்தான்.

''ஜாதி வேற்றுமைகளைப் பற்றி இவ்வளவு ஆத்திரமா பேசுறீயே, சொந்த லைஃப்லேயே இது எதிர்ப்பட்டா, என்ன செய்வே?''

''அப்பவும் இதே ஜானகிதான் இருப்பாள்''

இந்த பதில் அவனுள் ஒரு இன்ப ஊற்றாகப் பாய்ந்தது.

''ரியலா?''

''ஷ்யூர்''

அவளது உறுதி சத்தியமானதுதான். மனசின் அடியில் கொஞ்ச நாட்களாக முளைவிட்டு வளர்ந்து, வெளிப்பட துடித்துக் கொண்டிருக்கும் கேள்வியை கேட்டு விடலாமா?

தயங்க வேண்டியதில்லை. என்ன நினைத்துக் கொள்வாளோ என்று அஞ்ச வேண்டியதில்லை.

சிந்தனையோடு கடலைப் பார்த்தான். ஓயாத அலைகள் ஓடிவந்து இரைச்சலிடுகின்றன. அவனை ஏறிட்டு நோக்கிய ஜானகி,

''ஏன் கேட்டீக?''

ஒரு சின்ன முறுவலோடு ''ஒண்ணுமில்லே'' என்றான்.

இருவர் நெஞ்சுக்குள்ளும் ஒரே மாதிரியான நினைவுகள் அலைபுரண்டன. மனசின் கரைகளை அரித்துக் கரைக்கிற நினைவுகள்; உடைத்துக்கொண்டு பாய்வதற்குத் துடிக்கின்ற நினைவுகள்; ஒன்றுடன் ஒன்றாக மோதி சங்கமிக்க ஆவல்படுகிற நினைவுகள்.

தொங்கிக் கொண்டிருந்த மௌனத்திரையை பரந்தாமன் கிழித்தான்.

''ஒரு இம்பார்ட்டண்ட் மேட்டர் பேசணும்''

ஆவலோடு அவனை நிமிர்ந்து பார்த்தாள். இமைகள் படபடத்தன. அவள் மனசு எதையோ எதிர்பார்த்து, இன்பப் பரவசத்துடன்துடித்தது.

ரொம்ப நாட்களாய் எதிர்பார்த்தது. 'பரந்தாமனைப் பார்க்காமல் மனசு அடங்காது' என்ற உணர்ச்சி வெள்ளம்

அவளை மோத ஆரம்பித்த நாளிலிருந்து சந்திப்பதும் பேசுவதும் பிரிவதுமாக நட்பாக இருந்த உறவு, ராத்திரிப் பொழுதுகளிலும் வேறொரு பரந்தாமனாக வந்து மனசுக்குள் விளையாட ஆரம்பித்த நாட்களில் இருந்து எதிர்பார்த்த வார்த்தைகள், இது.

துடிப்புடன் கேட்டாள்: ''என்ன?''

''நாம டெய்லி மீட் பண்றோம். நிறைய பேசுறோம். சிரிக்கிறோம். பிரிஞ்சுடறோம்... இது வெறும் ஃப்ரெண்ட்ஷீப்தானா, இல்லே. அதுக்கும் மேலா?''

— இதைச் சொல்வதற்குள் அவன் திணறிப் போனான்.

நீண்ட நாளாக அவன் மனசை அழுத்திக் கொண்டிருந்த தயக்கம், முகத்தில் திணறலாகத் தெரிந்தது.

''நானும் கூட இதைப் பேசணும்னு கொஞ்ச நாளாகவே நெனைச்சுக்கிட்டிருந்தேன்...''

''நீ பேசியிருக்கலாமே ஜானகி, எனக்குத்தான் தயக்கம்?''

''என்ன தயக்கம்?''

இப்போது பரந்தாமன் ரொம்பக் குழம்பிப் போனான். பார்வை கீழே தாழ்ந்தது. உதடுகளை அடிக்கடி நாவால் ஈரப்படுத்திக் கொண்டான்.

''ஜானகி, நட்புக்கு ரெண்டு மனசுகள் மட்டும் போதும். அதுக்கும் மேலே போகும்போது, மனசுகள் மட்டும் போதாது. சமூகம் வேறு சிலதை எதிர் பார்க்கும்''

''என்ன எதிர்பார்க்கும்?''

ஏதோ இனம் புரியாத வேதனை உணர்ச்சியில் சிரமப்பட்டு திணறுகிற பரந்தாமனை பரிவோடு பார்த்தாள். அந்த அழகான கண்கள் அவனுக்கு தைரியத்தைச் சொரிந்தன.

ஏதோ ஒரு புதுமையான விசயத்தைச் சொல்வதைப் போல வினோதமான குரலில் ''நீ பார்வேர்டு கம்யூனிட்டி'' என்றான்.

''ஆமாம். அந்தப் பாவத்துக்கு நா என்ன செய்ய முடியும்?''

— ஜானகி சர்வ அலட்சியமாகக் கேட்டாள்.

''நா பேக்வேர்டு கம்யூனிட்டி. மேரேஜ்னு வர்றப்போ நீயோ, உன்னோட பேரண்ட்ஸோ இதை ஜீரணிச்சிக்க முடியுமா?''

அவன் முகத்தின் கறுப்பு கூடுதல் அடர்த்தியாக இருந்தது. தாழ்மை உணர்ச்சியின் உறுத்தலால் விளைந்த அவமானம், ஒரு வேதனையாகக் கண்களில் தேங்கியிருந்தது.

ஜானகி வெடித்துச் சிரித்தாள்; மோதிச் சிதறும் பேரலையின் சப்தமாகச் சிரித்தாள். பரிகசிப்பது போலச் சிரித்தாள். சட்டெனச் சிரிப்பு அடங்கி முகம் மாறியது. கண்ணில் கூர்மையான கோபம்.

''பார்வேர்டு, பேக்வேர்டு! சே, இந்த வேர்ட்ஸே நம்ம காலத்தோட அசிங்கம் இல்லே? நீங்க ஒரு கிராஜுவேட். பேங்க்லே வொர்க் பண்றீங்க. சிட்டியிலே சமத்துவமா சந்தோஷமா இருக்கீங்க... உங்க மண்டையிலேயே இந்த மாதிரியான சிந்தனைகளா? ஓ... காட், உங்க மனசுலே இன்னும் உங்க வில்லேஜ்தான் இருக்கு.''

அந்த உஷ்ணமான விமர்சனத்தினால் பாதிக்கப்படாத வனைப் போல பரந்தாமன் தோன்றினான். அந்த முகத்தில் இன்னும் அந்த மெல்லிய வேதனை. அவன் குரல் இலேசாகக் கரகரத்தது.

‘‘இல்லே ஜானகி. நமக்கு அசட்டுத்தனமாக தோன்றதை யெல்லாம் ஒதுக்கிட்டுப் போக முடியாது. வாழற சொஸைட்டி யோட கண்டிஷன்ஸை நாம புரிஞ்சுக்கணும்’’

‘‘புரிஞ்சுக்கிறது வேற, பணிஞ்சு போறது வேற இல்லே?’’

அவன் குழப்பமில்லாமல் தெளிவோடு அவள் கண்களைப் பார்த்தான்.

‘‘எஸ். நான் துணிஞ்சு நிற்கத் தயார். எனக்கு ஜாதி, டௌரி, சுமையா அழுத்துற சடங்குகள் எல்லாமே சுத்தமா பிடிக்காது... மனசார வெறுக்கிறேன். ரைட் ஐயாம் ரெடி; ஆர் யூ ரெடி?’’

இந்தக் கூர்மையான கேள்வி அவளுள் ஒரு இன்ப அதிர்வாகப் பாய்ந்தது. மனசுக்குள் ஒரு பூவானமே ஜில்லென்று சிரித்து மணம் வீசியது. அந்தச் சிரிப்பு அவளது ஈர உதடுகளிலும் பிரகாசித்தது.

‘‘என்ன ஜானகி?’’

‘‘ரொம்ப நாளைக்கு முன்னாலேயே நா முடிவு செய்ஞ்ச ஒரு விஷயத்தைத்தான் இப்ப கேக்குறீக.’’

அவன் கை ஆர்வக் கிளர்ச்சியோடு அவள் தோளைத் தழுவியது. அவள் உட்கார்ந்தாள். அவனும்தான்.

தோளைத் தொட்டுத் தழுவி, சற்று இழுத்து, நெருக்கத்தில், பரஸ்பரம் கண்கள் ஆழத்துக்குள் ஊடுருவிய போது —

இந்தக் கடலை - மனிதர்களை - உலகத்தையே மறந்த னர். புதிய உலகத்தை அவர்கள் கண்களில் பார்த்தனர்... ...

...பல்லவன் ஒரு குலுங்கலோடு நின்றது. சூடான காற்றுக்குப் பதிலாக, நீரைச் சுமந்த குளிர்ந்த காற்று முகத்தில் மோத, ஜானகி ப்ரக்ஞையுற்றாள்.

அவசரமாக இறங்கினாள்... சாலையைக் குறுக்காகக் கடந்தாள். ப்ளாட்பாரத்தில் சற்று நடந்து பாரதி சிலையை நெருங்கினாள். மணலுக்குள் இறங்கினாள்.

தனியாக - ஜோடியாக - குடும்பமாக அங்கும் இங்கும் மணலில் உட்கார்ந்திருந்த மனிதர்கள். வாழ்க்கை சுமத்திய பாரங்களை கடல் காற்றில் கரைக்க முயல்கின்ற மனிதர்கள்...

ஜானகியின் மனசுக்குள் அப்பா வந்தார்... ஈஸிச்சேரில் உட்கார்ந்து கொண்டு, கிருஷ்ணரின் கீதையை வாழ் நாளெல்லாம் வாசிக்கிற அப்பாதான்!

அவர் இந்தக் காதலை எப்படிப் புரிந்து கொள்வார்? ஜாதி பேதத்தை ஜீரணித்துக் கொள்வாரா? கொஞ்சம் குதிக்கத்தான் செய்வார். குலம் அழிந்து போவதைக் கண்டு புலம்புவார். மாதா மாதம் முதல் தேதி வருகிற சம்பளம் போய் விடுமே என்று பதறத்தான் செய்வார். அதற்கு மட்டும் ஏதாவது ஒரு உத்தரவாதம் செய்து விட்டால்... மற்ற விஷயங்களை ஜீரணித்துக் கொள்வார்.

ஜீரணிக்காவிட்டால்தான் என்ன? வருகிற கல்யாணத் தரகர்களையெல்லாம் எதையாச்சும் குற்றம் சொல்லி விரட்டிக் கொண்டிருக்கிற அவரைப் பொருட்படுத்தினால்... என்னா கும்? தலை நரைக்கும் வரை உழைத்துக் கொண்டு, கனவுகளைத் தின்று கொண்டு, தாலி கட்டாத விதவையாக வாழ்ந்து சாக வேண்டியதுதான்!

பரந்தாமன் என்னவோ ப்ராப்ளம் என்று போனில் சொன்னாரே, அது என்னவாக இருக்கும்?...

சமுத்திரத்தைப் பார்த்தாள். பசிய கறுப்பாக அடிவானம் வரை பரந்து விம்மி அசைந்து கொண்டிருக்கும் நீர்க்காடு. இரைச்சல் போட்டு ஓடி வருகிற அலைகள்... எதையோ பாய்ந்து பிடிக்கிற பேராவலோடு வந்து, மணலில் மோதிக் கரைகிற அலைகள்.

இந்த அலைகளுக்கு 'சாட்டர்டேயே' கிடையாதா?

நேரம் ஊர்ந்தது, ஒவ்வொரு நிமிஷமும் பரந்தாமன் இல்லாததை உணர்த்தியது. மனசுக்குள் ஏக்கமும் வேதனையும் ஒரு சோகத் திரையாகப் படிந்தன.

இரவெல்லாம் படுக்கையில் மாறி மாறிப் புரண்டாள்.

காலையில் ஆபீஸ் வேலையில் கூட மனம் ஈடுபட மறுத்தது. எந்நேரமும் பரந்தாமன்தான். 'பேங்க்' குக்குப் போன் பண்ணிக் கேட்கலாமா? நம்பர் கேட்டு வைத்துக் கொள்ளவில்லையே...

சரி... ஈவினிங்லேதான் சந்திக்கப் போகிறோமே!

சந்தித்தார்கள்.

''சாதிகள் இல்லையடி பாப்பா - குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்''

என்று முழங்கிய பாரதி சிலையின் அருகில், புல்லில் உட்கார்ந்திருந்தனர்.

''நேத்து ஏதோ ப்ராப்ளம்னு சொன்னீகளே...''

''ஆமாம் என்னோட சிஸ்டராலே ஒரு சிக்கல்''

''என்ன சிக்கல்?''

''வில்லேஜ்லே ஒரு அரிஜன பையனைத்தான் கல்யாணம் பண்ணுவேன்னு பிடிவாதம் பண்றாளாம். எங்க பேரண்ட்ஸ் மட்டுமில்லே... சொந்தக்காரங்க எல்லாரும் கடுமையா எதுக்குறாங்க. 'பணிஞ்சா பாக்கணும். இல்ல, காலக் கையை ஒடிச்சு வீட்டுக்குள்ள போடணு'னு நெனைக்கிற அளவுக்கு எதிர்க்கிறாங்க...''

''ஓ... காட்! அப்புறம்?'' அவள் மனம் படபடத்தது.

''சிஸ்டர் என்னை ரொம்ப நேசிப்பாள். நா சொன்னால் கேட்பாள். என்னாலேதான் அவளை கன்வீன்ஸ் பண்ண முடியும். அதனாலே, என்னைக் கூப்பிடுறதுக்காக நேத்து எங்க ரிலேசன்ஸ் வந்திருந்தாங்க.''

''நீங்க எப்ப ஊருக்குப் போறீங்க?''

''இன்றைக்கு நைட் வண்டிக்கு''

''போய்?'' அவள் மனம் 'திக் திக்' கென்று அடித்துக் கொண்டது. என்ன சொல்வானோ என்ற திகிலோடு - பீதியோடு அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

அவன் சமுத்திரத்தைப் பார்த்துக் கொண்டு சாதாரண மாகச் சொன்னான்:

''ஒரு சாதாரணமான வில்லேஜ்லே அரிஜன் பையனை மேரேஜ் பண்ணிக்கிட்டு எப்படி வாழ முடியும்? அவளைப் பார்த்துப் பேசி, கரெக்ட் பண்ணி, இங்க சிட்டிக்கு அழைச்சிட்டு வந்துடப் போறேன். அப்புறம், ஒரு பொருத்த மான இடம் பார்த்து கல்யாணம் பண்ணிக் கொடுக்கணும்.''

அவள் அதிர்ச்சியில் வெலவெலத்துப் போனாள். மனசின் ஒரு மூலையில் ஏதோ சரிந்து, நொறுங்கி, பொடிப் பொடியாவதைப் போன்றதோர் பிரமை. அவனது ஒவ்வொரு வார்த்தையும் நெருப்பில் காய்ச்சிய கொழுவாக அவளுக்குள் இறங்கியது. உள்ளுக்குள் ரத்தம் வழிந்தது.

அவளது கண்ணுக்குள் ஒரு உறுத்தல். விளிம்பில் ஒரு நீர்த்துளி திரண்டு நின்றது. 'இதுதான் நீங்களா...? இதுதான் உங்க நிஜமான நிறமா?'

''என்ன ஜான்?'' - திகைப்போடு கேட்டான்.

''நத்திங்!'' கோபத்தில் விருட்டென்று எழுந்தாள். உட்கார்ந்தவாறே அண்ணாந்து பார்த்தான். ஜானகியின் கண்களில் இப்போது, இழப்பின் சோகத்தைக் கடந்த அதீத வெறுப்பு. ஒரு புழுவைப் பார்ப்பது போன்றதோர் அசூயை.

''என்னை லவ் பண்றதுக்கு குறுக்கே நின்ன ஜாதியை உங்களாலே மனசார வெறுத்து ஒதுக்க முடிஞ்சது. உங்க சிஸ்டர் ஒரு ஷெட்யூல்டு கேஸ்ட் பையனை காதலிக்கிறப்போ மட்டும் உங்களாலே ஜாதியை ஜீரணிக்க முடியலே. இல்லே? அப்போ, நீங்க ஜாதி வித்யாசத்தை வெறுக்கலே. வெறுக்கிறதும், விரும்பறதும் உங்க வசதிக்கேத்த மாதிரித்தான். இல்லே? இவ்வளவு மோசமான சிந்தனையை மூடிமறைச்சிக்கிட்டு, எப்படி உங்களாலே பழக முடியுது? சே! உங்களோட பழகுன இந்த ரெண்டு வருஷ அழுக்கை எந்தக் கங்கையிலே போய்க் கழுவுறது?''

வெடித்துச் சிதறிவிட்டாள். அவன் அருகில் நிற்கிற ஒரு கணத்தைக்கூட வெறுப்பானது போல, விறுவிறுவென நடந்தாள். எதையோ பற்றிப் பிடிக்கிற பேராவலோடு வரும் அலைகளின் இரைச்சல் அவள் மனசுக்குள் ஒலித்தது.

ஆபீஸ் போவதா வேண்டாமா என்று ஊசலாடினாள். அவள் மனம் நொறுங்கிப் போய்க் காணப்பட்டாள். கண்ணீரில் கரைந்தாள்.

'இல்லை... இந்த மனுஷனை நினைச்சு அழுவது கூட இழிவு' என்று நினைத்தாள். வழக்கம் போல ஆபீஸுக்கு வந்தாள்.

அவளுக்காக ஒரு தபால் காத்திருந்தது. தபால் தலை ஒட்டாத வெறும் கவருக்குள் ஒரு சின்னக் கடிதம். பிரித்தாள்.

'அன்புள்ள ஜானகி,

வணக்கம். நேற்று, என் ஆயுளில் மறக்க முடியாத ஒரு நாள். ஏனெனில், தர்மாவேசமிக்க உனது சாட்டையடிகளில் தோலை உரித்துக் கொண்டு நான் புதிய பிறவி எடுத்த நாள். பெண்மைக்குரிய வீர்யத்துடன் உண்மையுடன் - நீ கொட்டிய அக்கினி வார்த்தைகளில் குளித்து என் மனம் சுத்தமடைந்தது.

நான் ஊருக்குச் செல்கிறேன், தங்கையை அழைத்து வருவதற்காக அல்ல. அவளது காதலுக்காக உறவினர் களுடனும், சமூகத்துடனும் போராடுவதற்காக. உனது நெருப்புச் சிந்தனை எனக்கு தைர்யத்தையும் வெற்றியையும் வழங்கட்டும்!

இனி நாம் சந்திப்பதும், சந்திக்காமலிருப்பதும் உனது விருப்பத்தைப் பொறுத்த விஷயம். இதோ, எனது போன் நம்பர்.

என்றும் உனது பிரியன்
**பரந்தாமன்'**

போன் நம்பரும் குறிப்பிட்டிருந்தது. அந்த நம்பரை மனசுக்குள் அழுத்தமாகப் பதித்துக் கொண்டாள்.

*-செம்மலர் - ஜூலை - 1983*

# அணைய மறுக்கும் நெருப்பு

*அந்த லாட்ஜின் மூன்றாவது ப்ளோரின் பால்கனியில் நின்றால்... உஸ்மான் சாலையின் இயக்கம் முழுமையும் தெரிகிறது.*

*அதோ... எதிரும் புதிருமாக - ஒன்றன்பின் ஒன்றாக - பல்லவன்கள்... டாக்ஸிகள்... நாராசமான இரைச்சல்களுடன் வழுக்கிச் செல்லும் ஆட்டோக்கள்... சைக்கிளிலும் நடந்துமாக மனிதர்கள்... அழகான இளம் பிஞ்சுகள்... தாவணியும் கவுனுமாகப் பூத்துச் சிரிக்கும் வண்ணத்துப் பூச்சிகள்...*

*அதோ... கோயில்... பிரகாரத்துக்குள் வலம்வரும் அய்யர்கள், ஆச்சிகள்... சிறுசுகள்...*

*லாட்ஜுக்கு எதிரில் இளநீர் வியாபாரம், பூ வியாபாரம்...*

*உஸ்மான் சாலை உயிர்ப்புடன் சுழன்று கொண்டிருப் பதை எந்த நோக்கமுமின்றி... சோர்வின் அசதியில் மயங்கிப் போய் பார்த்துக் கொண்டு நின்றான் சுந்தரம்.*

*ஒன்பது மணிக்கே வெயில் நிறம் மாறி உஷ்ணத்தை ஏற்றிக்கொண்டிருந்தது. பேண்ட்கள்... வேஷ்டிகள் ஆபீஸுக்கு பரபரத்துக் கொண்டிருந்தன. பவுடரும் பூவுமாக ஸாரிகளும் போட்டி போட்டு விரைந்து கொண்டிருந்தன...*

'கிர்ர்ர்ர்... ... கிர்ர்... கிர்ர்ர்ர்...'

அழைப்புப் போர்டு அலறுகிறது. எரிச்சலுடன் திரும்பினான் சுந்தரம். போர்டின் பல்ப் எரிந்து அடங்குகிறது.

விருட்டென்று வந்து போர்டைப் பார்க்கிறான். அலறியது 141. அதன் சிவப்புக் கண்ணைக் கோபத்துடன் ஒரு தட்டுத் தட்டி அணைக்கிறான்.

மனசெல்லாம் வெறுப்பு... வசவாக வெளிப்படுகிறது...

''பு... மகன்! விடிஞ்சு இந்நேரத்துக்குள்ளே பதினெட்டாவது தடவையா அழைக்கிறான்.''

மறுபடியும் 141 - நம்பர் ரூம் அலறி அழைக்கிறது.

'பொறுங்கடா... தின்னிப்பயல்களா...' என்ற மனசு ''எஸ்... வாரேன்'' என்றான் பலமாக.

141-ன் கதவைத் தட்டினான். திறந்து கொண்டது. ''என்ன?'' என்றான் வெடுக்கென்று.

''மூணு காபி''

''ம்... சரி...'' வெளியேறினான்.

''டேய்...''

மீண்டும் 141.

''என்ன?''

''ஒரு பாக்கட் பில்டர் கோல்டு பிளாக்...'' ஐந்து ரூபாய் நீண்டது. மனசுக்குள் நெருப்பு. வாங்கிக் கொண்டான்.

''சரி வேறெ எதனாச்சும் வேணுமா?''

சுந்தரத்தின் கேள்வியின் உஷ்ணம் 141-ஐத் திகைக்க வைத்தது. அதிர்ச்சியுடன் - கோபத்துடன் ஏறிட்டுப் பார்த்தார்.

சுந்தரத்தின் வெறுப்பைக் கக்கும் பார்வை - 'ஒன்றும் வேணாம்...'

சுந்தரம் நகர்ந்தான். படிகளில் தாவித்தாவி இறங்கி னான். பாளையங்கோட்டை வசவுகளும், மெட்ராஸ் பாஷை வசவுகளும் கலந்து சிதறின.

கிச்சனில் காபிக்கு ஆர்டர் தந்துவிட்டு, கடைக்கு ஓடினான். யார் மீதோ மோதிக்கொண்டான். ''ஏண்டா சுந்தரம்... எங்கே ஓட்றே?''

''கடைக்கு''

''யாருக்கு...?''

''141க்கு. அங்க ஒரு திமிர்பிடிச்ச பயல்.''

ஓடினான்... காபியை எடுத்துக் கொண்டு படிகளில் ஏறித்தாவி... மூன்றாவது ப்ளோருக்கு வந்து சேரும் போது, வேர்த்துக் கொட்டியது. களைப்பில் நெஞ்சு திக் திக்கென்று இளைத்தது. 141 ஐ திறந்தான். மீண்டும் ரூபாய் 10 நீண்டது. ''ப்ளேடும், பவுடர் டின்னும் வாங்கி வா''

சுந்தரத்துக்கு தேகமெல்லாம் எரிந்தது. கண்கள் அனலைக் கொட்டியது. நெஞ்சுக்குள் பீறிட்ட உணர்ச்சி களையும், வார்த்தைகளையும் கொட்ட முடியவில்லை. இவர்கள் பணத்தால் கொழுத்தவர்கள். கறுப்புப் பணத்தில் நீச்சல்போட்டு உல்லாசம் தேட வந்திருக்கும் தொப்பைகள்...

இவர்களது புகாரை லாட்ஜ் மேனேஜர் ரொம்ப சிரத்தை யுடன் கவனிப்பான். பணம் சுரக்கும் காமதேனுக்களாயிற்றே!

மனசின் கொதிப்பை பதுக்கிக் கொண்டு, பணத்தை வாங்கிக் கொண்டு வெளியேறினான். வசவுகளைத்தான் முணுமுணுப்பாக வெளியேற்ற முடிந்தது.

மீண்டும் 'கிர்ர்ர்' 134 அழைத்தது.

''என்ன சார் வேணும்?''

''என்ன டிபன் இருக்கு...?''

சுந்தரம் வழக்கம் போல வாய்ப்பாடாக ஒப்புவித்தான். அவர்கள் ஏதோ சொல்ல, சரியென்று கிளம்பினான்.

மணி 10ஐ நெருங்கியது. ஓடி ஓடிக் களைத்தும் போய்விட்டான். அழைப்புகள்... ஓட்டம்... உத்தரவுகள்... பணிவிடைகள்... மானங்கெட்ட பொழைப்பு...

ஓய்வுக்கு உடம்பின் ஒவ்வொரு அணுவும் கெஞ்சியது. பால்கனியில் கிடந்த பிரம்பு நாற்காலியில் சாய்ந்தான். ரொம்பச் சோர்வாக இருந்தது. சுந்தரத்துக்கு இந்த சுற்றுச் சார்பே குமட்டிக் கொண்டு வந்தது. வெறுப்பு... வெறுப்பு... ஆவேசமாக வளர்ந்து கொண்டிருக்கும் வெறுப்பு...!

எல்லாமே பணக்காரப் பயல்கள்... சினிமாக்காரன்கள்... ஏதேதோ பெயர் சொல்லிக் கொண்டு... மாதக்கணக்காக அறைக்குள் கிடக்கும் உல்லாசப் பிறவிகள்...

பணத்தை நீராக இறைக்கும் சுபாவங்கள்! குளிப்பு... கொழுத்த தீனி... பளிச்சென்ற உடையலங்காரங்கள்...

இரவில் போதைத் தண்ணி... மட்டன்... காரம்... சில சமயம் ஏதாச்சும் வாடகைப் பெண்கள்!

இந்தப் பயல்கள் இந்தப் பூமியில் எதற்காக வாழ்கிறார்கள். வாழ்ந்து என்ன சாதிக்கிறார்கள்... இவர்கள் செத்துப் போனால்... யாருக்கு என்ன நஷ்டம்...?

இந்தப் பயல்களைக் கண்டாலே, காறி உமிழ வேண்டும் போலிருக்கிறது... இவர்களுக்குப் பணிவிடை செய்து தீரவேண்டிய நிர்ப்பந்தம்! ச்சே

அதிலும்... இவர்களின் அதிகாரம்... பணிவை எதிர்பார்க்கும் பெரிய மனிதத்தனம்... பணத் திமிர்!

இந்த உல்லாசப் 'பேமானி'களுக்கு சேவகம் செய் வதைக் காட்டிலும்... பேசாமல் பாளையங் கோட்டை யிலேயே இருந்திருக்கலாம்...

அந்தக் கொடுமைக்காரச் சித்தியிடம் அடிவாங்கிக் கொண்டு, வசவுவாங்கிக் கொண்டு... பட்டினி கிடந்து கொண்டு, இருந்திருக்கலாம்... எப்போதாவது கிடைக்கும் அப்பாவின் ஆறுதலும்... அன்பும் பரிவான தழுவலும்... மிஞ்சியிருக்கும்!

இந்த செழுமையான சென்னையிலே... அதற்கு எத்தனை வறட்சி!

அப்பாவின் அந்தப் பரிவான இரக்கம் ததும்பும் பார்வை. எரியும் - அழும் - மனசுக்கு இதமாகத் தடவிவிடும் பார்வை.

அது போன்ற பார்வை இங்கே தட்டுப்படவே மறுக்கிறதே!

சித்தியின் அடிபொறுக்காமல் 'மூனாம் வகுப்பு'க்குப் போகாமல், ரயிலில் மூனாம் வகுப்பில் ஒளிந்து சென்னை வந்து சேர்ந்த நாட்கள்...

கையில் துணியுடன் - வாளியுடன் இதே லாட்ஜில் சாப்பிட்ட எச்சங்களைத் துடைத்த நாட்கள்...

அறைகளின் பாத்ரூமையும், லெட்ரீனையும் வாஷிங் செய்த அசிங்கமான அவலமான நாட்கள்... இப்போதுதான் 'லாட்ஜ் பாயாக' பதவி உயர்வு! சென்னை வந்த இந்த எட்டு வருஷங்களில் எத்தனை அனுபவங்கள்! கசப்புகள்... கரிப்புகள்—

இங்க 'அப்பாவே' கிடையாது. எல்லாமே 'சித்திகள்' தான்! அரட்டுகிறவர்கள் - அதிகாரம் பண்ணுகிறவர்கள் - விரட்டி வேலை வாங்குபவர்கள்... கோள் சொல்லுபவர்கள்... அடிப்பவர்கள்... இரக்கமற்ற சித்திகள்தான்...

இவர்களுக்கு பயப்பட வேண்டும் என்று எந்தச் சமயத்திலும் தோன்றவே மறுக்கிறது. வெறுக்கத்தான் தோன்றுகிறது. இவர்களையெல்லாம் ஒரே கணத்தில் எரித்து சாம்பலாக்கி விடத்தான் மனசு துடிக்கிறது.

'கிர்ர்ர்... கிர்ர்... கிர்ர்ர்...' உணர்வுக்கு வந்தான் சுந்தரம். மீண்டும் அதே 141. ''எஸ் சார்...'' என்றான் பலமாக. மனதுக்குள் கெட்ட வார்த்தைகள் குமுறிக் குமைந்தன.

அழைப்புப் போர்டு சலிப்பில்லாமல் அலறியது. ஒவ்வொரு அறைக்கும் ஓடிக்களைத்தான். சாப்பாடு... தயிர் சாம்பாருக்கொரு தடவையாக அனாவசியமாக அலைய வைத்தனர்... படிகளில் இறக்கம்... ஏற்றம்... உஸ்ஸ்ஸ் அப்பா!

ஒவ்வொரு தடவையும் மாடிப்படிகளை ஏறி இறங்குகையில் மூச்சிரைத்தது. 'சே இது ஒரு பிழைப்பா' என்று தோன்றியது.

இந்த அலைச்சல் ஒரு வழியாக ஓய்ந்து, உட்கார்ந்த போது, - மீண்டும் கிர்ர்ர்... நிமிர்ந்தான். 138-ம் நம்பர் ரூம் தான் அழைக்கிறது. மனசு விசேஷமாக எரிந்தது, பல்லைக் கடித்தான். 'ராஸ்கல்... தேவடியா மகன்...'

'எஸ் சார்' சொல்லத் தோன்றவில்லை. மனசில்லாமல் எழுந்து போய் 138ஐ திறந்தான். என்ன என்று கூட கேட்காமல் சும்மா நின்றான்.

இப்போதுதான் விழித்திருக்கிறான். முகமெல்லாம் தூக்கக் கலக்கம். நேற்று இரவு முழுக்க வாடகைப் பெண்ணும், பாட்டிலுமாகப் பொழுதை வீணாக்கிப் பகலில் உறங்கி, இப்போது எழுந்திருக்கிறான், தேவடியாப் பயல்!

''காபி இருக்கா?'' ''இப்ப கிடையாது. நாலு மணிக்கு மேல்தான்!'' ''சரி இந்தா பேஸ்ட்டும், சிகரெட்டும் வாங்கி வா... சாப்பாடு வாங்கிட்டு வா...''

தந்த பணத்தை வாங்கிக் கொண்டு, சுந்தரம் திரும்பினான். மனசில் குமைச்சல்... 'தேவடியாப் பயல்... பணத் திமிர்!' போனவாரம் ஒரு நாள் —

நாலு தடவை பெல்லை அழுத்தியும் நான் வரவில்லையாம். மேனேஜருக்கு போன் பண்ணியிருக்கிறான். மேனேஜர் கூப்பிட்டு 'விசாரித்து' —

விசாரிப்பென்ன. அரட்டல்... முதுகில் நாலு சாத்து! மற்ற ரூம் பாய்கள் வேடிக்கை பார்த்தனர்.

அந்த அவமானக்காயம் இன்னும் ரணமெடுக்கிறது.

பத்துப் பதினைந்து நாட்களுக்கு முன்பு —

ஒரு மாலையில் இதே தடியன் கேட்டான், ''நைட்டுக்கு ஒரு கிராக்கியை கொண்டு வாரியா... பணம் தாரேன்...''

அதற்குச் சில ரூம்பாய்கள் சம்மதிப்பார்கள். ஆனால் சுந்தரம் மறுத்துவிட்டான். மறுக்கும்போது... மனசின் சத்தியத்தையும் கக்கிவிட்டான்...

''நம்மாலே முடியாது சார்... அந்தக் கேவலமெல்லாம் எனக்கு வேணாம் சார்...''

சாட்டையடி வாங்கியவன் போல நிமிர்ந்தான். அன்றிலிருந்து இவன் மீது அவனுக்குக் கோபம்... குரோதம்!

'பொடிப்பயல் எவ்வளவு அகம்பாவமா பேசுறான்!'

இவனைப் பணிய வைக்க முயற்சித்தான். ஆனால் சுந்தரமோ மீண்டும் மீண்டும் வெறுத்தான். எதிர்த்தான்.

ஒரு தடவை சிகரெட் வாங்கியது போக மிச்சம் 2 ரூபாய் இருந்தது.

''வைச்சுக்கோடா...'' என்றான். மற்ற ரூம்பாய்கள் சந்தோஷமாக ஒரு சிரிப்பு சிரித்து வாங்கிக் கொள்வர். சலாமும் செய்வார்கள்.

சுந்தரம் மறுத்துவிட்டான்.

''வேணாம் சார்... எனக்கு சம்பளம் தர்ராங்க. அது போதும்''

அறைக்காரனுக்கு இது ஒரு அறை போல வலித்தது. அவமதிப்பாகத் தெரிந்தது. சுந்தரத்தைப் பொறுத்தவரை... இது ஒரு எதிர்ப்பு!

இதோ... போன வாரம் பழிவாங்கி விட்டான். பகிரங்கமாக அடி வாங்கித் தந்து விட்டான்.

இவன் கொஞ்சம் பெரிய சித்தி!

பேஸ்ட்டும் சிகரெட்டும் வாங்க சுந்தரம் கடைக்கு ஓடினான்.

மேலும் சில நாட்கள், சின்னச் சின்ன காயங்களை - சிராய்ப்புகளை ஏற்படுத்தி ரணப்படுத்திவிட்டு விரைந்தன.

இரவு 10-00. இத்துடன் அவனுக்கு வேலை முடிந்துவிட்டது. டவுசரையும், ஒயிட் ஷர்ட்டையும் போட்டுக் கொண்டான்.

படத்துக்குப் போகலாமா... ஏற்கெனவே வேறு மூன்று ரூம் பாய்களுடன் ஒப்பந்தமாகியுள்ளது.

'சீனிவாசா'வுக்கு இன்று படம் பார்க்கப் போவதென்று!

அவசர அவசரமாக கிளம்பிக் கொண்டிருந்தான் சுந்தரம்.

அந்நேரம் —

ஒருவர் எதிர்ப்பட்டார்.

''தம்பி... உன்னை 138லே கூப்டுறாங்க...''

''டயம் முடிஞ்சு போச்சுதே...''

''என்னவோ கூப்டுறார்.''

'சனியன்' என்று மனதுக்குள் திட்டிக்கொண்டு 138ல் போய் நின்றான். அங்கு நாலைந்து'பேர்... பாட்டில்கள் காலியாகிக் கொண்டிருந்தன, மனதுக்குள் குமட்டல்.

பத்து ரூபாய் நீண்டது.

''போய் மட்டன் வாங்கிட்டு வா. டிப்ஸ் தாரேன்''

''எனக்கு டயம் முடிஞ்சு போச்சு.. நா பிக்சருக்குப் போறேன். நைட் டியூட்டிக்கு வேற ஆள் இருக்கார். வரச் சொல்லுறேன்...''

''தெரியும். அவன் வேறெ வேலைக்குப் போயிருக்கான். நீ போய் வாங்கிட்டு வா...''

வேறு வேலையா? என்ன வேலை (வாடகைப்) பெண் அழைப்புக்கா? மௌனமாகத் தயங்கி நின்றான்.

''என்னடா சொல்றே?'' மிரட்ட எண்ணுகிறான். ஓ... பணத்திமிர்... அதிகார மமதை...

தயக்கம் வெறுப்பில் நிலைத்து நின்றது.

''முடியாது சார்... நா படத்துக்குப் போறேன், டயமா யிடுச்சு'' விருட்டென்று கிளம்பி விட்டான்.

''டேய்... டேய்... டேய்...'' குரல் முதுகுக்குப் பின்னால் துரத்தியது. அலட்சியமாகப் போய் விட்டான்.

பணத்திமிர்... எல்லாத்தையும் பணத்தாலேயே சாதிச்சுடலாம்னு நினைக்கிறான்... மடையன்!

மறுநாள். வழக்கம்போல் 5 மணிக்கே டவுஷர், ஷர்ட்டில் பணிக்குத் தயாரானான். எட்டு மணி ஆகியிருக்கும்.

மேனேஜர் அழைப்பதாக ரூம் பாய் ஒருவன் வந்து சொன்னான்.

''உம்மேலே ரொம்பக் கோபமாயிருக்கார். போய் பணிவா நடந்துக்க... இல்லே... சீட்டே கிழிஞ்சு போயிடும்''

வயிற்றுக்குள் எதுவோ பிசைந்தது. எதற்கு? என்ன காரணம்? ''என்ன விஷயம்?''

''138க்காரர் புகார் செய்துருக்கார்''

பளிச்சென்று நினைவுக்கு வந்தது.

ரிசப்ஷன் ஹால். மேனேஜர் நின்றார். வேறு ஒரு சில ரூம் பாய்கள். 138 தடியன்.

''என்ன சார்...?''

''ஏண்டா, இந்த சார்கிட்டே நைட்லே என்ன சொன்னே?''

''தப்பா ஒண்ணும் சொல்லலியே''

''வாங்கித் தரமாட்டேன்னு சொன்னியா?''

''இல்லே சார்... ட்யூட்டி முடிஞ்சு போச்சு, அப்பவும் சரின்னு சொல்லலாம்னு இருந்தேன்... சொல்றதை ரொம்ப அதிகாரமா மிரட்டிச் சொன்னார்... அதான் மாட்டேன்னு சொன்னேன்...''

''ஏண்டா, சட்டமா பேசறே? யார்னு நினைச்சே, அவரை? ஆறு மாசமா இதே லாட்ஜ்லே தங்கியிருக்கார். தெரியுமா?''

'தேவடியாப்பயல்' - சுந்தரத்தின் மனம் எதிரொலித்தது. மேனேஜர் தொடர்கிறார்..

''அவர்கிட்டே நீ இப்படி நடந்தா எப்படி? இதோ அவர் உன்னைப் பற்றி நாலாவது தடவையா புகார் பண்றார். நானும் உன்னைச் சரிக்கட்டி விட்டுக்கிட்டேயிருந்தேன். இனிமே ஒண்ணும் செய்ய முடியாது. உன்னைவிட கஸ்டமர்ஸ்தான் முக்யம்.''

சுந்தரம் மனசுக்குள் கொதித்தான். அதர்மங்கள் அரியணையில் முழுமரியாதை பெறுகின்றன...

''என்னடா சொல்றே?''

''என்ன சார்...?''

''முதல்லே நீ இவர்கிட்டே மன்னிப்பு கேட்கணும்.''

பகீரென்றது சுந்தரத்துக்கு.

மன்னிப்பா... இவர்களிடமா... இந்தத் தேவடியாப் பயலிடமா... குடிகாரனிடமா...?

நினைக்கவே கசப்பாக இருந்தது.

எல்லாமே சித்திகள்... இரக்கமற்றவர்கள்... கயமைத் தனம் மட்டுமே தெரிந்தவர்கள்... அயோக்கியர்கள்... இவர்களுக்கு பயப்படுவதைவிட கேவலம் வேறு என்ன! சே!

தீர்மானமாகச் சொன்னான்.

''இல்லே சார். நா ஒண்ணும் தப்பு பண்ணலே?''

''நா சொல்லியும் கேக்க மாட்டே? அப்போ உனக்கு இங்க வேலை கிடையாது...'' மனசு திக்கென்றது. உள்ளுக்குள் சிறு சலனம்.

எப்போதும் போலவே இப்போதும் பணிய மனம் மறுக்கிறது. வெறுத்தான். நெஞ்சின் ஆழத்திலிருந்து வெறுத்தான்.

இவர்களையெல்லாம் ஒரே கணத்தில் எரித்துச் சாம்பலாக்கி விட வேண்டுமென்று மனம் துடிக்கிறது. மேனேஜரை விட்டு விலகி வந்தான்.

எல்லோரும் இவனையே பார்த்தனர். குரோதமான பார்வைகள். பணிவை எதிர்பார்த்து அடிபட்ட ஆதிக்கத்தின் பார்வைகள்... பணத்திமிரின் பார்வைகள். எல்லாவற்றையும் அலட்சியப்படுத்தி விட்டு வெளியேறினான்.

இவன்களுக்கிட்டே வேலை பார்க்கிறதைவிட... பீச்லே சுண்டல்வித்துப் பொழைக்கலாம். அவங்க தேவடியாப் பயல்க... இந்த மேனேஜர் பய... 'கூட்டி' விடுற பயல்...

மனசு நெருப்பாக எரிந்து கொண்டிருந்தது.

-விழிப்பு, 1982

# கூரை

ஆடிமாசம். மேல்காற்று மட்டு மரியாதையில்லாமல் புழுதியை வாரி இறைத்து கேலிக் கூச்சல் போடுகிறது. சேலை துணிமணிகளைக்கூட உடம்பிலிருந்து இழுத்துக் கொண்டு ஓடப்பார்க்கிறது. புன்செய் பொழிவில் நடக்க முடியவில்லை. ஆளைப் பிடித்துத் தள்ளுகிறது.

கம்மங்கதிர் மணி பிடிக்க ஆரம்பித்து விட்டது. கட்டை குட்டையாக நிற்க வேண்டிய ஒட்டு வீர்யக் கம்பம் பயிர், ரசாயன உரத்தில் வீர்யம் அதிகரித்த கரிசல்மண் வளத்தினால்... தலையை மறைக்கிற அளவுக்கு வளர்ந்திருக்கிறது.

மாரியம்மாள், முதலாளி புன்செயை ஒரு பாசத்துடன் பார்த்துக் கொண்டே நடந்தாள். நீளம் நீளமாய் வளர்ந்திருக்கிற கதிர்கள், கனத்துப் போய் காற்றுக்கேற்ப ஒரு சேர அசைகிறபோது... பார்க்க எவ்வளவு அழகாயிருக்கிறது!

'இந்த ரெண்டரை குறுக்குத் தோட்டத்துலே அரைக் குறுக்கம் புஞ்சைலேயுள்ள கம்மந் தட்டைன்னா சரியாய்ப் போகும்... பிரிஞ்சு வாயைப் பௌந்து கிடக்குற வீட்டுக் கூரையை பிரிச்சு மேஞ்சிடலாம். வீட்லே கூரைதானே முக்யம்? அது திறந்துகிடந்தா... கேவலந்தானே! கூரையை மேஞ்சி ஒழுங்கு பண்ணிட்டாத்தான்... குடிச்ச கஞ்சி கூட்டிலே சேரும்.

அவள் நினைவுகளை ஒரு லாரியின் முரட்டுத்தனமான சத்தம் அறுத்தது. கிழக்கிலிருந்து வருகிற மெட்டல் ரோட்டில் ஒரு மஞ்சள் லாரி ஊருக்குள் ஓடி வருகிறது... கொள்ளையடிக்க வருகிறவர்களைப் போல... எதையோ அள்ளிக்கொண்டு ஓடப்போகிற வெறி வேகத்தில்...

ஊர்லே இருக்கிற எருமை மாடுகளிலெல்லாம் பீய்ச்சுகிற பாலை மொத்தமாக வாங்கி கேன்களில் அடைத்து வைத்திருக்கிற சொஸைட்டிக்காரர்களிடமிருந்துதூக்கிக் கொண்டு போக வருகிறது. காலி கேன்களைத் தூக்கியெறிந்து விட்டு, பால் கேன்களை ஏற்றி அடுக்கிக் கொண்டு லாரி நிற்காமல் ஓடிவிடும்...

நாலு வீட்டுக்கு ஒரு வீடு கணக்குலே!... ஊர் முழுக்க மோர் கடையுற சத்தம் காலை நேரத்திலே என்னமாய் கேட்கும்...! வீட்டுக்கு வீடு 'உறைமோர்' கொடுத்து வாங்கிக் கொள்கிற அந்தப் பரஸ்பரம்!... மாடு இல்லாத பக்கத்து வீட்டுக்காரர்களுக்கு சட்டி சட்டியாக மோர் ஊற்றிக் கொடுக்குற பெருந்தன்மையான அந்யோந்யம்...

சவலை பாய்ந்த குழந்தைகளுக்கு தினந்தோறும் ஓசிப்பால் தருகிற இயல்பான தயாளம்... ... பால் வாங்க வரத் தயங்குகிற குழந்தைகளின் தாய்களை 'உறுத்தோட' கண்டித்துக் கொள்கிற அந்தப் பிணைப்பு...

ஒரு வீட்டுக்கு விருந்தாளிகள் வந்துவிட்டால்... கேட்காமலேயே வெண்ணெய் வந்து சேருகிற அந்த நிஜமான பரிவு...

...இப்படி எத்தனையோ பல நல்ல சமாச்சாரங்களை சுத்தமா துடைத்து அள்ளிக்கிட்டுப் போகுதே... லாரி!

மாத மிருமுறை நடக்கிற பால்பணப் பட்டுவாடா சந்தோஷத்தில் - ஜனங்கள் இழக்க விரும்பாமல் பறிகொடுத்து விட்ட பண்புப் பொக்கிஷம்!

சூரியனை நோக்கி ஓடுகிற லாரியையே பார்த்துக் கொண்டிருந்த மாரியம்மாளுக்கு கண்கள் காந்தலெடுத்தது. இமை தட்டி முழித்துக் கொண்டாள்.

வந்த வேலை ஞாபகம் வந்தவளாக... திடுதிப்பென்று பரபரப்பானாள். தோட்டத்துக்குக் கீழ்புறம் படப்பாக அடையப்பட்டிருந்த மிளகாய் மாரில் உருவி ஒரு கட்டு கட்டிக் கொண்டாள். புஞ்சைக்குள் இறங்கி அகத்திக்கொழையை ஒடித்தாள். ஒரு கட்டு சேர்ந்து விட்டது. காலை வெய்யிலில் கழுத்தடிக்குள் வியர்வை நச நசத்தது.

''முளகாமாரைக் கொண்டு போய் முதலாளி வீட்லே போட்டுட்டு... அகத்திக் கொழையை அவுக வீட்டு ஆட்டுக் கிடாய்களுக்கு தூக்கில் கட்டிவிட்டு... கஞ்சியை குடிச்சிட்டு, முதலாளி வீட்டு வயக்காட்டுக்கு பருத்தியெடுக்கப் போகணும்...''

அவசர உணர்வில் கால்களுக்கு இறக்கை முளைத்துக் கொண்டது.

வீட்டுக்குப் போனாள். புருஷனுக்குக் கஞ்சி ஊற்றித் தந்தாள். அலுமினியத் தூக்குச் சட்டியில் கம்மஞ் சோறையும், வறுத்த மிளகாய் வற்றலையும் வைத்து, மூடிக் கொடுத்து விட்டாள். பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்கும், சத்துணவுக் கூடத்திற்கும் போய்விட... மாரியம்மாள் வயக்காட்டை நோக்கி ஓடினாள்.

நடையை எட்டிப் போட்டாள்.

கம்மந்தட்டைகள் விலகிச் சரிந்து... கூரை முகடு 'முண்டமாய்' கிடப்பது நினைவுக்கு வந்தது.

'...கூரை வாயைப் பொளந்து கெடக்குது. ரவ்வுலே படுத்தா கண்லே ஒறக்கம் ஒட்ட மாட்டேங்குது. கஞ்சிகுடிச்சா என்ன... குடிக்காட்டா என்ன - உடம்பை மூடுறதுக்கு துணியும் படுத்துறங்க ஒழுகாத வீடும் இருந்தாகணும். கூரையை மேய்ஞ்சு முடியுற வரைக்கும் குடிக்கிற கஞ்சி கூட்டிலே தங்காது.'

கூட்டம் கூட்டமாக எருமைகள் பாதைகளை அடைத்துக் கொண்டு மேய்ச்சலுக்குப் போகின்றன. சின்னஞ் சிறு கிராமத்து மொட்டுகள் மாடுகளின் வாலில் பாடம் படித்துக் கொண்டு பின் தொடர்கின்றன.

எல்லாவற்றையும் கடந்துகொண்டு மாரியம்மாள் வேகமாய் நடந்தாள், காலை வெய்யில் உஷ்ணமில்லாமல் அடித்தது.

ஊருக்குக் கிழக்கே சற்றுத் தள்ளி அரண்மனை போல புதிதாகக் கட்டப்பட்டு சந்தன நிறத்தில் சூரியனாக பிரகாசித்த பால் சொஸைட்டிக் கட்டிடத்தைப் பார்த்தாள், பிரிந்து கிடக்கிற கூரையை நினைத்துக் கொண்டாள்.

முன்பெல்லாம்... இறவைத் தோட்டங்களில் கோடை வெள்ளாமையாக மயிலங்கம்பு பயிரிடுவார்கள். கம்மந் தட்டை 'ஓங்குதாங்க' உயரமா வளரும். தட்டையும் உலர உலர கரும்புத்தட்டை மாதிரி வலுவாக இருக்கும். ஒடியாது. அதை வைச்சு கூரை வேய்ந்து விட்டால்... எவ்வளவு அருமையாக இருக்கும்.

ஐந்து வருஷத்திற்கு கவலையில்லை... ... ஜம்மென்று இருக்கும்.

இப்போதெல்லாம் ஒட்டு வீர்யக் கம்புதான்... பயிர் கட்டை குட்டையாகத்தானிருக்கும். தட்டை காய்ந்து விட்டால் பொடிப் பொடியாய் நொறுங்கும்... சீக்கிரத்தில் செமித்து குப்பையாகிப் போகும். என்ன செய்வது? இப்போது இதைவிட்டால் வேறு வழி கிடையாது. இந்த ஒட்டுக் கம்பந்தட்டைகளை வைத்துத்தான் வேயவேண்டியிருக்கிறது.

அது ஒண்ணு... முதலாளி இருக்கிற வரைக்கும் கம்பந்தட்டைக்கு அலைய வேண்டியதில்லை. கூரை வேய வேண்டிய வருஷத்திலெல்லாம் வேண்டுமென்கிற அளவுக்கு எடுத்துக்கொள்ளச் சொல்லிவிடுவார்.

'நிலை'யிலேயே நாம் அறுத்துக் கொள்ள வேண்டியது. வண்டியில் பாரமேற்றி வீடு கொண்டு வந்து சேர்த்துக் கொள்வது நம்ம பொறுப்பு. கம்பந்தட்டைக்காக அஞ்சு பைசா கூட வாங்கிக் கொள்ளமாட்டார்.

அதற்காக சும்மா விட்டுவிட முடியுமா என்ன? வருஷமெல்லாம் வஞ்சகமில்லாமல் கொசுறு உழைப்பு உழைத்து விடுவது. சித்த சித்த நேரம் செய்ய வேண்டிய ஓசி வேலைக்கெல்லாம் அலுப்பு பார்க்காமல் - அட்டியில்லாமல் - கலந்து கொள்வது. மிளகாய் வற்றல் வருகிற மாசி பங்குனி மாசத்துலே ரவை, ரவைக்கு சண்டு வற்றல் பொறுக்குவது - ஆட்டு குட்டிக்கு கொழை ஒடித்துப் போடுவது - வீட்டுக்கு விறகு கட்டிக் கொண்டுவந்து போடுவது - களத்துலே வற்றல் காய்கிற போது மழை கிழை வர்ராப்புலேயிருந்தா... ஓடி ஓடிக் கூட்டிக் குவிச்சு... மூடி வைப்பது...

இது ஒரு வகையான கொடுக்கல் வாங்கல். கூலிவேலை செய்கிற நேரம் போக மீதி நேரங்களில் இதுமாதிரியான கூலியில்லாத ஓசி உழைப்பு தருவது.

முதலாளி மவராசனும் தங்கமான குணம். 'இட்டடை முட்டடை'க்கு உதவுவார். நல்லது பொல்லதுக்கு நாப்பது ஐம்பது கடன் கொடுப்பார். கூரை வேய்தலுக்குத் தவறாமல் தட்டை தந்து விடுவார்.

கம்பந்தட்டையும் வேறு எதற்கும் பிரயோசனப்படாது. காளை மாடுகள் இதைத் தின்னாது. யாரும் விலைக்கு வாங்கமாட்டார்கள்.

ஏதோ... அரைக்குறுக்கம் கம்பந்தட்டையை அறுத்துக்கிடச் சொல்லிவிட்டார்னா, வீடு ஒழுகாம பார்த்துக்கலாம். அப்பிகை காத்திகை அடை மழைக்கு பத்திரமா அடைச்சு முடங்கிக்கிடலாம்...

கூரை வீட்டுலே ஒரு வசதி. ஓடு வேய்ந்த வீடு மாதிரி பனிக்காலத்துலே ரொம்பக் குளிர்வதும்... வெய்யில் காலத்துலே ரொம்பப் புழுங்குவதுமான தொல்லையிருக்காது. காரை வீடு மாதிரி. குளிர் காலத்துலே கதகதப்பா, கோடை காலத்துலே குளிர்ச்சியாக இருக்கும்.

முதலாளி நமக்குத் தருவார். வேற யாருக்கும் தரவா செய்வார்? நம்ம மேலே ஒரு வாஞ்சை, பிடித்தம். நாமும் நாள் தவறாமல் அவர் தோட்டத்துக்கே வேலைக்குப் போகிறோம். வேலைகள் 'நெறிபுரி'யா நடக்குற வெள்ளாமைக் காலத்துலே கூலி வேலையாளுகளுக்கு கடுமையான தட்டுப்பாடு வரும். அப்பக்கூட விலகாம, அவருக்கே வேலைக்குப் போறோம். அதனாலே அவருக்கு நம்மமேலே ஒரு பாசம்...

மாரியம்மாளுக்குள் பெருமிதம் த்தும்பியது. சக வேலைக்காரர்களுக்குக் கிடைக்காத சலுகை தனக்கு மட்டுமே கிடைப்பதில் ஒரு பெருமை.

மாரியம்மாள் நடையைத் தொடர்ந்தாள். ஓடையைக் கடந்து, இறவைத் தோட்டங்களின் பொழியில் நடந்தாள்.

கதிரறுத்து கம்பந்தட்டையும் அறுத்து முடித்துவிட்டு ஒரு புஞ்செய்யில் உழுது போட்டிருந்தார்கள். கரிசல் மண், ஈரக் கனிவோடும், கரிய மினு மினுப்போடும் புரட்டப்பட்டுக் கிடந்தது. உழவுக்குள் குறுக்காக நடந்தாள். மண்ணுக்குள் பாதங்கள் புதைந்து, ஒரு குளிர்ச்சியான சுகத்தை அனுப வித்தன.

'இன்னிக்குச் சாயங்காலம், தட்டை வேணும்னு முதலாளிகிட்டே சொல்லிடணும்' என்று மனசுக்குள் கவனமாகக் குறித்து வைத்துக் கொண்டாள்.

பருத்தி எடுத்து முடித்துவிட்டு, சாயங்காலம் வீடு திரும்பினாள். காப்பித் தண்ணியைக் கொதிக்க வைத்து விட்டு, நூறு பால் வாங்க கிளாஸுடன் சொஸைட்டிக்கு நடந்தாள்.

ஒரு மைதானம் முழுவதும் எருமைகள். கன்று களுடனும் இல்லாமலும் நெருக்கமாய் நின்றன. மாட்டுக் காரர்கள் பால் பீச்சிக் கொண்டிருக்க, வெண்டர்கள் மாட்டுக் காரர்களைக் கண்காணித்துக் கொண்டிருந்தனர்.

மைதானத்தின் ஓரத்தில் பாலை அளந்து ஊற்று கிறார்கள். அங்கும் நிறைய மனிதர்கள்... பாலை ஊற்றுகிற வர்கள்... வாங்குகிறவர்கள்... சிட்டை பதிகிறவர்கள்... சில்லறை பால் வாங்குகிறவர்கள்...

சொஸைட்டி முளைச்சு, லோனு கொடுத்த பெறகு ஊருக்குள்ளே எருமை மாடுக எம்புட்டோ பெருகிப் போச்சு. பால்மாடு வளர்க்குறது வெவசாயம் மாதிரி ஒரு தொழிலாகிப் போச்சு. காடுகள்லே ஜனங்க 'புல்லு, புல்லு' என்று அலைஞ்சு

மாயுதுக. புல்லுக்கும் ஏக தட்டுப்பாடு. இப்பவெல்லாம் புஞ்சைக்குள்ளே புல்லறுக்க சம்சாரிக நுழையவிட மாட்டேங் குறாங்க. ஊருக்குள்ளே இம்புட்டு மாடுகள் இருந்தா சம்சாரிகதா என்ன செய்வாக. பாவம்? புஞ்சை அழிமானம் ஆகுறதை சகிச்சுக்கிடவா செய்வாக...!

சம்பந்தமில்லாதவைகளை நினைவுகள் மேய, மாரியம்மாள் பாலை வாங்கிக்கொண்டு வீட்டுக்கு விரைந் தாள். கூரை வேய வேண்டியது பற்றியும், பிரிந்து கிடக்கிற அவலம் பற்றியும் முதலாளி அம்மாகிட்டே முந்தாநாள் ஜாடைமாடையாகச் சொல்லி வைத்தது ஞாபகத்துக்கு வந்தது.

'பெறகு போய், முதலாளிகிட்டே வெளிப்படையா சொல்லிரணும்' என்று காலையில் மனசில் குறித்து வைத்ததை மறுபடியும் வாசித்துக் கொண்டாள்.

வீட்டுக்குள் நுழைந்தாள். 'காப்பி'யில் பாலை ஊற்றிக் குழந்தைகளுக்கும் புருஷனுக்கும் அந்தத் தேயிலைத் தண்ணியை ஊற்றிக் கொடுத்தாள். தானும் குடித்தாள்.

ஆடிமாசக் காற்று ரொம்ப ரோஷத்துடன் வீசியது. கூரை முகட்டில் மோதி இரைந்தது. வீட்டிற்குள் கருந்தூசிகள் உதிர்ந்தன. பிய்ந்த கூரை வழியே பார்த்தாள். வானத்தில் மிதந்த மலட்டு மேகத் துணுக்குகள் தெரிந்தன.

அடுப்பில் சோறு வெந்து கொண்டிருந்தது. ஊருக்குள் பால் லாரி நுழைகிற சத்தம் கேட்டது.

இருட்டி விட்டது. பிள்ளைகள் உறங்கி விட்டனர். புருஷன் நடுத்தெருப் பக்கம் போய்விட்டான். அவள் முதலாளியின் வீட்டுக்குக் கிளம்பினாள்.

வீடு நெருங்கிவிட்டது.

வீட்டுக்குள் முதலாளியுடன் கீழத்தெரு செல்லம்மாள் பேசிக்கொண்டிருந்தாள். நிறைய எருமை மாடுகள் வைத்திருக்கிறாள். கையில் கொஞ்சம் துட்டுச் செருக்கு. மாரியம்மாளும் அவளும் அவ்வளவாக முகம் கொடுத்துப் பேசிக்கொள்ள மாட்டார்கள். சின்ன மனஸ்தாபம்.

'சரி, அவள் பேசிவிட்டுப் போகட்டும்' என்ற நினைப்பில் வீட்டோடு ஒட்டிய தொழுவத்திற்குள் மாரியம்மாள் நுழைந்தாள். கிடாய்கள் இவளைப் பார்த்து நட்புச் சந்தோஷத்தில் கட்டுக்கயிற்றை இழுத்துக் கொண்டு ஆடியது.

''அப்ப. அண்ணாச்சி, நா வரட்டா?''

''சரிம்மா... சரிம்மா...?''

முதலாளி குரலில் மகிழ்ச்சி. செல்லம்மாள் வெளியேறுகிற காலடிச் சத்தம்.

வீட்டம்மாவுடன் முதலாளி ஒரு குதூகலக் குரலில் பேசுகிற சத்தம்...

''பார்த்தீயா, எந்தக் காலத்துலேயும் இல்லாத அதிசய கூத்தாயிருக்கு. ஒட்டுக் கம்பு தான்யத்துக்கு உருப்படியா வெலையில்லை. யாரும் சீந்திப் பாக்காத இந்தக் கம்பந் தட்டைக்கு வந்த கிராக்கியைப் பார்த்தீயா?''

''ஊர் ஊருக்கு பால் சொஸெட்டிகளும், எரும மாடுகளும் பெருத்துப் போச்சு. கூளத்துக்கு தட்டுப்பாடு. புல்லுக்கு ஒரு புஞ்சையிலேயும் நுழைய முடியலே... பாவம் என்ன செய்வாக. என்னத்தையாச்சும் வாங்கிப் போட்டு எரும மாடுகளை வளர்த்தாகணுமில்லே? சரி, என்ன வெலைன்னு பேசி முடிச்சீக?''

''கேட்டுக்கிட்டு இருந்தீல்லே? ரெண்டரைக் குறுக்கம் கம்பந்தட்டைக்கும் நானூத்தறுவத்தைஞ்சு ரூவா.''

''அரைக்குறுக்கம் கம்பந்தட்டைக்கு வெலை பேசாம நிறுத்தி வச்சியிருந்துருக்கலாம்...''

''என்னத்துக்கு?''

''கூரை பிரிஞ்சு கிடக்கு. மேயணும்னு மாரியம்மா சொன்னா. நம்மளைத் தவிர வேறு யாருகிட்டே போய் கேப்பா, பாவம்!''

''ம்ம்ம்... அப்... பு...டியா''

''நம்ம தட்டையில்லாம அவள் எப்பவும் கூரை மேய்ஞ்சதுல்லே. வேற வீட்டுக்கும் வேலைக்குப் போக மாட்டா. நம்மதானே குடுத்து உதவணும்? வழமைபோல அரைக் குறுக்கத்தை அவளை அறுத்துக்கிடச் சொல்லி யிருக்கலாம்.''

''நீ சொல்றது வாஸ்தவம்தான். செல்லம்மாகிட்டே ரேட் பேசி, சம்மதம் சொல்லிட்டேன்லே? ஆமா, இதுலே என்ன வழமை வேண்டி கிடக்கு? சம்பளமில்லாமலா வேலைக்கு வாரா? முன்னாலே தட்டை கேக்க நாதியிருக்காது. குடுத்தது சரிதான். இப்போ... ஐந்நூறு ரூவாயை அடுத்து வருதே... இதை வுட்டுடவா முடியும்? வழமைக்காக வர்ர ரூவாயை விட முடியுமா, என்ன?''

தொழுவத்திற்குள் நின்ற மாரியம்மாள் இடிந்து போனாள். உள்ளுக்குள் ஒரு பகுதி சரிந்து விழுந்து நொறுங்கு வது போலிருந்தது. கண்களுக்குள் நீர் கோர்த்து உறுத்த லெடுத்தது.

'வாஞ்சை... பிடித்தம்... பாசம்' என்றெல்லாம் எவ்வளவு செருக்குடன் இருந்தாள். அவளுக்கு அவமானமாக இருந்தது.

மனசுக்குள் ஆடிமாசக் காற்று, புழுதியை வாரி இறைக்கிறது.

பால் லாரி தினம் இரண்டு தடவை ஊருக்குள் நுழைந்து பால் கேன்களை மட்டுமா தூக்கிக்கொண்டு போகிறது! இந்த வழமையையுமல்லவா அள்ளிக் கொண்டு போய்விட்டது!

சூழ்ந்து நின்ற வெறுமை அவளுக்குள் ஒரு அவலச் சோகமாக ஏறிக்கொண்டு கனத்தது.

அந்த வேதனையில் ஒடுங்கிப் போய் மௌன அழுகையோடு மாரியம்மாள் வெளியேறி, பிரிந்து கிடக்கும் கூரை வீட்டை நோக்கி அரவமில்லாமல் நடந்தாள்.

*செம்மலர் - செப்டம்பர் 1984*

★★★

# ஆசிரியரின் பிற நூல்கள்

| | |
|---|---|
| பூக்காத மாலை | (சிறுகதைத் தொகுப்பு அனந்தாச்சாரியர் அறக்கட்டளை விருது) |
| மானுடப் பிரவாகம் | |
| பூச்சுமை | (லில்லிதேவசிகாமணி இலக்கிய விருது) |
| கணக்கு | |
| தாய்மதி | ,, |
| உயிர்காற்று | (பாரத ஸ்டேட் வங்கி விருது) |
| விரல் | ,, |
| காகிதம் | |
| என்கனா | ,, |
| மனப் பூ | (தமிழக அரசின் மாநில விருது) |
| ஒரு மாலை பூத்துவரும் | (தமிழக அரசின் மாநில விருது) |
| ராசாத்தி | ,, |
| மானாவாரிப் பூ | |
| கோடுகள்...... | (குறுநாவல் தொகுப்பு) |
| தழும்பு | ,, |
| ஈஸ்வர... | |
| பாசத் தீ | |
| முற்றுகை...... | (நாவல்) |
| இனி | ,, |
| அச்சமே நரகம் | |
| ஊர்மண் | |
| ஆகாயச் சிறகுகள் | |
| முழு நிலா | |
| சிறுகதைப் படைப்பின் உள் விவகாரம் | (இலக்கியக் கட்டுரைகள்) |

கங்கை